ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

அறுபதாவது குருபூஜை

மணி விழா மலர்

10—1—1983



வெளியிடுவோர்:

சற்குருதாசன் டிரஸ்ட்

(பதிவு பெற்றது)

11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி, பெரிய காஞ்சிபுரம்-631 502.







ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

அறுபதாவது குருபூஜை

மணி விழா மலர்

10—1—1983

வெளியிடுவோர்:

சற்குருதாசன் டிரஸ்ட்

[பதிவு பெற்றது]

11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி,

பெரிய காஞ்சிபுரம்-631 502.

மலர் பதிப்புக் குழு

———

தலைவர்:

'நற்றமிழ் வித்தகர்' 'ஆட்சிச் சொற்காவலர்'
அருள் திரு. **சீ. இராமலிங்கனார்,** எம். ஏ., அவர்கள்

செயலர்கள்;

திரு. **A. வெங்கடாசலம்** அவர்கள்
திரு. **S. சண்முகம்** அவர்கள்

பொருளர்:

திருமதி. வித்துவான். **சு. மங்கையர்க்கரசி** அவர்கள்

உறுப்பினர்:

பாலகவி. திரு. **மீ. கே. வேங்கடராமன்** அவர்கள்

SRI REDDIAPPATTI SWAMIGAL
60th GURUPOOJA
DIAMOND JUBILEE SOUVENIR

Published by:
SATHGURU DASAN TRUST,
11-B, Nimandakara Othaivadai Street,
BIG KANCHIPURAM-631 502.

10—1—83. Rs. 10-00



சமர்ப்பணம்

எம் உயிருக்கு உயிராய் நின்று, எவ்விடத்தும் எந்நேரமும் திருவருளால் அணைத்துக் காத்து, எம் கண்ணாகவும், கண்ணின் மணியாகவும், மணியாடு பாவையாகவும் இருந்து ஊக்குவிக்கின்றவரும், அடியார்களின் உள்ளமாகிய பெருங்கோயிலில் அமர்ந்து அருளாட்சி புரிந்து வருபவரும், இணையிலா அருட் சட்டத்தை எல்லா உயிரும் உய்ய அருளிச் செய்தவரும் ஆகிய எங்கள் குருநாதராம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் திருவடித் தாமரைகளில் இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

சற்குருதாசன் டிரஸ்ட்
மீ. கே. வேங்கடராமன்
சு. மங்கையர்க்கரசி

இரெட்டியப்பட்டி,
10—1—1983.

பிரார்த்தனை

எல்லா உலகிலும் வாழும் எல்லா உயிர்களையும் காத்தருளும் இறைவா!


இக்கலி காலத்தில் மக்கள் படும் தொல்லைகளினின்று அவர்களைக் காத்து, நல் வழியில் திருப்பி, அருள் வாழ்வு வாழ அருள் புரிய வேண்டும்.

அடியார்களான உம் குழந்தைகள் எல்லாவித துன்பங்களினின்றும் நீங்கி, எப்போதும் உம் இணையடித் தாமரைகளின் நினைவாகவே வாழ அருள் புரியுங்கள்.

எம்மனம் உம்மையன்றி வேறெதுவும் வேண்டாத உயர்நிலையில் நின்று, உமக்கும் உம் அடியார்களுக்கும் எந்நேரமும் தொண்டுசெய்து, அதனால் வரும் இன்பத்தில் திளைக்கச் செய்யுங்கள்.

உம் அருட் சட்டம் அகில உலகமெங்கும் பரவி, அருள் நெறி காட்டி, பிறவிக் கடலைக் கடக்கத் துணையாக நிற்குமாறு தாங்கள் திருவருள் புரியவேண்டும். அகத்தும் புறத்தும் உள்ள குறைகளை நீக்கி, நிறை அருள் பெய்து, எங்களைக் காக்குமாறு வேண்டுகின்றோம்,

வருக! அருள் தருக!!



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருள் வரலாறு

ஆற்றிய அற்புதங்கள்

அருளிய சட்டம் ஆகியவை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருளிச் செய்த

அருள்நெறி காட்டும் அற்புத அருட் சட்டம்

எனும் உரைநடை நூலாக வெளிவந்துள்ளது.

விவரங்களுக்கு அணுகவும்:

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் தேவஸ்தானம்,

இரெட்டியப்பட்டி, நாகலாபுரம் அஞ்சல் 627904.

விளாத்திகுளம் தாலுக்கா, திருநெல்வேலி ஜில்லா

*

ஸ்ரீ இரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் இல்லம்

அருள்நகர், அரசூர் அஞ்சல் 607107,

விழுப்புரம் **R.M.S.**

*

ஸ்ரீ இரெட்டியப்பட்டி அருட்கொடிப் பள்ளி,

அருள்நகர், அரசூர் அஞ்சல் 607107.

விழுப்புரம் **R.M.S.**

அச்சிட்டு வழங்கியவர்கள்:

ஆர். வி. கோபால் செட்டியார் சேரிடி

ஸ்தாபகர்கள் — நிர்வாகிகள்

லக்ஷ்மி கல்யாண மண்டபம், ★ இரெட்டியப்பட்டி.

* * *

55, ஜவஹர்லால் நேரு வீதி. பாண்டிச்சேரி.

அருள்மிகு ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்
அறுபதாவது குருபூசை திருநாள்
கோடி அர்ச்சனைப் பெருவிழா
சீரும் சிறப்புமாக நடைபெறவும்,
அவர்கள் வழி நடக்கும் அன்பர்கள்
அனைவரும் நல்வழி நடந்து
பெரு வாழ்வு வாழவும் சுவாமிகளின்
அருள் திருவடிகளை வேண்டி வணங்குவோம்.



தொலைபேசி: 847189.

மூவேந்தர் அச்சகம்

31, சீனிவாசப் பெருமாள் சன்னிதி வீதி,
இராயப்பேட்டை, சென்னை-600014.

பதிப்புரை

ஸ்ரீகுருநாதர் திருவருளால் இரெட்டியப்பட்டி சுவாமிகள் சந்நிதியில் 13—10—81ல் நடைபெற்ற சுவாமிகள் ஜயந்தி விழாவில் கலந்துகொண்ட சென்னை சாரதா இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளர் உயர்திரு. S. சண்முகம் அவர்கள், விழாவிற்கு வந்திருந்த அடியார்களுடன் கலந்து உரையாடும் போது, சுவாமிகள் பெயரால் மலர் ஒன்று சற்குருதாசன் டிரஸ்ட் மூலம் வெளியிடலாம் என யோசனை கூறினர்.

சுவாமிகளின் அறுபதாவது குருபூஜை சமயம் அம்மலரை வெளியிடுவது சிறப்பாக இருக்கும் என அடியவர் பலரும் கலந்து முடிவு செய்தனர். அவ்வெண்ணமே இம்மலர் உருவாவதற்குக் காரண மாயிற்று.

இம்மலர் சம்பந்தமான செயல்களைக் கவனிக்கக் குழு ஒன்று அமைக்கப் பெற்றது எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி, கட்டுரைகள் கவிதைகள், விளம்பரங்கள் அனுப்பி உதவிய அனைவர்க்கும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் மலரை அச்சிட்டுத் தந்த கமலம் அச்சகத் தினர்க்கும், மற்றும் இம்மலர் இனிது மலர்ந்து அருள் மணம் வீச, மனம் மொழி மெய்களால் உதவிய அன்பர்களுக்கும், இம்மலரை விருப்புடன் படித்துப் பயன் பெறும் வாசகர்களுக்கும், அனைத்துக்கும் காரணமாய், இருந்து, இனிது நிறைவேறச் செய்த குருபரனாரின் பெருங்கருணைக்கும் திருவார் திரு அருட்சக்தி அன்னை அவர்களின் திருவருளுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியை சற்குருதாசன் டிரஸ்டின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

மலர் பதிப்புக் குழுவினர்

இரெட்டியப்பட்டி,
10—1—1983

ஓம்

உள்ளுறை

* கவிதை

* கவிதை   † ஆண்டவர் அருட்பாடல் பொருள்விளக்கம்

Index to Advertisers

குருநாதர் துதி

போற்றி-108

பூவுல குயிர்க ளுய்யப் போந்த புண்ணியரே போற்றி
காவலென் றமைந்தே தூய்மை கரணங்கட் கருள்வீர் போற்றி
சேவைசெய் உள்ளம் தந்து தேசுமிக் கருள்வீர் போற்றி
நாவினில் உளத்தில் ஓமை நன்றமைத் தருள்வீர் போற்றி. 4

இருடிநன் னகரிற் றோன்றும் எங்கள்நா யகரே போற்றி
பருதிபல் கோடி யென்னப் பொலிவுறும் பகவா போற்றி
சுருதிகள் அனைத்தும் சொல்லும் சூக்குமம் அருள்வீர் போற்றி
கருதுதற் கரிய ஞானக் கனலுரு வாவீர் போற்றி. 8

நித்திய கர்மம் காட்டி நிட்டையை அருள்வீர் போற்றி
சத்திய மான மார்க்கம் தரணியில் தருவீர் போற்றி
புத்தியைத் திருத்தி ஞான போனகம் அளிப்பீர் போற்றி
பத்தியம் காட்டி யீர்த்துப் பதமலர் சேர்ப்பீர் போற்றி. 12

செந்தமிழ்ப் பாடல் பாடித் தெளிவெமக் கருள்வீர் போற்றி
அந்தமொ டாதி யில்லா அருளொளிப் பிழம்பே போற்றி
பந்தபா சங்க ளோட்டிப் பரகதி யருள்வீர் போற்றி
சொந்தமென் றுற்றே யொப்பில் துணையென ஆனீர் போற்றி. 16

காரணம் கடந்து மேவும் கருணைவா ரிதியே போற்றி
பூரணப் பொருளா யெங்கும் பொலியும்பே ருறவே போற்றி
ஆரண கோடி போற்றும் அருந்தவ உருவே போற்றி
தேரினில் அமர்ந்து நன்று செலுத்துதெய் வதமே போற்றி. 20

சேவடி இதயம் சென்னி சேர்த்தருள் தேவே போற்றி
பாவடி யேட்டி லன்பைப் பதித்தருள் பரமா போற்றி
ஓவடி வினிலே யாண்டும் ஒளிரும் உத்தமரே போற்றி
தேவரும் முனிவர் யாரும் சேவிக்கத் திகழ்வீர் போற்றி. 24

ஐம்பொறி புலனை வெல்லற் கருந்திறல் அருள்வீர் போற்றி
செம்பொரு ளுணர்த்தி ஞானத் தெளிவருள் தேசே போற்றி
செம்பொனாய் மணியாய் அன்பர் இதயத்திற் செழிப்பீர் போற்றி
இம்பர்மா ஞாலத் துற்றெம் இருவினை பொடித்தீர் போற்றி. 28

அப்புமண் அனல்கால் வானும் அமைந்து காத்தருள்வீர் போற்றி
ஒப்பில்பே ருண்மையன்பின் உருவமா யொளிர்வீர் போற்றி
செப்பரு பரமானந்தத் திருநடம் செய்வீர் போற்றி
கைப்பொருளினும் மேலான மெய்ப் பொருளாவீர் போற்றி. 32

அகம் புறம் பேணும் மேலாம் அரணென அமைந்தீர் போற்றி
சகம் புகழ் குருவாய்ப் போந்தெம் தாபங்கள் தவிர்த்தீர் போற்றி
யுகம்பல கடந்தும் மேவும் ஓவில் பேரறிவே போற்றி
சுகமெலாம் என்றுமீயும் தூய்மை சால் பதியே போற்றி. 36

எவ்வுரு வினிலும் மேவி இன்பமூட் டிறையே போற்றி
ஒவ்வொரு பொருளி னுள்ளும் ஒளிர் பரம்பொருளே போற்றி
எவ்வணு வுள்ளும் பூர்ண மெனப்பொலி இறையே போற்றி
எவ்வொரு கணத்து மெம்மை இனிது பேணீசா போற்றி 40

அன்னமும் உடையும் செல்வ வளமுமீந் தாள்வீர் போற்றி
பன்னரும் பரமானந்த போகமும் அருள்வீர் போற்றி
உன்னரு நிலைக ளன்பர்க் குவந்தருள் புரிவீர் போற்றி
கன்னலாய்ப் பாகாய்த் தேனாய்க் கருத்தினுள் இனிப்பீர் போற்றி. 44

கற்றவர் களுக்கும் ஞானக் கல்விகற் பிப்பீர் போற்றி
நற்றவத் தவர்க்குள் ஞானப் பேரொளி யாவீர் போற்றி
பற்றெலாம் தவிர்த்தோர் பற்றும் பற்றெனப் படர்வீர் போற்றி
அற்றமில் சுற்றமாயெம் அகம்திகழ் அரசே போற்றி 48

காலம்கற் பனைகட்கெட்டாக் காட்சிகாட் டிடுவீர் போற்றி
மூலமா மறையை யெம்முள் முழக்கருட் குருவே போற்றி
தூலசூக் குமங்கள் யாவு மானசுந் தரரே போற்றி
ஞாலமீ தின்பமோங்க நண்ணுசி ரியரே போற்றி. 52

இரவொடு பகலில்லாத இடத்தினிற் பொலிவீர் போற்றி
கரவணு வேனும்காணு உளம் திகழ் கனிவே போற்றி
பரவுசீ ரடியார்க் கின்பப் பயனென அமைவீர் போற்றி
மருவுறு ஞானானந்த வாழ்வருள் மணியே போற்றி. 56

அக்கர மாகி யெங்கும் அருள்மணம் விரிப்பீர் போற்றி
சக்கர மாகி யெம்முள் சமைந்தசாத் விகரே போற்றி
திக்கனைத் தினும் சீரோங்கத் திகழும்தே சிகரே போற்றி
எக்கணத் தினும்நீங் காதெம் இதயம்வாழ் ஏகா போற்றி. 60

மந்திர மாகியுள்ளே மாசகற் றொளியே போற்றி
தந்திர மாகிப்போற்றும் தகவருள் பவரே போற்றி
யந்திர மானதேகம் அளித்தியக் கிடுவீர் போற்றி
முந்தைவல் வினைகள் யாவும் மோசிக்கும் மோனீ போற்றி. 64

அருளெனும் உருவிற் போந்த ஆன்ம ரட்சகரே போற்றி
இருளெனும் மாயைநீங்க எழிற்கண்ணேக் கருள்வீர் போற்றி
மருளறுத் தருட்பே ராட்சி மாண்புடன் புரிவீர் போற்றி
தெருளளித் தெமையாட் கொண்ட தேசிகோத் தமரே போற்றி. 68

அற்புதம் அனந்தங் கோடி இயற்றும் ஆண்டகையே போற்றி
சிற்பர ஜோதியாகித் திகழ் ஜிதேந்த்ரியரே போற்றி
கற் பினுக் கணியாய் மேவும் அடியருட் கலந்தீர் போற்றி
பொற் பமை யுளம்தந் தெம்மைப் புரந்தருள் பொலிவே போற்றி 72

இம்மைநன் மறுமை யாவு மீந்தருள் எந்தாய் போற்றி
செம்மை யெல் லாமும் நல்கித் தெருட்டியாள் பவரே போற்றி
மும்மைவெம் மலம் மோசித்து மோனவீ டருள்வீர் போற்றி
மம்மரெல் லாமும் நீக்கி மாணருள் புரிவீர் போற்றி. 76

ஒன்றிறை யென்றெல் லோர்க்கும் உணர்த்தியாட் கொள்வீர் போற்றி
நன்றிது வென்னச் சட்டம் ஞாலத்துக் கருள்வீர் போற்றி
என்று மெங்கணும் திகழ்ந்தெவ் வுயிர்க்குமின் பருள்வீர் போற்றி
குன்றலில் லாப்பே ரன்பைக் கொடுத்தருள் குருவே போற்றி. 80

ஆதர வாகி யெங்கள் அகத்தொளிர் அதிபா போற்றி
போதொரு சிறிதும் வீணிற் போக்கிடேல் என்பீர் போற்றி
சாதுசங் கத்தின் தூய தலைவராய்த் திகழ்வீர் போற்றி
ஏதோரு பிழையும் நோக்கா தெமக்கருள் புரிவீர் போற்றி. 84

காமனை வெல்லச் செய்யும் கருணைமிக் குடையீர் போற்றி
பூமனின் செயலோங் காமற் புரிந்தருள் பூபா போற்றி
ஏமனை இரிந்தோ டச்செய் இணையிலாத் திறலே போற்றி
ஆமெனப் பிணியெல் லாமும் அகற்றுபே ராண்மை போற்றி 88

அமைதியை எவர்க்கும் நல்கி ஆனந்தம் அருள்வீர் போற்றி
சுமையென உள்ள யாவும் அகற்றியாள் தூயா போற்றி
இமையவர் வியப்ப எம்மை இனிதுபே ணிடுவீர் போற்றி
உமைமற வாமற் போற்றி உய்யச்செய் தருள்வீர் போற்றி. 92

பத்தியாம் பயிரைநன்று பார்மிசை வளர்ப்பீர் போற்றி
சத்தியெல் லாமும் அன்பர்க் கீந்தருள் சாதூ போற்றி
சித்தியெத் தனையும் அன்பர் திறங்கண்டு தருவீர் போற்றி
முத்தியாம் திருவை நல்கும் மோனமா முதலே போற்றி. 96

அமிதமாய் அடியாரைச் சேர்த் தருளறி வளிப்பீர் போற்றி
சுமுகமாய் அடியார்வாழத் துணையிருந் தருள்வீர் போற்றி
அமுதபானத்தை யன்பர்க் கருத்தும்அற் புதரே போற்றி
மமதைமாய்த் தருள்நீர் பாய்ச்சி வான்பயிர் விளைப்பீர் போற்றி. 100

பாத்திரம் திருத்தி மேலாம் பக்குவம் செய்வீர் போற்றி
தீர்த்தம் நற்றிருநீ றீந்து செம்மைசெய் தருள்வீர் போற்றி
மூர்த்திகள் அனைத்து மாகி முழுநலம் புரிவீர் போற்றி
வார்த்தைகண் டறியாத்தூய வான்பொரு ளுருவே போற்றி. 104

நேத்திர நடுவார் ஞான நேத்திர வொளியே போற்றி
சூத்திரம் காட்டி யீர்க்கும் சூக்குமப் பொருளே போற்றி
யாத்திரை மார்க்கம் காட்டி இன்பவீ டருள்வீர் போற்றி
தோத்திரம் புரிவோர் துன்பம் தீர்த்தின்ப மளிப்பீர் போற்றி· 108

தேவர்கள் மூவர்கள் காணாத் திருவடி
சிதம்பரத்தில் நடிக்கும் திருவடி
பாவனைக் கெட்டாப் பரமன் திருவடி
பக்தர்கள் தேடிப் பிடிக்கும் திருவடி

(சுவாமிகள்)

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

அரும்பெருந்துணையாம் அருட் குருபரனர்

பரம்பொருளின் திருவுள்ளம்

உலகம் தோன்றிய நாள்முதல் உயிர்கள் எப்படி வாழ வேண்டும் என நல்வழி காட்டிச் சென்ற அருளாளர்கள் பலராவர். அவர்கள் அனைவரும் கடைப் பிடித்ததும், உலகுக்கு உணர்த்தியதும் அருள்நெறியே ஆயினும், அவர்கள் தோன்றி வாழ்ந்த காலம் நாடு, இனம், மொழி, சூழ் நிலை, பழக்கவழக்கங்கள் வழிபாட்டுமுறை முதலியவற்றிற்கேற்ப, அவ்வருள் நெறியில் ஒரு சில மாறுபாடுகள் இருக்கலாம்.

ஒவ்வொரு அருளாளரின் போதனை களையும் பின்பற்றி நடந்தவர் ஒவ்வொரு குழுவாக விளங்கலாயினர். அவ்வக் கொள்கைகளும், பழக்க வழக்கங்களும் ஒவ்வொரு மதமாய் அமைய நேர்ந்தது. எல்லா மதங்களும் முடிவில் ஒரே குறிக்கோளை உடையன என்னும் பேருண்மை சாதாரண மக்களால் உணர்ந்து கொள்ள இயலாமையாலும், ஒவ்வொரு மதத்திலும் உயர்ந்த ஞானிகள், அருளாளர்களின் காலத் திற்குப் பிறகு. நாளடைவில் அவ்வுயர் கொள்கைகளில் மாசு படிந்து, பேருண் மைகளை மறைக்க நேர்ந்தமையாலும், ஜாதிச்சண்டைகளும், சமயப் பூசல்களும், உயர்வு தாழ்வு எனும் சச்சரவுகளும் தோன்றலாயின.

அதனுல், மக்களினம் உண்மை நெறி உணர்ந்து, அருள்வாழ்வு வாழ இயலாமல் திகைக்க நேர்ந்தது. இத்தகைய சூழ் நிலையில், வடநாட்டில் இராமகிருஷ்ண பரமஹம்ஸரும், தென்னுட்டில் இராமலிங்க சுவாமிகளும் தோன்றி, சமரச சன்மார்க்கத்தை விளக்கி அருளினர்.

தூய்மையும் மேன்மையும் எளிமையும் கலந்த ஒரு பொதுநெறி தேவை ஆயிற்று. அதனை உலகுக்கு உணர்த்தி, மக்களின் உள்ளத்தில் உண்மையை விளக்கி, இவ்வுலகில் நோயற்ற, துயரற்ற, அமைதி யான இன்ப வாழ்வாற்றவும், இனி பிறவாத பேரின்ப முத்தியெய்தவும், வழி வகுத்தருள வேண்டிய அவசியம் ஏற் பட்டது அவ்வழி எல்லா இனத்தினர்க்கும் எல்லா மொழியினர்க்கும், எல்லா நாட்டினர்க்கும், எல்லா வயதினர்க்கும் பொதுவானதாகவும், கற்ருர் கல்லார், செல்வர் வறிஞர், என்ற பாகுபாடின்றி எவரும் எளிதில் கையாண்டு உடல்நலமும், உளநலமும், உயிர் நலமும் எய்தி, அருள் நிலையில் உயர்வுற்றுப் பேரின்பம் துய்க்கத் தக்கதாகவும், திகழ வேண்டியதாயிற்று.

அத்தூய அருள்நெறியில் நாளடை வில் மாசு படிந்து, உண்மையை மறைக் காமல் இருக்க, அந்நெறியைக் கடைப் பிடித்து ஒழுகும் அடியார்களுக்கு எக் காலத்தும் உறுதுணையாய் அமைந்து, உள்ளும் புறமும் ஒருங்கே காத்து. வாழ் நாளை அவப் பொழுதாக்காமல், தவப் பொழுதாக்கச்செய்து, உலகியல் முறை யிலும், அருளியல் முறையிலும், தவறு

நேரா வண்ணம் பாதுகாத்து, நல்வழியில் நடத்திச்சென்று, பேரின்ப முத்தி கூட்டு விக்கத்தக்க பேரருளாளரை இப்புவிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருள் திருவுளம் பற்றினர்

பரம்பொருளின் தனிப்பெருங்கருணை யும், பாரதநாட்டின் உயர்தவப்பயனும், பக்குவம் மிக்க அடியார்களின் நல்வினைப் பயனுமே இதற்குக் காரணமாய் இருக்க லாம் என நாமெல்லாம் உணர்ந்து போற்ற வேண்டியவர்களாயுள்ளோம்.

சுவாமிகளின் அவதாரம்

செந்தமிழ் நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்தி குளம் வட்டம் நாகலாபுரத்தை அடுத்த 'இரெட்டியப் பட்டி' என்னும் திருத்தலத்தில், சைவ வேளாளர் மரபில், அன்பும் அறமும் பண்புறப் பேணி இல்லறம் நடாத்தும் வீரபத்திரப்பிள்ளை, ஆவுடையம்மை எனும் இருமுது குரவரின் இன்னருட் சேயாய் 'சுப்பிரமணியம்' எனும் திருப்பெயரோடு (16—9—1856) நள ஆண்டு புரட்டாசி இரேவதியில் சுவாமிகள் இவ்வுலகம் உய்யும் பொருட்டு அவதாரமாயினர்

இளமை

சுவாமிகள் இளமையிலேயே தெய்விகம் மிகுந்தவராகவும், அருட்சித்தி கள் பல வாய்க்கப் பெற்றவராகவும் திகழ்ந் தனர் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தமிழ் பயின்று விவசாயத்தில் ஈடுபட்டனர். அருளாளராகிய இவர் திருவடி வைத்ததும் நிலம் பல மடங்காக விளைவளித்தது. 'சுப்பிரமணியம் கைராசி உடையவன்' என உற்றாரும் ஊராரும் புகழ்ந்தனர்.

ஏழைகள்பால் இரக்கம்

புகழை விரும்பாப் பூரணராகிய சுவாமிகளின் திருவுள்ளம் ஏழைகள்படும் இன்னலைக் கண்டு இரக்கமுற்றது நாள் முழுதும் உழைத்தும் அரை வயிற்றுக்கும் உணவின்றி வாடும் ஏழைமக்களுக்கு உதவ எண்ணினர். தூத்துக்குடிக்கு வண்டி கட்டிச் சென்று உணவுப் பொருட்களை வாங்கி வந்து, கொள்விலைக்கே விற்று உதவிபுரிந்தனர். இது கண்ட பெற்றோரும் மற்றோரும் 'இது பயனற்ற பிள்ளை' என்றனர்.

மதுரை வாழ்க்கை

இஃதறிந்த சுவாமிகள் யாரும் அறியாதவண்ணம் ஊரைவிட்டுப் புறப் பட்டு மதுரை சென்றனர். வைகை நீராடி, அங்கயற்கண்ணியின் அருள் பெற்று, தாம் ஆற்ற வந்த பணியைத் தொடங்க உன்னினர். உலக வாழ்வாற்ற ஒரு தொழிலில் அமர வேண்டுமென்றும், அதற்கேற்ற இடம் சத்தியம் தருமம் இவற்றிற் பிறழாது வாழ்வாற்றுவோர் இடமாக இருத்தல் வேண்டுமென்றும், உன்னி, விசாரித்து, இஸ்லாமியர் கடை ஒன்றில் கணக்குப்பிள்ளையாய் அமர்ந்தனர்.

நாள் தோறும் விடியல் நான்கு மணிக்கு வைகை நீராடி, ஒரு முன்னவனூர் கோயிலில் வழிபாடாற்றி. நிட்டையில் அமர்வர். ஞான மயமான இறைவன் திருவடிகளில் சிந்தையை ஒன்ற வைத்து இன்புறுவர். இவரது திருமுகப் பொலி வையும், விழிகளில் திகழும் கருணையையும், ஒழுக்கத்தின் விழுப்பத்தையும், வழி பாட்டின் சிறப்பினையும், பலரிடமும் அன்புடன் பழகும் பான்மையையும் அறிந்த மதுரை மக்கள் இவரை "இரெட்டியப்பட்டி சுவாமி" எனப் போற்றலாயினர்.

திருமணம்

இரெட்டியப்பட்டியில் இவரைக் காணமல் அங்கும் இங்கும் தேடி அலைந்த தந்தையாரும், உறவினரும் இவர் மதுரையில் உள்ளதைக் கேள்வியுற்று, வந்து ஊருக்கு வருமாறு அழைத்தனர். இவர் மதுரை விட்டுச் செல்ல மறுத்து விட்டனர். பிறகு இவர் தம் பெற்றோர்

எட்டையாபுரத்தில் பெண் பார்த்து, மாரியம்மை என்ற நங்கையை மணமகளாக்க நிச்சயித்து, மதுரை மாநகரில் திருமணம் நடத்தி வைத்தனர். சுவாமிகள் பற்றற்ற உள்ளம் உடைய வராயினும் இறைவன் திருவுளப்பாங்கின் வண்ணம் இல்லறத்தாராயினர்.

பரிபூர்ணர் திருக்காட்சி

சுவாமிகள் ஒரு நாள் விடியற்காலை வைகை நதியின் தென்கரையில் மாபெருஞ் ஜோதி ஒன்றைக் கண்டு விரைந்து சென்று, அதில் விநாயகர் திருவுருவம் தோன்றக் கண்டு, உளம் மிக உருகி, ஆனந்தக் கண்ணீர் பெருகத் தழுவிக் கொண்டு தம் வசமிழந்தனர். பின்னர் நினைவு வந்தபோது, தம்கழுத்தில் ஒரு மலர் மாலை இருப்பதையும், ஜோதி வடிவிற் காட்சியளித்த விநாயகப் பெருமான் ஒரு கற்சிலையாக மாறி எதிரில் அமர்ந்திருப்பதையும் கண்டு, அருகில் இருந்த ஒரு அரசமரத்தடியில் அம் மூர்த்தியை எழுந்தருளச் செய்து; **'பரிபூர்ண விநாயகர்'** எனத் திருப்பெயர் சூட்டி, வைகை நீராட்டி, நறுமலர் சாத்தி, அருட்பாடல்கள் பாடி உருகி வழி பாடாற்றினர். இஃதறிந்த மதுரை மக்கள் திரள் திரளாய் வந்து வைகை நீராடி, விநாயகரைச் சேவித்து, சுவாமி களிடம் திருநீறு பெற்று, பிணிகளும் குறைகளும் நீங்கி, நிறைநல மெய்தி மகிழ்ந்தனர்.

பம்பாய் வாணிபம்

சுவாமிகள் இஸ்லாமியர் கடையில் கணக்கெழுதி வந்ததால், இந்துஸ்தானி மொழியில் பயிற்சி பெறவும், அவர்களின் வேதமாகிய குரானின் உண்மைகளை உணரவும் தக்க வாய்ப்பு உண்டாயிற்று அங்காடியரின் விருப்பத்திற்கிணங்க சுவாமிகள் பம்பாய் சென்று, ஓராண்டு காலம் தங்கி, கப்பல் வாணிபம் புரிந்து, நிறைபொருளீட்டி, அங்காடியர்க்குத் தந்து, தாம் பற்றற்றவராகவே வாழ்ந்தனர்.

மதுரையிலும் பாளையங்கோட்டைக் கடையிலும் வாணிபம் மிகமிகப் பெருகிய தால் குவிந்த கணக்குகளை சுவாமிகளே சீராக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

பம்பாயில் ஒருநாள் சுவாமிகள் நிட்டையில் ஆழ்ந்திருக்கையில் அங்கயற்கண்ணம்மை தோன்றி, 'நம்மை மறந்தனையோ?' என வினவி மறைந்தனர். 'அம்மா! உம்மை மறக்க இயலுமா? விரைவில் வந்து சேருகிறேன்' எனக்கூறிய வண்ணம் சுவாமிகள் நிட்டையிலிருந்து எழுந்தனர்.

சர்வ சமய சமரசம் காணல்

மதுரைக்கு வரும்படி அங்காடியர் செய்தி அனுப்பியதால், சுவாமிகள் மதுரைக்குப் பயணமாயினர். வழியில் சென்னை வந்து அங்கு நடைபெறும் நீதி மன்றங்களையும், சட்டங்கள் செலாவாணி யாகும் சிறப்பினையும் கண்டனர். கிறித்தவப் பாதிரிமாருடன் தொடர்பு கொண்டு, கிறித்தவ மதத்தின் உயர்ந்த கொள்கைகளை உணர்ந்தனர், எல்லாச் சமயங்களும் ஒரே முடிவைத்தான் விளக்கு கின்றன என்னும் தீர்மானத்திற்கு வந்தனர். பின்னர் மதுரை வந்து சேர்ந்தனர்.

பரிபூர்ணர் திருக்கோயில் அமைப்பு

சுவாமிகள் மதுரை வந்த செய்தி யறிந்த மக்கள் திரண்டு வந்து சுவாமி களைச் சேவித்து, திருநீறு பெற்றுப் பெரு மகிழ் வெய்தினர். அடியவர்கள் பரிபூர்ண விநாயகர்க்குத் திருக்கோயில் அமைத் தனர். சுவாமிகள் உடனிருந்து திருப் பணியை இனிது முடிக்கச் செய்து, திருக் குட முழுக்கு செய்வித்தனர்.

அருந்தவ நாட்டம்

அன்பர் கூட்டம் மேலும் பெருகி, பிணி தீர்ந்து, வினை தீர்ந்து, குறை தீர்ந்து, நிறைநலம் எய்தினர். இது கண்ட சுவாமி களுக்கு ஏழை எளிய மக்கள் பிணியாலும், வினையாலும், வறுமையாலும் வாடும் நிலையை அறிந்து இவர்களை இந்நிலையி லிருந்து விடுவித்து, நல்வாழ்வு வாழச் செய்து, உடையவன் கருணைக்கு உரியவர் ஆக்கவேண்டும்; பேரின்பமுத்தி பெற் றுய்யச் செய்ய வேண்டும்; என்ற பேரவா மிதுவதாயிற்று. அதற்கேற்ற மேலான அருள்நிலை எய்த வேண்டும்; அருந்தவத்தை உடனே மேற்கொள்ள வேண்டும் என்ற பேரூக்கம் இறைவன் திருவருளால் சுவாமி களின் திருவுள்ளத்தில் மிகமிகத் தீவிர மாய்த் தோன்றலாயிற்று.

புறச்செயல்களை ஒடுக்கி, உள்நாட்டம் உடையவராய், உணவும் பேச்சுமின்றி, மவுனம் ஏற்றனர். அசையாது அமர்ந்து இருவிழி மூடி நிட்டையில் ஆழ்ந்தனர். கடையின் திண்ணையில் அமர்ந்தபடி அருந் தவத்து ஆழ்ந்துள்ள சுவாமிகளைக் காணக் கூட்டம் பெருகியது. அதனால் வியாபாரத் துக்கு இடையூறு உண்டாகும் என அஞ்சிய அங்காடியர் சுவாமிகளை வேறிடத்து அமர்த்த எண்ணினர்.

பொதிகைக் குகைத் தவம்

இதனை உணர்ந்த சுவாமிகள், யாரும் அறியாவண்ணம் ஒரு நாள் இரவில் மதுரை விட்டுப் புறப்பட்டனர் செந்தூர் சென்று, குற்றாலம் சேர்ந்தனர். சண்பகாதேவி அருவிக்கருகில் உள்ள குகை யொன்றில் அமர்ந்து அருந்தவத்து ஆழ்ந்தனர். பன்னிரண்டு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தனர். அப்பெருந் தவத் தின் பயனாகப் பரிபூர்ணப் பெருமானின் அருட்காட்சி கண்டனர். விசுவரூப தரிசனம் பெற்றனர்.

அருள் வரம் பெறுதல்

தாம் கண்ட அவ்வருட் காட்சியை எல்லா உயிரும் காண வேண்டும் என்றும் எல்லா உயிரும் திருவருள் துணைகொண்டு அருள் வாழ்வாற்ற வேண்டும் என்றும், பேரின்ப முத்தியெய்த வேண்டுமென்றும், அதற்குரிய உயர்நெறியை அருள வேண்டுமென்றும், அச்சிறந்த நெறியைக் கடைப்பிடிக்கும் அனைத்துயிரையும் காத்தருள்வதாக உறுதி மொழியருள வேண்டுமென்றும் வரம் கேட்டுப் பெற்றனர்.

அருளரசாட்சி

தவம் முடித்துக்கொண்டு பொதிகை விட்டுப் புறப்பட்ட சுவாமிகள் நாடு முழுதும் சென்று, பக்குவம் பெற்ற அடியார்களை ஆட்கொண்டு, அருட் சட்ட நெறியை உபதேசித்து, கடைப் பிடிக்கச் செய்து, அரும்பெருந் துணையாயிருந்து, அருளரசாட்சி புரிந்து வருகின்றனர்.

அருட்சட்ட நெறியின் அம்சங்கள்:-

1 விடியல் நான்கு மணிக்குப் பச்சை நீரில் மூழ்குதல்

2 குடிக்கவோ, குளிக்கவோ வெந்நீர் தவிர்த்தல்.

3 தெய்வ நம்பிக்கையுடன் தினசரி வழிபாடாற்றல்.

4 ஒருவனே தெய்வம் என்று தீர்மானித்தல்.

5 பிற மதங்களை நிந்திக்காதிருத்தல்

6 மரக்கறி உணவையே கொள்ளுதல்.

7 பஞ்சமா பாதகம் தவிர்த்தல்.

8 நோயுற்றபோது, மருந்து அருந்தாமல், காலை மாலை பச்சை நீரில் மூழ்கி, திருநீறணிந்து, திருநீறும் துளசியும் இட்ட தீர்த்தம் பருகி, அருள் நினைந்துருகி, அருள் துணைகொண்டே நோய் நீக்கம் பெறுதல்.

9 ஜோதிடம், மாந்த்ரீகம்நாடாமை.

10 இந்தத் தீது அகன்ருல் இந்த நன்மை கைகூடினுல், தெய்வத்திற்கு இன்னது செய்கிறேன் எனப் பிரார்த்தனை செய்து கொள்ளாமை.

11 அற மன்றம் அணுகாமை.

12 இறந்தவர்க்கு இரங்காமல் 'எல்லாம் இறைவன் செயல்' என்ற எண்ணம் கொண்டு தீக்காப்பு(தகனம்) செய்யாமல், மண்காப்பு (சமாதி) செய்வித்தல்.

13 வெள்ளிக் கிழமை தோறும் ஒரு வேளையாவது உணவைக் குறைத்துக் கொண்டு, விரதம் இருந்து பழகுதல்.

14 நாள்தோறும் சிறிது நேரமாவது இறையருளை நாடி, எந்தப் பிற எண்ணமும் இன்றி அமைதியாக அமர்ந்து அருள் நிட்டை பேணி இறைவன் திருவடி மலர்களில் சிந்தையை ஒன்றச் செய்தல்.

15 உடல், பொருள், ஆவி, அனைத்தையும் உடையவன் திருவடி மலரில் மனப்பூர்வமாக ஒப்படைத்து,' எல்லாம் இறையருட் செயல்' என்ற பூர்ண நம்பிக்கையுடன், தன் முனைப்பு சிறிதும் இன்றி, அச்சமும், ஐயமும் அணுவளவுமின்றி, அமைதியான முறையில் அருள்வாழ் வாற்றப் பழகுதல்.

16 இறைவன் திருவருள் துணை கொண்டு சட்ட நெறியில் இருப்பதையும், அதனுல் விளையும் நன்மைகளையும், ஆடம்பரமாகவோ, பிறர் மெச்சிக்கொள்ளவோ, வெளியிட்டுக் கூருமல், தற்பெருமையோடு நினைக்காமல், அடக்கத்தோடும், ரகசியமாக உளத்துட்கொண்டு, உடையவன் கருணையைப் போற்றி உய்தல் வேண்டும்.

அருட்சட்டம் பேணும் அடியவர்கள் தவறு புரிந்தால், சுவாமிகள் தண்டனை தந்து திருத்தியருள்கிருர்.

இவ்வாறு அமைந்துள்ள சர்வ சமய சாரமான அருட்சட்டச் செந்நெறியை உண்மையன்போடும், அருள் நாட்டத்தோடும் பேணி வந்தால், 'வேலைக்கேற்ற கூலி' என்னும் பழமொழிக்கேற்ப, நாம் பக்தியுடனும், ஊக்கத்துடனும் உண்மையாகக் கடைப்பிடிக்கும் அளவிற்குக் கை மேல் பலன் கண்டு இன்புறலாகும் என சுவாமிகள் அருளியுள்ளார்கள். நாம் சிறிதளவு முயன்ருலும், இறைவன் நமக்கு நிறை பயன் அருள்வதை நாம் கண்கூடாகக் காணலாம்.

சுவாமிகளின் உயர் பண்புகள்

சுவாமிகளிடம் நாம் காணும் உயர்ந்த பண்புகள் பலவாகும். அவற்றில் ஒரு சிலவற்றையாவது உளம் கொண்டு போற்ற வேண்டியது நம் தலையாய கடமையாகும். அருளாளரிடம் அமைந்திருக்க வேண்டிய எல்லா இலக்கணங்களும் சுவாமிகளிடம் பூர்ணமாக அமைந்திருக்கக் காணலாம்.

சுவாமிகளின் தெய்விகம் திகழும் திருமேனியமைப்பும், கருணை ததும்பும் திருநயனங்களும், சுடர்விடும் திருமுடியும், பெருந்தாடியும், அருட்பெருந் திருவை வாரி வழங்கும் நீள்திருக்கரங்களும், பரஞானம அபரஞானம் எனப் பொலியும் திருவடி மலர்களும், அன்பர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அற்புத வசீகரத் தன்மையுடன் திகழும்.

குழந்தையின் குணமும், கனியினும் இனிய, அமுதினும் சிறந்த அருள் வாசகமும், குழலினும் இனிய யாழினும் உயர்ந்த அருளிசை நயமும், அன்பரும், அடியரும், அறிஞரும், அருளாளரும் போற்றத்தக்க இன்பமிக்க நல்லொழுக்கமும் அருந்தவச் சீலமும், அருள்நிறை வாழ்வும், கைம்மாறு கருதாக் கடமையும், கடையேற்றும் உறுதியும், அடியார்களின், அன்பர்களின் இதயம் விட்டகலாது என்றும் நிலைத்து நின்று இன்பம் தருவன ஆகும்.

அடியவர் பலர்க்கும், ஆருயிர்த்திரட்கும் அன்னையாய், தந்தையாய், ஆசானுய், ஆரியனுய், உயர்ந்த நன்னட்பாய், ஒப்பில் பேருறவாய், அரும்பெருந் துணையாய், அருந்தவப் பயனுய், அருட்பெருந்தெய்வமாய் விளங்கும் சுவாமிகள் (1923) துந்துபி ஆண்டு மார்கழித் திங்கள் 28உ சுக்கிர வாரம், ஏகாதசி திதி, அனுட விண்மீனில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி, அருளரசாட்சி புரிந்து வருகிருர்கள்.

குருபூஜை மணிவிழா

சுவாமிகளின் அறுபதாவது குருபூஜை மணிவிழா நினைவாக, அப்பெருமானின் திருவருள் துணைகொண்டு, இவ்வருள் மலர் வெளியிடப் பெறுகிறது.

அவனி உய்ய அவர்கள் அருளியுள்ள அருட் சட்டத் திருநெறியை உயிர்களாகிய நாம் அனைவரும் அன்புடன் பேணி, அருட்பயன் பெற்றுய்ய, அப்பெருமானின் தனிப்பெருங் கருணை துணை புரிய வேண்டுமெனப் பிரார்த்திப் போமாக.

குருபரனுரின் அருள் வரலாற்றில் காணப் பெறும் அரும் பெருஞ் சிறப்புகள்

1 மதுரை மாநகரில், வைகையாற்றின் தென்கரையில் சுவாமிகட்கு அருட்காட்சி தந்து ஆட்கொண்டருளிய பரிபூர்ண விநாயகர் சிலாரூபமாக நிரந்தரமாய் எழுந்தருளி, இன்றும் எல்லா உயிர்க்கும் அருள் பாலித்து வருகிருர்.

2 எல்லா உயிரும் இவ்வுலகில் தூய நல்ல அருள் வாழ்வாற்றி, பேரின்ப முத்தி பெற்றுய்ய வேண்டும் எனக்கோரி, சுவாமிகள் குற்றுல மலைக் குகையில் பன்னிரண்டு ஆண்டுகள் அருந்தவம் ஆற்றி, பரிபூர்ணப் பெருமானிடம் அருள்வரம் பெற்றுள்ளனர்.

3 இல்லறத்தாரும் அந்நிலையிலிருந்தே முத்திப் பேற்றையும் அடைய சுவாமிகள் வழிகாட்டியருள்கின்றனர்.

4 இம்மையில் தூய அருள் வாழ்வாற்றி, பரகதியாகிய முத்திப் பேற்றையும் அடையத்தக்க அருள் நெறியை இனம் மொழி, மதம், நாடு, வயது, அறிவு செல்வம் என்ற எவ்வகையான பேதமுமின்றி எக்காலத்துக்கும் ஏற்ற முறையில் அனைத்துயிர்க்கும் பொதுவாக சுவாமிகள் வகுத்துத் தந்துள்ளனர். சட்டம் மீறினுல் தண்டனை தந்து திருத்தியருள்கின்றனர்.

5 அடியவர்க்கும் அன்பர்கட்கும் அரும்பெருந் துணையாயிருந்து ஊக்கி இன்னல் நீக்கி இன்பம் ஊட்டி பேணுகின்றனர்.

6: அவதாரமான அதே இடத்தில் அடக்கமாகித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளனர்.

7. அடக்கமான பின்பும், முன்னிலும் பன்மடங்கு பெருங்கருணையோடு, என்றும் வழிகாட்டிப் பேணிப் புரக்கும் இன்னருட் பெருமானுக இலங்குகின்றனர்.

இவையனைத்தும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருள் வரலாற்றில் காணப் பெறும் தனிப்பெருஞ் சிறப்புகளாகும்.

கோபம் செய்யாதே—மனமே
கோபம் செய்யாதே

(சுவாமிகள்)

அடியனை ஆண்டருளே

அருள்மலரே அருள்மணமே அருளெனுநன் னீரே
அருட்சுவையே அருட்கனலே அருளெனுமோ ரொளியே
அருட்காற்றே அருட்சுகமே அருள்வானே அதிலார்
அருளொலியே அருள்நிறைவே அருளுருவாம் பொருளே
அருளழகே அருள்விரிவே அருளெனுமோ ரமுதே
அருட்பொறியே அருட்புலனே அருட்பொலிவார் அகமே
அருளரசே அருளுறவே அருட்டுணையாம் அறிவே
அருள்நிலனே அருள்விளைவே அடியனையாண் டருளே. 1

அன்புருவே அன்பழகே அன்பெனுநற் பண்பே
அன்புரையே அன்புணர்வே அன்பிலுறை உயிரே
அன்பொளியே அன்பொலியே அன்பெனுநன் மலரே
அன்பெனவோங் கிடுமணமே அன்பெனுநற் றேனே
அன்பெனுமொண் கதிரவனே அன்பெனும்வெண் மதியே
அன்புவிணில் அன்பொளிகால் அன்புடுவின் திரளே
அன்பெனும்நற் கனியில்நிறை அன்பமுதச் சுவையே
அன்புறுசெந் நெறியையளித் தடியனையாண் டருளே. 2

அன்பெனுமோர் குடிலிலமைந் தாண்டருள்செய் யரசே
அன்பெனுமோர் மணியினுளே அமைவுறுபே ரொளியே
அன்பெனுமோர் கைப்பிடியுள் ளார்ந்திடுமா மலையே
அன்பெனுமோர் குண்டிகையுள் ளடங்குதடங் கடலே
அன்பெனுமோர் சிற்றணுவுள் ளமைவுறு பேருருவே
அன்பெனுமோர் மணியினிலே அமைவுறுபே ரொலியே
அன்பெனுமோர் வலையினுளே அகப்படுமெய்ப் பொருளே
அன்புருவோ டகத்தமர்ந்தே அடியனையாண் டருளே. 3

அறிவுருவா கியபொருளே அறிவெனுமோ ரழகே
அறிவெனுஞ்செங் கதிரவனே அறிவெனுமோ ரனலே
அறிவெனும்வெண் ணிலவொளியோ டறிவமுதம் பொழியும்
அறிவெனுமோர் தண்மதியே அறிவெனுமொண் சுடரே
அறிவெனுமோர் பைந்தருவே அறிவெனநீள் வேரே
அறிவெனவே படர்கிளையே அறிவுருவாம் தளிரே
அறிவரும்பே அறிவலரே அறிவுநறு மணமே
அறிவெனும்தேன் பொழிகனியே அடியனையாண் டருளே. 4

அறமெனுமோர் அரும்பொருளே அறமெனுமோர் உருவே
அறநிறைவே அறவிரிவே அறம்வளர்க்கும் திருவே
அறக்கடலே அறப்பொருப்பே அறமெனும்நன் னிலனே
அறநதியே அறப்புனலே அறப்பயிரே விளைவே
அறத்தருவே அறத்தளிரே அறமெனும்நல் லரும்பே
அறமலரே அறமணமே அறம்பழுக்கும் கனியே
அறக்கதிரே அறவொளியே அறந்தருமெய்ப் புகழே
அறப்பயனே அறப்பொலிவே அடியனையாண் டருளே. 5

அகிலமெலாம் தருபொருளே அருளுடைத்தாம் பொருளே
ஆதவனாகிய பொருளே அம்புலியாம் பொருளே
ககனநிறை உடுத்திரளாய்க் காட்சிதரும் பொருளே
கணிப்பரிதாம் அண்டமெலாம் காத்தருளும் பொருளே
புகலவும்கா ணவுமெணவும் அரியபரம் பொருளே
போதநிறை வுறுபொருளே பூரணமாம் பொருளே
அகமலர்மேல் அமர்ந்தருள்செய் அற்புதமாம் பொருளே
ஆனந்த அமுதளித்தே அடியனையாண் டருளே. 6

அன்னையெனத் தந்தையென அமைந்திலகும் பொருளே
ஆரியனாய்த் தெய்வமுமாய் அருள்கொழிக்கும் பொருளே
முன்னையினும் முன்னையதாம் முறையிலொளிர் பொருளே
மூர்த்தியதாய் நேர்த்திமிகும் சீர்த்திதரும் பொருளே
பின்னையினும் பின்னையதாய்ப் பிறங்குபுதுப் பொருளே
பெரிதுசிறி தெனவாய்ஆண் பெண்ணெனவாம் பொருளே
அன்னமென ஆடையென ஆதரிக்கும் பொருளே
அபயமளித்தாள் பொருளே அடியனையாண் டருளே. 7

அறுவகைய சுவையுணவாய் அமைந்துதவும் பொருளே
ஆடையென வுறுபொருளே அணிகளுமாம் பொருளே
சிறியதினும் சிறியதுமாய்ப் பெரியதினும் பெரிதாய்த்
திகழும்அதி சயப்பொருளே தேடரிதாம் பொருளே
மறுமையுடன் இம்மையையும் வழங்கிடுநற் பொருளே
மதிப்பரிதா கியபொருளே மாண்பருளும் பொருளே
அறுபகையைக் கடிந்தடியார் அகமலர்வாழ் பொருளே
அணுத்துணையும் நினைக்கருதா அடியனையாண் டருளே. 8

காணுறுபல் பொருள்களுமாய்க் காட்சிதரும் பொருளே
கற்பகமாய் விற்பனர்தம் கருத்திலொளிர் பொருளே
மாணுறுபல் கலைகளையும் வளர்த்தருளும் பொருளே
மன்னுபல தொழில்துறையும் வயங்கமிளிர் பொருளே

ஆணுருவாய்ப் பெண்ணுருவாய் அலியுருவாம் பொருளே
அழகனைத்தும் திரண்டதென அமைந்திலகும் பொருளே
ஆணவமா கியகிழங்கை அகழ்ந்தெறியும் பொருளே
அடிநிழலீந் தருள்பொருளே அடியனையாண் டருளே. 9

வேதமொரு நான்கெனவே விளங்குமுயர் பொருளே
வேதாந்த சித்தாந்த விளக்கமுமாம் பொருளே
நாதமுடி மீதிலகும் நவையில் பரம் பொருளே
நானெனதென் பவைகடந்த ஞானியர்தம் பொருளே
பேதமொ டபேதமெனப் பிறங்கு பெரும் பொருளே
பித்துநிறை பத்தர்தமைப் பேணிடுமெய்ப் பொருளே
ஆதிநடு அந்தமிலா அருளொளியாம் பொருளே
அரும்பொருளே தரும்பொருளே அடியனையாண் டருளே. 10

மோகமெலாம் தவிர்பொருளே முனைப்பொழிக்கும் பொருளே
முழுப்பொருளே விழுப்பொருளே முத்திதரும் பொருளே
சோகமெலாம் தவிர்பொருளே தூய்மைதரும் பொருளே
துரியமுடிப் பொருளேமெய்ச் சுகவடிவாம் பொருளே
மாகமெலாம் வணங்கஉயர் வாழ்வளிக்கும் பொருளே
வாய்மைமிகு பேரறிவோர் வார்த்தையில்வாழ் பொருளே
ஆகமெனும் கோயிலிலே அமைந்தருள்செய் பொருளே
அகப்பொருளே புறப்பொருளே அடியனையாண் டருளே. 11

ஆறு சுவையொடு நீபுசியா திரு
அத்தன் திருவடி காணும்— யோக
சித்திக ளும்பல தோணும்—திட
பக்திவை ராக்கியம் வேணும்

அறமேபுரி துறவாதிகள்
பணியே செயத் துணிவா யிரு
அற்பசுகங்களும் ஒழியும்—ஈசன்
பொற்பதம் கண்டுமே தெளியும்
(சுவாமிகள்)

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

அருட் சட்ட மணி மண்டபம்

உலகம் தோன்றிய நாள் முதலாக அருளாளர்கள் கண்ட கனவு நனவாகி, எல்லா மக்களும் முத்தி பெறும் பொருட்டு, எல்லா மதங்களின் சாரங்களையும், மக்கள் அனுசரிக்கும் நித்யகர்ம விதிகளாக எளிதில் ஆக்கித் தந்து, அருளாட்சி புரிந்து வரும் அண்ணல் அமர்ந்திருக்கும் அருள்மணி மண்டபத்தின் இயல்பை ஆயிரம் நாக் கொண்ட ஆதிசேடனுலும் கூற இயலாது எனின் இச் சிறியேன் எங்ஙனம் கூற வல்லேன்? எனினும், எனதுள்ளும் உறைகின்ற அவ் வண்ணலின் அருளால், அவர் உணர்த்தும் அளவு அறையலுற்றேன்.

உலக உயிர்கள் இறைவனை அடைய முடியாதபடி தடுத்து நிற்கும் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மரங்கள் அடர்ந்த காடுகளை வெட்டி, **நம்பிக்கை** என்னும் பள்ளம் தோண்டி, **'சதசங்கம்'** என்னும் கற்களுடன், **இறையுணர்வு** என்னும் பசை கூட்டி அமைக்கப் பெற்ற கடைக்காலின் மேல் அம்மணி மண்டபம் கட்டப் பெற்றுள்ளது.

அம்மண்டபத்தின் ஒளி எல்லாத் திசைகளிலும் வீசுகின்றது. முதலில் நான்கு தூண்களோடு கூடிய முகப்பு மண்டபத்தின் அமைப்பைக் காண்போம்.

விடியல் நீராட்டம், மருந்து அருந்தாமை, ஞானநிட்டை, அடியார் உறவு என்னும் நான்கு தூண்களைக் கொண்ட அம்முகப்பு மண்டபம், உலக மயக்கம் என்னும் கோடையால் வருந்தித் தளர்வுற்று வரும் உயிர்களுக்கு குளிர்ந்த நிழலைத் தரும் தரு போன்றது.

அம் மண்டபத்தை அடுத்து, பச்சை நீர்ப் பழக்கம், வெந்நீர் தவிர்த்தல், வந்தனை வழிபாடு, மரக்கறி உணவு, பஞ்சமா பாதகம் தவிர்த்தல், நம் போல் உயிரை நாடாமை, நாளை கோளை நம்பாமை, மணி மந்த்ரம் மருவாமை, பிரார்த்தனை செய்து கொள்ளாமை, வெள்ளிக் கிழமை விரதம், ஆண்டவர் நாம மனனம், இறந்தவர்க்கு இரங்காமை, சமாதி, அறமன்றம் அணுகாமை, உடல் பொருள் ஆவி ஒப்படைத்தல், சட்ட அனுபவம் ரகசியம் என்னும் ஒப்பற்ற பதினாறு தூண்களைக் கொண்ட உள் மண்டபம் காட்சி அளிக்கும்.

இயற்கை நெறி பிறழாமை என்பதே அம்மண்டபத்தின் பொற்சுவர்களாகும். **சோதனைகளில் தளர்வுரு உறுதியுடன் அருள் துணைகொண்டு வெற்றி பெறல்** என்னும் நவமணிகள் அச்சுவரில் பதிக்கப் பெற்றுள்ளன.

அம் மணிமண்டபத்திற்குத் **தூய அன்பு** என்ற கூரை அமைந்துள்ளது. அக் கூரைக்கு மேல் **நிட்டானுபூதி** என்னும் கலசம் விளங்குகின்றது. அக் கலசத்துக்கு மேலே **அத்துவிதக் கொடி** மிகப் பொலிவுடன், 'எல்லோரும் இங்கே வந்து அமைதி பெறுங்கள்! முத்தி அடையுங்கள்'' என்று அழைப்பது போல் பறக்கின்றது.

மண்டபத்தின் தரை **பக்தி** என்னும் சந்தனத்தில் **ஆர்வம்** என்னும் பனிநீர் கலந்து மெழுகப் பெற்றுள்ளது. நாற்புறமும் **அருட்சட்ட அனுபவம்** என்னும் முத்துச் சரங்கள் தொங்க விடப் பெற்றுள்ளன.

அம்மண்டபத்தின் நடுவே ஒரு **தெய்வக் கொள்கை** என்னும் விட்டத்திலிருந்து தொங்க விடப் பெற்றிருக்கும் சைவம், வைணவம், இஸ்லாமியம், கிறித்தவம் என்னும் நான்கு பொற் சங்கிலிகளால் இணைக்கப் பெற்ற **சர்வமத சமரச சன்மார்க்கம்** என்னும் ஊஞ்சற் பலகையின்மீது, சிறப்பாக அருட்சட்ட அடியார்களையும், பொதுவாக எல்லா உயிர்களையும் காப்பான் வேண்டி வலது திருக்கரத்தில் தாமரையையும் நெறி தவறுவோரைத் தண்டித்துத் திருத்துவான் வேண்டி இடது திருக்கரத்தில் பொற்பிரம்பையும் ஏந்தி, கருணை நருத்துளிக்கும் திருநயனங்களால் அனைத்து உயிர்களையும் கடைக்கண் பாவித்து **அண்ணல் குருநாதர்** அமர்ந்திருக்கின்றனர். **அருட்சட்டம்** என்ற புத்தகம் அருட்பொலிவோடு அவர் மடியில் திகழ்கிறது.

ஆயிரம் பண மகுடம் கொண்ட **ஆதிசேடன்** வெண்கொற்றக் குடையாக விளங்குகின்றான். **மெய்ஞ்ஞானம்** என்னும் விளக்குகள் எப்பக்கமும் சுடர் விட்டு எரிகின்றன. அருந்தவசிகளாம் **அருளாளரின் ஆசிகள்** அங்கு குளிர் தென்றலாக உலாவுகின்றது. இறைவன் **திருநாமம் கேட்டு உருகுகின்ற உள்ளம்** என்னும் தூபமணம் கமழ்கின்றது. **தன்னலமற்ற சேவை** என்னும் கற்பூர தீப ஒளி கவினுறத் திகழ்கின்றது

(ஆண்டவர் அருள்)

அம் மணி மண்டபத்தின் உள்ளே நுழைந்து ஆண்டவர் அருளைப் பெறும் பேறு பெற்றவர்கள் **அருட் சட்ட அடியார்களாவர்.** அவ்வருட் சட்ட மாண்பினைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள விழைபவர்கள் 'செந்தமிழ் விளக்க வள்ளலார்' ஆட்சிச் சொற் காவலர்' 'சாந்த சீலர்' உயர் அருள் திரு. கி இராமலிங்கனார் எம். ஏ அவர்கள் இயற்றியுள்ள 'வழி காட்டும் வான் பொருள்' என்ற நூலிலும், 'கருணை மிகு வள்ளல் அருள் நிறை சரிதம்' என்ற நூலிலும் கண்டு உணரலாம்.

வேதங்கள் பொய்யாமோ?—விதித்த
விதிகளும் பொய்யாமோ?
சாதனம் உள்ளவர்க்கு—அருள் தந்த
சாட்சியும் போதாதோ?

(சுவாமிகள்)

தாய் வயிற்றினில் பிறந்து—நல்ல
சன்மார்க் கங்களை அறிந்து
மாயை என்றிங்கே தெரிந்து—மனம்
வாடுவது ஏன்மதி மறந்து?

(சுவாமிகள்)



கணேசர் தசாங்கம்

திருநாமம்

செஞ்சொல்வாய் அஞ்சுகமே சீரார்வை யைக்கரைவாழ்
நம் செல்வன் நாமம் நயந்துரையாய்—மஞ்சிவர்வெள்
வாரணனுண் ணரமுதின் மாண்சுவையே சான்ற பரி
பூரணக ணேசனெனப் போற்று.

மலை

வண்ணப் பசுங்கிளியே வண்துதிக்கை யெம்பெருமான்
நண்ணும் மலையினைநீ நன்றுரையாய்—எண்ணரிதாம்
விண்ணவரும் ஞானியரும் வேதியரும் போற்றி செயும்
வண்ணவொளிக் கைலை மலை.

ஆறு

பச்சைக் கிளியே பரிபூர ணக்கடவுள்
இச்சைக் குரியநதி ஏதியம்பாய்—கொச்சைவயச்
செல்வன் செழுந்தமிழின் சீருணர்த்திக் காத்தருளும்
நல்வளஞ்சால் வையை நதி

நாடு

கிஞ்சுகவாய்க் கிள்ளாய் கிளரிரவி கோடியினும்
விஞ்சொளி யோன் நாடு விளம்பிடுவாய்—கொஞ்சுதமிழ்ப்
பண்பாடும் முத்தின் வளமும் படைத் தொளிரும்
தண் பாண்டி நாடெனநீ சாற்று.

நகர்

தித்திக்கப் பேசிமகிழ் தத்தாய் சிவகுமரன்
மெத்த விழையூர் விளம்பிடுவாய்—எத்தலத்தும்
மேலான தென்றிறைவன் எட்டெட்டு மெய்விளையாட்
டாலாடு தென்மதுரை யாம்,

மாலை

பசுமை நிறஞ்சால் பலாசனமே சொல்வாய்
வசுவண்ணத் தைங்கானர் மாலை—பசுபாசத்
தன்மை தவிர்த்தருளிற் சாரச்செய் தாளியறு
கென்மயலும் தீர்க்குமென எண்.

ஊர்தி

ஐந்துவித வண்ணத் தழகு நிறைகிளியே
தந்திமுகன் ஊர்தியெது சாற்றிடுவாய்—யந்திரம்போல்
எண்ணிலுல கும்நொடிக்குள் ஏகிடுமோர் ஆகுவென
எண்ணினருள் பொங்கும் இனிது.

முரசு

சொன்னதையெல் லாம்சொல்லும் தூயகிளிப் பிள்ளாய்நம்
முன்னவனுர்க் குற்ற முரசியம்பாய்—பன்னருஞ்சீர்
மேயகலை யாகமமும் வேதமும்நல் கோமொலிநன்
றேயசிவ ஞானமுர சென்று.

படை


பேசிமகிழ் வித்திடுமோர் ஏசியெனும் பேருடையாய்
ஆசியருள் ஆனைமுகன் ஆயுதமென்—வாசிவிளே
வேறிடச்செய் வித்தகனுர்க் கின்னொளிகால் கொம்பொன்றே
கூறிடுமோர் ஆயுதமாம் கொள்.

ஆணை

காமன் புரவியெனும் கட்டழகார் கிள்ளாய் நம்
கோமகனும் பூரணன்செங் கோலுரையாய்—தீமையணு
வேனுமுரு தெவ்வுலகு மீந்துபுரக் கும்ஞான
பானுவரு ளாணை பகர்.

உன்னைப் படைத்தவன் ஆரு?—உனக்
குள்ளே இருக்கிறுன் பாரு
சொன்ன படியே நீ தேரு — சித்
சொரூப நிலையை நீ சாரு
(சுவாமிகள்)

பாசக்கயிறே நித்தியம்
வீசித்திரி வார்களொடு
பக்ஷம் மறந்திடு மயிலே—அருள்
இச்சை சுரந்திடும் குயிலே.
(சுவாமிகள்)



ஸ்ரீ குருபாதம் துணை

குருவிற்குக் குருவாய் வந்த விநாயகப் பெருமான்

திருவாளர். K. S. சிவம் அவர்கள்

முழுமுதற் கடவுளாகிய விநாயகப் பெருமான் ஈஸ்வரனுடைய பிள்ளை என்பது உலகோர் அறிந்த உண்மை.

நம் ஆண்டவர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருட்பாடலில் விநாயகரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். “மூவர்களை உண்டு பண்ணி முத்தொழிலும் ஈந்தவனே” என்பது அது. பிரம்மா, விஷ்ணு ருத்ரன் என்ற மூவர்களை உண்டு பண்ணி, ஆக்கல், அளித்தல், அழித்தல், என்ற முத்தொழில்களையும் அவர்களுக்குத் தந்ததாகக் கூறுகிறார் அதனால் தான் விநாயகரை முதற்கடவுள் என்கிறோம்.

வேதம் ஆரம்பிக்கும் போதே பிரணவத்தைக்கூறித் தொடங்குவார்கள் ஆதியும் அந்தமும் ஓம் என்ற பிரணவமே. எங்கும் நிறைந்த பரம்பொருள் அதுவே பிரணவத்திலிருந்து தோன்றியதே எல்லாமும்; எல்லாச் சக்தியும் என்பர். ஓங்காரம் எப்போதும் எங்கும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

விநாயகரை எந்தக் காரியம் தொடங்கும் போதும் வழிபடுகிறோம். மஞ்சள் தூளைப் பிசைந்தோ, அல்லது பசுஞ்சாணத்தைக் கொண்டோ விநாயகர் உருவமாக நினைத்து, எங்கும் நிறைந்திருக்கும் பிரணவ சொரூபியை அதில் ஆவாஹனம் செய்து பூஜிக்கிறோம்.

மற்ற எந்தக் கடவுளையும் அப்படி எளிதில் பூஜிக்க முடியாது. அத்துடன் விநாயகருக்கு அறுகம்புல், தும்பைப்பூ எருக்கம்பூ போன்ற எல்லாப் புஷ்பங்களாலும் எல்லாப் பத்ரங்களாலும் பூஜிக்கலாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது
—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை
யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

என்று ஔவையார் பாடியிருக்கிறார்.

வாக்குண்டாம்—ஸரஸ்வதியின் கடாக்ஷம் உண்டாகும். நல்ல மனமுண்டாகும். மனம் ஒரு விநாடி உயர்ந்த நிலைக்குப் பரம்பொருளிடத்தில் கொண்டு போனால் ஒரு இமைப் பொழுதில் திடீரென்று மிகத் தாழ்ந்த நினைவுகளில் சென்று விடுகிறது அப்படி இல்லாமல் விநாயகர் பூஜை செய்பவர்க்கு நல்ல மனம் உண்டாகும். மாமலராள் நோக்குண்டாம். செந்தாமரையில் வீற்றிருக்கின்ற லக்ஷ்மீ கடாக்ஷம் உண்டாகும். மேனி நுடங்காது—சரீரத்தில் பிணி வராது. (யாருக்கு இவை வாய்க்கும்) துப்பார் திருமேனி-சிவந்த திருமேனியை உடைய தும்பிக்கையான் பாதம் கணேசர் திருவடிகளைத் தப்பாமற் சார்வார் தமக்கு. தினம் தவறாமல் பூஜிப்பவர்க்கு இவை வாய்க்கும்.

இத்தகு பெருமைவாய்ந்த விநாயகரைத் தம் குருவாகக் கொண்டு அவரைக் காண வேண்டும் என்று நாடி உருகி வைகையாற்றின் தென்கரையில் ஜோதி சொரூபமாகக் கண்டு ஆலிங்கனம் புரிந்த அளவில் தம்மை மறந்து விழித்து அப்பெருமான் சிலாரூபமாக இருக்கக் கண்டு எடுத்து அருகிருந்த அரசு, வேம்பு மரங்களின் அடியில் அமர்த்தி பரிபூர்ண விநாயகர் என்ற திருநாமம் சூட்டி அனைவர்க்கும் பேரானந்தம் அளித்தார் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள். எங்கள் குருநாதராம் இரெட்டியப்பட்டி சுவாமிகளுக்குக் குருவாக வந்தவர் விநாயகர்.

குருநாதர் தம் பாடலில் பிரணவ ஸ்வரூபியாகிய விநாயகரைப் பூஜித்தால் எல்லோரும் முத்தி பெறலாம் என்று அருளியுள்ளார்.

விநாயகரைப் பூஜித்தவர்கள் எல்லாத் தெய்வங்களையும் பூஜித்தவர் ஆகிறார். இது ஒன்றே போதும்.

குரு கடவுளுக்கும் மேம்பட்டவர். குரு பிரம்மா, குரு விஷ்ணு, குருதேவோ மஹேஸ்வரஹா, குரு ஸாக்ஷாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ: என்பது ஸ்லோகம்.

அதாவது குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன்; குருவே சாக்ஷாத் பரப்பிரம்மம்: ஆகையினால் குருவை நமஸ்கரிக்கின்றேன் என்பது பொருளாகும்.

கடவுள் பக்தர்களுக்குக் கட்டுப்பட்டவர். குரு கட்டுப்பட்டவர் அல்லர். குருமார்கள் எல்லோரும் தாம் அடைந்த பேரின்பத்தைப் பாடலாகவும் வசனமாகவும் கூறி உள்ளார்கள். அதைப் பின்பற்றி அடியார்கள் கடைத்தேறட்டும் என்ற பெரு நோக்குடன் அவ்வாறு செய்தார்கள்.

ஆனால் நம் குருவாகிய இரெட்டியப்பட்டி சுவாமிகளோ தாம்அடைந்ததுடன் நில்லாது, இப்பூதலத்தில் உள்ள எல்லோரும் முத்தி பெற வேண்டும் என்ற கருணையினால், எல்லோரும் மிகச் சுலபமாகவும், குடும்பத்தார்களும், எந்த மதத்தினரும், எந்த வயதினரும், எந்தத் தொழில் உடையவரும் அவற்றிலிருந்து கொண்டே அனுஷ்டித்துப் பயன் பெறும் வண்ணம் அருட்சட்டம் விநாயகப் பெருமானின் அருள் வாக்குடன் இயற்றியுள்ளார்கள். யார் யார் எந்த அளவு கடைப்பிடிக்கின்றார்களோ, அந்த அளவுக்குப் படிப்படியாக அனுக்ரஹம் செய்து மேல் நிலைக்குக் கொண்டு செல்கிறார்கள்.

சட்டம் என்ற பெயருக்கு ஏற்ப, தவறு செய்யும் போது தண்டனை கொடுத்துத் திருத்தி நாம் கடைப்பிடிக்கும் தீவிர வைராக்யத்திற்கேற்ப அருள் பாலித்து வருகிறார்கள்.

நாம் மறந்தாலும் சதா நம்மை ஆண்டவர் கவனித்து வருகிறார். இப்படி எந்த குருவும் சிஷ்யர்களைக் கவனித்து பக்குவப்படுத்துவதாகக் கூற முடியாது.

மேலே கூறிய கருத்துக்கள் எல்லாம் "கருணைமிகு வள்ளல்" என்ற நூலில் மிகத் தெளிவாக உள்ளது. நம் ஆண்டவர் கொள்கைகளையும், பெருமைகளையும் ஒன்று கூட விடாமல் 4672 பாடல்களில் அருள் மழை—கவி மழையாகப் பொழிந்து தள்ளி இருக்கிறார், அடக்கமே உருவாகிய நம் பாலகவி. M. K. வேங்கடராமன் அவர்கள். இந்நூல் மிக எளிய நடையில் எல்லோரும் புரிந்துக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.


ஸ்ரீ ஆண்டவரையும், ஆண்டவர் சட்டத்தையும் எல்லோருக்கும் அறிமுகப் படுத்தி அடியார்களை ஐம்பது ஆண்டுக் காலமாக வழி நடத்தி, பக்குவப்படுத்தி வந்த ஸ்ரீ அருள் சக்தி அன்னை அவர்கள்

நம் ஊனக் கண்ணுக்குத் தோன்ருது மறைந்து இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகியும் இன்றைக்கும், ஸ்ரீ அருட்சக்தி அன்னை ஆஸ்ரமத்திற்கு நேரில் வந்தும், தபால் எழுதியும் அருள் திருநீற்றுப் பிரசாதம் பெற்றுப் பலர் பல நன்மைகள் அடைகின்ருர்கள்.


"விபூதி விலாசம் நடக்கட்டும்" என்று கூறிய ஆண்டவர் 'சின்ன ரெட்டிப்பட்டி' என்றும், 'சித்தி நகர்' என்றும் பெயர் வைத்து அருளாட்சி நடத்தி வரும் பிள்ளையார் குப்பத்தில் ஸ்ரீ ஆண்டவருக்கும் ஸ்ரீ அருள் அன்னைக்கும் பல லட்ச ரூபாய் செலவில் அழகான கற்கோயில் திருப்பணி நடைபெற்று வருகிறது. இத் திருக்கோயில் திருப்பணி விரைவில் பூர்த்தி அடையவும், வரும் சித்திரை மாதத்தில் கும்பாபிடேகம் நடக்கவும், அடியார்கள் எல்லோரும் மனமுருகிப் பிரார்த்தித்து ஒத்துழைப்பு தந்து நீடுழி காலம், ஆண்டவர் சட்டம், ஆண்டவர் அருட்கொடி உலகமெங்கும் பரவப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிருேம்.

வந்ததை ஒப்புக் கொள்வாய்—மனமே
வந்ததை ஒப்புக்கொள்வாய்
வந்ததுவே சிவன் தந்ததென் றறிந்து
சிந்தை மகிழ்ந்தே தேறித் தெளிந்து
வந்ததை ஒப்புக் கொள்வாய்

(சுவாமிகள்)




மதுரை - ஸ்ரீ பரிபூர்ணவிநாயகர்



இரெட்டியப்பட்டியிலுள்ள
ஸ்ரீ குருநாதர் திருக்கோயில் - ராஜகோபுரம்



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளால் ஆட்கொள்ளப்பெற்ற
பிள்ளையார்குப்பம்
திருவார்திரு. அருட்சக்தி அன்னை அவர்கள்



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளால் ஆட்கொள்ளப்பெற்ற
அருட்கொடி சுவாமிகள் என்கிற
திருச்சாத்தனூர் திரு முத்துராம ரெட்டியார் அவர்கள்



மதுரைப் பரிபூர்ண விநாயகர் துதி

ஐங்க ரங்கொடென் ஐம்புலச் சேட்டையை
அங்கி முன்பஞ் செனப்புரி ஆண்மையர்
திங்கள் அங்கி செழுங்கதி ரானவர்
மங்க ளங்கள் வழங்கருட் பூர்ணரே. 1

மாம துரைவை கைக்கரை வாழ்பவர்
சேமம் யார்க்கும் வழங்கும் செழுமையர்
நேமம் நிட்டைகொள் நேயர்க்கின் பூட்டுநர்
சோம னைமுடி சூடும் கணேசரே. 2

ஆக மங்கள் அனைத்தும் அருள்பவர்
போகம் போதம் அனைத்தும் புகட்டுநர்
தாகம் தீர்த்தருள் தண்ணமு தூட்டுநர்
ஆகு வாகன மீதமர் அண்ணலே 3

என்னை மேலும்மே லும்உருக் கிங்கிதர்
பொன்னின் மிக்க வொளியருள் புங்கவர்
தன்னை நல்கி யெனைக்கொள் தயாபரர்
மின்னை யொத்து மிளிரும்என் கொண்கரே. 4

செல்வம் பேரருள் என்றருள் செம்மையர்
நல்வ ளங்கள் அனைத்தும் நல்(கு) அங்கணர்
தொல்வி னைகள் தவிர்த்தருள் தூய்மையர்
சொல்வ ளத்தொடை சூடும்என் கொண்கரே. 5

என்றும் என்னுள் இலங்கும் இனியவர்
ஒன்றென் றாகி அனைத்துமென் றானவர்
நன்று வந்தெனை நன்மணம் கொண்டனர்
குன்று நேர்பவம் கொய்த குணாளரே. 6

ஏதும் கண்டறி யாதஇவ் வேழையைத்
தீது நீக்கியாட் கொள்ளத் திருவுளத்(து)
ஓத ரியக ருணைகொள் உத்தமர்
நாத மாமுடி மேல்திகழ் நம்பரே. 7

பிட்டுக் குமண்சு மந்த பெருமைகொள்
திட்டம் மேய இடத்திற் சிறந்தநல்
சட்டம் நல்கத் தயாபரர் தோன்றினர்
அட்ட திக்கும் அருளைப் பரப்பவே. 8

இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

நிட்டையின் நிறை பயன்

'செந்தமிழ் விளக்க வள்ளலார்', 'ஆட்சிச் சொற்காவலர்', 'சாந்த சீலர்',
'நற்றமிழ் வித்தகர்', 'அருட்சுடர்'

உயர்தவத்திரு. கீ. இராமலிங்கனுர், எம்.ஏ., அவர்கள்.

அருள்திரு: இரெட்டியப்பட்டி அடிகளார் பன்னிரண்டு ஆண்டுகள் பொதிகை மலையில் தவம் புரிந்து, இறைவனுல் அருட்சட்ட நெறி உணர்த்தப் பெற்ருர்கள். அந்த நெறியின் தலைசிறந்த முறைகள் மூன்று, அவை பச்சைநீர்ப் பழக்கம், மருந்து அருந்தாமை, நித்திய நிட்டை. இம் மூன்றில் முக்கியமானது நித்திய நிட்டை என்பதே. மற்ற இரண்டும், மூன்ருவதான இந்த 'நித்திய நிட்டையின் நிறைந்த பயனை' அடைவதற் காகவே யாகும்.

நாள்தோறும் குறைந்த அளவு அரை மணி நேரமாவது நிட்டையில் அமர வேண்டும் என்பது சுவாமிகளின் சட்டம். அங்ஙனம் அமர்வதற்கு உகந்த காலம் காலை நீராடியவுடனேயாகும். அந்தக் காலப் பொழுதில் அமர, எல்லோருக்கும், வசதியிராமல் போகலாம். பகலில் மற்ற நேரங்களிலும் வேறு வேலைகள் இடைப் படக் கூடும். இரவில் ஒவ்வொருவருக்கும் எளிதாக வாய்க்கக் கூடிய நேரம், படுக்கைக்குப் போகுமுன் எனலாம். எப்படியும் படுத்தாக வேண்டும். படுக்கையிலேயே அரைமணி நேரம் அமர்ந்து நிட்டை கூடலாம். எனவே அடிகளார் இந்த நேரத்தைக் குறித் தார்கள். எவரும் தமக்கு 'நேரம் கிட்டாதே' என்று சொல்லக் கூடாத நேரம் இது

நிட்டையில் அமர்வதற்கு அமரும் 'இருக்கை' ஏதாவதாகவும் இருக்கலாம். தர்ப்பை, புலித்தோல், மான்தோல் என்று இருக்க வேண்டும் என்பதில்லை. எந்தத் திக்கை நோக்கியும் அமர்ந்து கொள்ளலாம். 'பத்மாசனம்' என்பது போன்ற தனிவகை ஆசனம் எதுவும் தேவையில்லை, உட்காருவதற்கு வசதியான வகையில் அமரலாம். எந்த நிலையில் வசிப்பவர்களுக்கும் வாய்ப்பாக இருக்கும் பொருட்டு இப்படி விதித்தார்கள்.

அமர்ந்து, மனத்தில் அவரவர் வழி படும் தெய்வ உருவத்தை நினைக்க வேண்டும். வேறு நினைவு வழிமறிக்காத படி, அந்த உருவத்தை உறுத்து நினைத்து வர வேண்டும். உருவத்தில் இறைவனை வழிபடும் வழக்கம் இல்லாதவர்கள், அவரவர் கருதும் உயர்ந்த கருத்து எதையும் சிந்திக்கலாம். எந்தச் சமயப் பற்றும் கொண்டிராதவர்கள், மனம், வெளியே எங்கும் ஓடுவதற்கு விட்டு விடாமல் அடக்கி, சிந்தனையற்று இருக்கலாம். எந்தவகையான கொள்கை உடையவர்களும், நிட்டையில் அமர் வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு திட்டமிட்டார் கள் சுவாமிகள், குருபரரால் ஆட் கொள்ளப் பெற்று, அருட்சட்ட நெறியில் இருக்கும் அடியவர்களுக்கு, குருநாதரின்

திருவுருவமே மனத்தில் நிலைபெற்று நிற்பது. வழக்கத்தில் வந்து விடும்.

மனத்தை இங்ஙனமாக நிறுத்திக் கொண்டு, அவரவரது அன்றைய செயல்களை எண்ணிப் பார்க்க வேண்டும். நல்ல செயல்களைச் செய்வதற்கு இறைவன் உதவி புரிந்ததற்காக நன்றி செலுத்திக் கொள்ள வேண்டும். தீய செயல்களைச் செய்து விட்டதற்காக வருந்த வேண்டும். மன்னிக்குமாறும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டும் இனி அவ்வகையான தீய செயல்களைச் செய்யாதிருப்பதற்கு உறுதி கொள்ள வேண்டும். செய்யக் கூடாது என்னும் மனத்திடத்தை அளிக்குமாறு இறைவனை இறைஞ்ச வேண்டும். அடுத்த நாள் செய்ய வேண்டிய செயல்களில் சிக்கலானவற்றுக்கு செம்மையான வழிகாட்டுமாறு தொழுது கொள்ள வேண்டும். தம்மை அடியோடு அடைக்கலப்படுத்தி விட வேண்டும். தன்னை இழந்துவிட வேண்டும் தன் நினைவு அற்று இருக்கும் நிலையில் உறக்கம் தானாக வந்து விடும்.

உறக்கத்தின் முதற்பகுதி கனவுப் பகுதியாகும். மேலே விளக்கியபடியான நிலையிலிருந்து. கனவு நிலைக்குப் போகும் போது, இறைவன் நமக்கு நல்ல காட்சிகளை நல்குவான். தெய்வ உணர்வை உண்டாக்குவான். வாழ்க்கைச் சிக்கல்களை வெல்வதற்கு வழிகாட்டுவான்.

கனவு நிலையைக் கடந்து நல்லுறக்க நிலைக்கு நம்மைக் கொண்டு போவான். கனவு நிலையில் ஐந்து புலன்களும் ஒடுங்கி, மனம் மட்டும் இயங்கிக் கொண்டிருக்கும். ஆனால், நல்லுறக்க நிலையில் மனமும் ஒடுங்கிவிடும். வெட்ட வெளியில் இருப்போம். 'நன்றாகத் தூங்கினேன்' என்று சொல்லுகிறோமே. அந்த வெட்ட வெளி நிலை அது. இந்த நல்லுறக்க நிலை சிறிதளவே கிடைக்கும் நெடுநேரம் வாய்ப்பது அரிது, இந்நிலை எவ்வளவுக் கெவ்வளவு கூடுதலாகக் கிடைக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உடல் நலமும் மன நலமும் செம்மையாக இருந்துவரும். நல்லடியவர்கள் இந் நல்லுறக்க நிலையில் நீண்ட நேரம் இருக்கும் வாய்ப்பு பெறக் கூடும். இந்நிலையைச் சுழுப்தி நிலை என்றும் சொல்லுவார்கள்.

குருபரனார் பக்குவப்பட்ட அடியார்களின் முடியின் மீது தமது திருக்கரத்தைச் சூட்டி, கனா நிலையும் உறக்க நிலையும் உண்டாகுமாறு அருள் புரிவது வழக்கம். திருச்சாத்தனூரில் அவ்வாறு அருள் புரிந்த இடத்தையும் நல்லடியார்கள் காட்டுவார்கள். கண்டு போற்றியிருக்கிறேன்.

சுழுப்தி நிலைக்கு அடுத்து உயிர் செல்லக் கூடியநிலை பேருறக்க நிலை எனப் பெறும், இதனைத் 'துரியநிலை'யென்றும் கூறுவார்கள் இந்நிலையில்தான் கடவுள் இன்பத்தை நுகரக் கூடிய வாய்ப்புகிட்டும். கடவுள் உணர்வு ஏற்படும். முக்காலத்தையும் அறியும் அறிவும் உண்டாகும். இந்தத் துரிய நிலைக்குச் சென்று, இறைவனைக் கண்டு, இறைவனுடைய இன்ப உணர்வைப் பெறுவர் தவம் சான்ற தன்மையாளர்கள். அருள் திரு இரெட்டியப்பட்டி அடிகளார் அவ்வாறான இன்ப உணர்வைப் பெற்ற அருட்பெருந்தகையாளர். 'அருட் பிரகாச வள்ளலார்' என்று அழைக்கப் பெற்ற அருள் திரு இராமலிங்க அடிகளார் துரிய வெளியில் திளைத்தவர்களுள் ஒருவராகும் பெருமகனார். அவ்வெளியில் இறைவனது 'அற்புதக் காட்சி'யைக் கண்டு பேரின்ப உணர்வு பெற்ற அப்பெருமானார் கடவுளைத் 'துரியவெளி நடுநின்ற பெரிய பொருளே!' என்று விளித்து, அப்பொருளால் தாம் நுகர்ந்த இன்பத்தைச் சொல்லிக் கொள்ள மாட்டாமல் சொல்ல முயலுகிறார்.

அவரது அருள் மொழியையே இங்கு படித்து ஒரு நொடி நேரமாவது, அவ்வுணர்வு நமக்கும் கிட்டுகிறதா என்று பார்ப்போம்.

"காய் எலாம், 'கனி!'யெனக் கனிவிக்கும் ஒருபெருங்
கருணை அமுதே! எனக்குக்
கண்கண்ட தெய்வமே! கலிகண்ட அற்புதக்
காட்சியே! கனக மலையே!
தாய் எலாம் அனைய என் தந்தையே! ஒருதனித்
தலைவனே! நின் பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோறும் அந்தோ!
வாய்எலாம் தித்திக்கும், மனமெலாம் தித்திக்கும்
மதியெலாம் தித்திக்கும் என்!
மன்னியமெய் அறிவெலாம் தித்திக்கும், என்னில், அதில்
வரும் இன்பம், என் புகலுவேன்?
தூய்எலாம் பெற்ற நிலைமேல், அருள் சுகம் எலாம்
தோன்றிட விளங்கு சுடரே!
துரியவெளி நடுநின்ற பெரிய பொருளே! அருட்
சோதி நடராச குருவே!"

துரிய நிலைக்கு மேலுள்ள ஐந்தாவது நிலைக்கு 'துரிய அதீதம்' என்று பெயர். யாவுங்கடந்த நிலை அது. அந்த நிலையிலே நிலைத்து விட்டால், மறுபடியும் உலகுக்கு வராத நிலை கிட்டிவிடும். அந்த நிலையையே ஒவ்வொரு உயிரும் அடைந்தாக வேண்டும். பிறவிப் பெரும்பயன் அதுவே. நிட்டையின் நிறை பயனும் அதுவேயாகும். இறப்பு பிறப்பு அற்று இறைபரம் பொருளுடன் இரண்டறக் கலந்து, பேரின்பம் துய்த்துக் கொண்டிருக்கும் இவ்வுயர் நிலையை அடைய முயல்வதே அருட்சட்ட நெறியின் குறிக்கோள்.

இம்முயற்சியில், முதலில் தூய கனவு நிலைக்குச் சென்று இறைவன் திருக் குறிப்பை அறிந்து, வாழப் பழகுவோம். அடுத்துள்ள உறக்க நிலைக்குப் போய், அங்கு நெடுநேரம் நிற்பதற்கு இறையருள் பாலிக்கப் பெறுவோம். அந்நிலையை அவ்வப்போது கடந்து பேருறக்க நிலைக்குச் சென்று சென்று இறையுணர்வு ஏற்று இறையின்பம் நுகர்ந்து நுகர்ந்து திரும்புவோம். இவ்வாறான நிலையில் இருக்கும் போது இருவினை யொப்பும், மலபரிபாகமும் வாய்க்கப்பெறுவோம். 'சீவன்முத்தர்' நிலையில் இருப்போம். வினை யாவும் துய்க்கப்பெற்று, நம்மைக் கட்டுப் படுத்தாத நிலையை நாம் நண்ணியதும், துரியாதீத நிலையில் என்றென்றும் இருந்து விடுவோம்.

நிட்டையின் நிறை பயனாகிய இந் நிலையை இப்பிறவியிலேயே அடைய குரு பரனுர் அருள் புரிய வேண்டும் என்று இறைஞ்சி வருவோமாக!

பாச பந்தமதை வேர்அறத் தாக்கி
பஞ்சப் புலன்கள் பறந்திடப் போக்கி
ஆசை கொண்டு வெகு நேசமதாக
ஐயன் திருவடி அநுதினம் நோக்கி
வந்ததை ஒப்புக் கொள்வாய்

(சுவாமிகள்)

எல்லாம் குரு மயம்

எல்லாம் குருமயமே—எங்கெங்கும்
எல்லாம் குரு மயமே

சொல்லார் நான்மறை தூயநற் றிருமுறை
நல்லார் நாள்தொறும் நாடிடும் வழிமுறை
கல்லா ரும்கலை கற்றுயச் செயும்முறை
வெல்லா ரும்நனி வென்றிடச் செயும்முறை (எல்லாம்)

பொல்லா ரும்தவம் பொருந்திடச் செயும்முறை
புல்லா ரும்பதம் புணர்ந்திடப் புரிமுறை
சொல்லா ரும்மறை சொல்லிடச் செயும்முறை
எல்லா ரும்வரு கெனஅழைத் திடும்முறை (எல்லாம்)

கொல்லா விரதத்தைக் கொண்டுயச் செயும்முறை
பல்லா றும்ஒன்று படும்உயர் நெறிமுறை
சொல்லால் உணர்விஞல் தொடற்கரு மொருமுறை
வல்லார் பலரும்வாய் மலர்ந்தரு ளியமுறை (எல்லாம்)

திருக்கதவம் திறந்திடுவீர்

திருக்கதவம் திறந்திடுவீர் திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருவுருக்காட் டிடுவீர்
உருக்கியென துளமுரையோ டுடம்பையுமெய்ஞ் ஞான
உருவாக்கி உயர்கருணைத் திருவமுதூட் டிடுவீர்
உருக்கிளரும் இரண்டலவொன் றுமெனவுள் ளிணைந்தே
உண்மையறி வின்பமணம் கமழஅணைந் தருள்வீர்
அருக்கன்மதி அங்கியிவை பலகோடி யெனவே
அகிலமிசை இருடிநகர் அமர்குருமா மணியே.

ஞானமெனும் நுமதுருவைக் காணவிழை கின்றேன்
நற்கதவம் திறந்தருள்வீர் நாதமுடி மிசையே
ஊனமெலாம் தவிர்த்தருளி உண்மையொளி காட்டி
ஒப்புயர்வில் திருச்சபையில் ஓங்குநடம் காட்டிப்
பானமெனத் திருவருளார் அமுதமளித் தருள்வீர்
பழவினைகள் பொடித்திடுவீர் பதநிழல்கூட் டிடுவீர்
மோனமுனி வரர்புகழும் முத்தர்சிகா மணியே
மூலமலம் தவிர்இருடிப் பட்டிமகா முனியே.

வேதாந்தத் திருவீதி விளங்கிடுசித் தாந்த
வீட்டினிலே புகவிழைந்தேன் கதவுதிறந் தருள்வீர்
போதாந்தத் திருவிளக்கைப் பொருத்தியொளி தருவீர்
புகலருயோ காந்தகலாந் தங்களெலாம் புகட்டி
நாதாந்த முடிவிலொளிர் நடனமதைக் காட்டி
ஞானபரா னந்தசுகம் கூட்டியணைத் தருள்வீர்
வாதாண்ட மனத்தவர்கள் காணரிதாம் மணியே
வளங்குலவும் இருடிநகர் வாழ்ந்தருள்என் பதியே.

பல்லுயிர்க் கெல்லாம் பரமனே இருக்கப்
பஞ்சமும் உண்டோ? பயம் நமக்கேது?

(சுவாமிகள்)

ஐந்துபேர் வாழ்கின்ற வீடு—அதில்
அறிவான பொருள் ஒன்றை நாடு

(சுவாமிகள்)

இரெட்டியப்பட்டித் திருநகர்

உயர்திரு. கிரந்தே. ஆர். வேணுகோபால் செட்டியார் அவர்கள்,
பாண்டிச்சேரி.

சுவாமிகள் இரெட்டியப்பட்டி என்னும் திருத்தலத்தில் அவதரித்தார்கள் இது திருநெல்வேலி ஜில்லா விளாத்தி குளம் தாலுக்காவில், நாகலாபுரம் என்னும் ஊரின் கிழக்கே அரை மைல் தொலேவில் உள்ளது. இக் காலத்தில் இரெட்டியப்பட்டியிலிருந்து சுற்றுப்புற ஊர்களுக்கும் பெருநகர்களுக்கும் செல்ல நெடுஞ்சாலேகளும் போக்குவரத்து வசதி களும் உள்ளன. ஆனுல் சுவாமிகள் உலாவிய அக்காலத்தில் அம்மாதிரி வசதிகள் இல்லே. இரெட்டியப்பட்டி செல்ல, கோயில்பட்டி ரயிலடியிலிருந்து எட்டையாபுரம் வரை குதிரை வண்டியிலும், மீதி வழியை மாட்டு வண்டியிலும் கடந்து போக வேண்டும். இரெட்டியப்பட்டி ஒரு சிறு கிராமமே யானுலும் சுவாமிகள் அவதரிப்பதற்கு நிலேக்களனுக இருந்தமையினுலேயே அருள் நிறைந்ததாகியது. அடியவர்களும் ஊரின் பெயரையே சுவாமிகளுக்குச் சூட்டி "ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்" என சுவாமிகளேக் குறிப்பிடுவதால் ஊரின் சிறப்பு மேலும் பெருகுவதாயிற்று

சுவாமிகள் கல்வி கற்றதும், சிலம்பம் பயின்றதும், இரெட்டியப்பட்டியிலேயே யாகும் பெற்றேர்களுக்கு உதவியாக உழவுத்தொழிலில் ஈடுபட்டிருந்து, தமது 24-வது வயதில் மதுரை சென்றுர்கள்.

மதுரை மகமதியர் கடை ஒன்றில் பணிபுரிந்து பிறகு ஓராண்டு காலம் பொதிகையில் தவமாற்றி மறுபடியும் இரெட்டியப்பட்டி வந்து தங்கினுர்கள். அப்போது சுவாமிகளுக்கு 34 வயது ஆகியது.

சுவாமிகள் ஒரு நாள் காலேயில் ஊரின் மேற்கே உள்ள கண்மாயின் பக்கம் உலாவிக் கொண்டிருந்தபோது, ஒரு துறையின் அருகில் விநாயகர் சிலே ஒன்றினேக் கண்டார்கள். உடனே ஊரின் கிழக்கே உள்ள புளியந்தோப்பில் பருத்தி மிலாறுவேய்ந்த ஒரு கோயில் கட்டி அவ் விநாயக மூர்த்தியை அதிலே பிரதிஷ்டை செய்தார்கள். சுவாமிகள் தமது திருக் கரத்தை அவ்விநாயகர் சிரசின் மீது வைத்து அருட்சக்தியூட்டி "ஸ்ரீசித்தி விநாயகர்" எனும் திருப்பெயர் சூட்டி னுர்கள். ஆலயத்தில் தினசரி பூஜைகள் நடக்கலாயின. வெள்ளிக்கிழமை தோறும் சிறப்புப் பூசை நடைபெறும்.

சுவாமிகள் தினசரி விடியல் நீராடியதும், தம் அன்னேயாருக்குத் திருவடி பூசை செய்து, பிறகு அருள்மிகு ஸ்ரீ சித்திக் கணபதி ஆலயத்தண்டை தங்குவார்கள். விஷக்கடி நீங்குவதற்கும், நோய்கள் தீர்வதற்கும், மனதில் எண்ணிய காரியங்கள் கை கூடுவதற்கும், ஊராரும் பக்கத்துக் கிராம மக்களும் திரள் திரளாக வந்து ஸ்ரீ சித்திக் கணபதியைத் தரிசித்து சுவாமிகளிடம் திருநீறு பெற்றுச் சென்று நன்மை பல பூண்டனர். பேய் பிசாசு உள்ளவர்களும் சுவாமிகள் அளித்த திருநீற்றுல் துன்பம் தீர்ந்து நலம் பல பெற்றனர். அற்புதங்கள் பல நிகழ்ந்த வண்ணமிருக்கும்.

சுவாமிகளின் அன்னேயார் உடையவன் திருவடி அடைந்த பின் சமாதி செய்வித்து

ஈமக்கடன்களை முடித்த பின் தமது இல்லத்தில் இடப்பெற்றிருந்த நாற்காலியில் அமர்ந்து நிஷ்டையில் ஆழ்ந்தார்கள். இரெட்டியப்பட்டியில் ஒரு மண்டலம் வரை நிர் விகற்ப நிஷ்டை நிகழ்ந்தது. தொடர்ந்து 12 ஆண்டுகள் பொதிகையில் தவம்புரிந்து பூர்ண நிலை பெற்றனர்.

1900-முதல் 1923-ம் ஆண்டு வரை சுவாமிகள் அருள்உலா மேற்கொண்டதால் இரெட்டியப்பட்டியில் நிரந்தரமாகத் தங்கி இருக்கவில்லை. அவ்வப்போது வந்து செல்வார்கள்.

ஆலயங்களில் உள்ள மூர்த்திகளுக்கு அபிஷேகஆராதனை செய்வது போன்று, அடியவர்கள் சுவாமிகளை நாற்காலியில் அமரச் செய்து, பால், தயிர், பழரசம், திருநீறு, இளநீர், பன்னீர், பஞ்சாமிர்தம் போன்ற பொருட்களால் அபிஷேகம் செய்து, புதிய ஆடைகள் அணிவித்து, நறுமண மலர் மாலைகள் சூட்டி, அமுதும் பழவகைகளும் பிறவும் நைவேத்தியமாகப் படைத்து, விரிவான முறையில் ஆராதனைகளை ஆற்றுவார்கள். மாலையில் சுவாமிகளை மலர் .மாலைகளால் அலங்கரித்து, புஷ்பவிமானத்தில் எழுந்தருளச் செய்து மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலங்கள் ஆற்றுவார்கள். முதல் உத்ஸவம் 11-4-19 2-ல் இரெட்டியப்பட்டியில் சிறப்பாக நடந்தது. தொடர்ந்து மாகாணமெங்கும் அம்மாதிரி உற்சவங்கள் 18 முறை நடந்துள்ளது.

அதன் பிறகு சுவாமிகள் இரெட்டியப்பட்டியிலேயே தங்கி இருந்தார்கள். இரெட்டியப்பட்டியில் தமது இல்லத்திலேயே 12-1-1923 அன்று சுவாமிகள் இறைவனோடு இரண்டறக் கலந்தார்கள். சுவாமிகள் அவதரித்த இடத்திலேயே திருக்காப்பிட்டு அத்திருக்காப்பின்மீது அழகிய ஆலயம் ஒன்று கட்டுவிக்கப் பெற்றது.

ஆலயத்தில் தினசரி பூசைகளும் நிவேதனங்களும் நடைபெறுகின்றன. ஆண்டு தோறும் மார்கழி மாதம் அனுஷ நக்ஷத்திரத்தில் குருபூஜை உத்ஸவமும், புரட்டாசித் திங்கள் ரேவதி நக்ஷத்திரத்தில் திருஅவதாரத் திருநாள் விழாவும் நடைபெறுகின்றன

ஆண்டுதோறும் பெருகி வரும் கூட்டத்தினருக்கு ஆலய வழிபாடாற்ற இடம் போதவில்லை. ஆதலால் சுவாமிகளின் ஆலயத்தை விரிவாக்கி, 14—9—1972 ல் மகா கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். ஆலயப் பணிகள் கவனிக்க ஆலயத்தின் எதிரே தனிக் கட்டிடம் ஒன்றும் கட்டப்பெற்றது.

ஆலய தரிசனத்திற்கு வரும் அன்பர்கள் வசதிக்காக அடியவர் பெருமக்கள் பொது ஸ்தாபனங்கள் ஏற்படுத்தித் தொண்டு புரிகிறார்கள். கல்யாண மண்டபம் சத்திரம் போன்ற தனியார் ஸ்தாபனங்களும் உண்டு.

வடதிசையில் அங்கயற்கண்ணி கோயில் கொண்டுள்ள மதுரை மாநகரமும், தென்திசையில் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரும் மேல் திசையில் ஔவைப் பிராட்டியாரும் அகஸ்திய முனிவரும் தவமாற்றிய குற்றால மலையும் குற்றாலநாதர் ஆலயமும், கீழ்த்திசையில் புண்ணிய க்ஷேத்திரம் இராமேஸ்வரமும் அமையப் பெற்று, இரெட்டியப்பட்டித் திருநகர் சிறந்து விளங்குகின்றது

மகான்கள் அவதாரமான இடங்கள் புனிதமாகப் போற்றப் பெறுவது போலவே கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அவதாரத் தலமான இரெட்டியப்பட்டித் திருநகர் அருட்சட்ட அடியார்களுக்கு ஒப்பற்ற புனிதத் திருத்தலமாக விளங்கியது, விளங்குகிறது இனியும் விளங்கும்.

வாழ்க குருநாதர் திருப்புகழ்.
வாழ்க இரெட்டியப்பட்டித் திருநகர்.

சற்குரு தேவா

ஏதுமறி யாமலிங்கே உழலுகிறேன்—எனை
எப்படிநின் தாள்சேர்ப் பாயோ சற்குருதேவா
சூதுமிகக் கொண்டிங்குள்ளேன் சற்குருதேவா—என்னைத்
தூமலர்த்தாள் சேர்த்தாள் வாயோ சற்குருதேவா

ஓதுமொழி கேட்டுணரேன் சற்குருதேவா—நீநன்று
ஓதும்வண்ணம் நடந்தறியேன் சற்குருதேவா
யாது கொண்டிவ் வாறுழல்கின் றேனிங்கெனவே—சற்றும்
எண்ணகிலேன் வாழகிலேன் சற்குருதேவா

போதுகொண்டுன் னடிபரவாப் பொய்யனெனை—நீயிப்
புவியில்ஏன் படைத்தனையோ சற்குருதேவா
கோதுகொண்ட நெஞ்சினுடன் ஏழையடியேன்—இந்தக்
குவலயத்தில் ஏனுற்றேனோ சற்குருதேவா

தீதுகொண்ட எண்ணம்மொழி செய்கையுடன்—இங்குத்
திரியுமெனைத் திருத்துவாயோ சற்குருதேவா
போதுதொறும் கோடிமுறை திருத்திடினும்—இந்தப்
புல்லன்ஏன் திருந்தவில்லை சற்குருதேவா

ஈதுநிற் கியலாததோ சற்குருதேவா—இப்போ(து)
என்னைநீ திருத்தியாள்வாய் சற்குருதேவா
தாதுகள்எல் லாமும்நின்பால் சார்ந்தொடுங்கச்—செய்து
தாள்மலரிற் கூட்டியாள்வாய் சற்குருதேவா

———

ஆசையுடன்பல வேஷம் எடுத்து நீ
அற்பசுகத்தை அனுதினம் கைக்கொண்டு
மோசம் போகாதே—மனமே-நீ
மோசம் போகாதே

(சுவாமிகள்)

அகக்கண் ஒளி அருள்க

அருவெனவாய் உருவெனவாய் அருவுருவ மெனவாய்
அருளெனுமோர் அமுதினையே அனைத்துயிர்க்கும் தருவாய்
தருவெனவாய்த் தளிர்இலைபூ காய்கனிகள் தருவாய்
தண்ணிழலும் தருவாயுண் ணினைவதெலாம் தருவாய்
திருவெனவே உலகிலுறும் செல்வமெலாம் தருவாய்
சீர்த்தியினைத் தருவாயுட் செம்மையையும் தருவாய்
குருவெனவே வந்தடியார் குறைகள் தவிர்த் தருள்வாய்
குணமலையே நின்னியல்பைக் கூறலெனக் கெளிதோ?

தோன்றியிருந் தழிவுறுமித் தொல்லுலகைக் காணில்
தோன்றுதெப் பொருளினுளும் தோயருளின் தொடர்பை
ஊன்றியுணர்ந் தொன்றியும் உயர்நெறியைக் காட்டி
உயிர்களின் கண் திறந்தருளி உணர்வளித்த உறவே
ஈன்றெடுத்த அன்னையினும் தந்தையினும் சிறந்தே
எண்ணிலுயிர் களைப்புரக்க எழுந்தருளும் இறையே
ஆன்றவர்கள் மனமலரில் அமைந்தசெழுந் தேனே
அருட்கனியே அறிவொளியே அருளறிவாம் அமுதே

அமுதாகி மெய்யடியார் அருட்பசியைத் தவிர்ப்பாய்
அல்லலெனும் கடல்கடத்த அருட்புணையாய் அமைவாய்
சுமையாகி யீர்க்கும் வினைத் தொடர்பையறுத் திடுவாய்
துயர்பலவும் கொடுக்கும்மனக் குரங்கையடக் கிடுவாய்
சமயாதீ தப்பொருளைச் சாரும்வழி யுரைப்பாய்
தாழ்விலுயர் வாழ்வைஉயிர்த் தொகைக்கருளிச் சிறப்பாய்
கமைவடிவாய்க் கணக்கிலதாம் பிழைகளையும் பொறுப்பாய்
கருணைவிளக் கேற்றியகக் கண்ணொளியீந் தருளே.

நாடிய புண்ணிய பாவம் இரண்டும்
நம்மோடு கூட வருமே யல்லாது
தேடும் பொருள் எல்லாம் கூடவராது
ஜெகத்தினில் வாழ்வை நம்ப வொண்ணாது
(சுவாமிகள்)

ஆலவாய் நகரில் அருள் வள்ளல்

'அறநெறி அண்ணல்' 'சைவ சமய சேவாமணி'
உயர்திரு. **கி. பழநியப்பப் பிள்ளை** அவர்கள்
மதுரை-20.

கதிரவன் தோன்ற இன்னும் சில நாழிகைகள் உள்ளன. எங்கும் ஒரே இருள் மயம். தெருக்களில் வெகு தூரத்திற்கு ஒன்றாகக் கம்பங்களில் மண்ணெண்ணெய் விளக்குகள் மினுக்கு மினுக்கு என்று எரிந்து அணையும் தருவாயில் இருந்தன. தாம் இருப்பதை அவை காட்டிக் கொண்டனவே தவிர, வழிப் போக்கர் மேடு பள்ளம் பார்த்து நடக்கச் சிறிதும் உதவவில்லை. குண்டும் குழியுமாக உள்ள தெருக்களின் நடுவில் மேலும் ஆங்காங்கு சில நாய்களும் படுத்திருந்தன.

சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர் இந்நிலையில் இருந்த மதுரை நகர் வீதி ஒன்றில், அமைதியும் இருளும் சூழ்ந்த அந்நேரத்தில், ஓர் உருவம் மெதுவாக நடந்து சென்று கொண்டு இருந்தது. புற இருளை அகற்றும் விளக்கொளி இல்லையாயினும், அக ஒளியின் துணை கொண்டு நடப்பதாகத் தோன்றியது. வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். ஆடையாக ஒரு வெள்ளை வேட்டியும் துண்டுமே இருந்தன. கையில் மாற்று ஆடையைச் சுருட்டி வைத்திருந்தது; மடியில் விபூதிப்பை; நெற்றியிலும் திருநீற்று ஒளி வீசிக் கொண்டிருந்தது. இளைஞராகத் தோன்றினும் தெய்வ பக்தியில் முதிர்ந்தவர் போல் ஏதோ துதிப்பாடலை முணுமுணுத்துக் கொண்டே சென்றார். அவர் மெதுவாகச் சென்றாலும், செல்லும் வழியும் சேரும் இடமும் நன்றாகத் தெரிந்து செல்வது போன்றே தோன்றியது. நடுத்தெருவில் படுத்திருந்த நாய்கள் தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டு மறுபடியும் துயில்கொள்ளும். தினந் தினம் அதே நேரத்தில் வருபவர் தானே என்பதை அவை நன்றாய் அறியும் போலும்! கிருஷ்ணராயர் தெப்பக்குளத்தின் மேலக்கரை வழியாகச் சென்று மேற்கே திரும்பி இரயில் பாலத்தை அடைந்து, அதனை யொட்டி வடக்கு நோக்கிச் சென்றார் அவ் இளைஞர்; வைகையாற்றின் தென்கரையை அடைந்தார். நதியில் நீரோட்டம் இல்லை; ஒரே மணற் பரப்பு.

முன்பு ஒரு காலத்தில் இதே இடத்தில்தான், வைகையின் வெள்ளப் பெருக்கிலிருந்து மதுரையைக் காக்க, சோம சுந்தரப் பெருமான் ஒரு கூலியாளாக வந்து திருமுடியில் மண் சுமந்து அதற்குக் கூலியாக உதிர்ந்த பிட்டும் பிரம்படியும் பெற்றார். மாணிக்கவாசகருக்காக இப்பாடுபட்ட பெருமானின் திருவிளையாடலை நினைத்துக் கொண்டே மணற்பரப்பில் நடந்து சென்றார் அம்மனிதர்; ஓர் ஓடு காலை அணுகினார்.

ஓடுகாலில் தண்புனல் ஊற்றெடுத்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. குளிப்பதற்குத் தக்க வாறு ஓடுகாலின் நடுப்பகுதி அகன்று ஆழமாக அமைந்திருந்தது. உட்கார்ந்தால் கழுத்தளவு தண்ணீர் ஆழம்; நன்றாகக் கால் நீட்டிப் படுத்து முங்கி

முழுகுவதற்குப் போதுமான அளவு நீளம்; தெள்ளிய அவ்வூற்று நீரை அறிவிலிகளோ ஆடுமாடுகளோ அசுத்தப் படுத்தாமல் பார்த்துக்கொள்ள ஒரு காவலர். அவர் அமர்வதற்கு ஓடுகாலின் கரையில் ஒரு சிறு தட்டிப்பந்தல்.

ஓடுகாலை நோக்கி வந்த மனிதரைக் கண்டதும்; 'வாருங்கள் சாமி! வணக்கம். இப்பொழுதுதான் துப்புரவு செய்து முடித்தேன்' என்று ஓடுகாலின் உரிமையாளர் வரவேற்ருர். 'நல்ல பணி செய்தாய்! சேர்வை! உமக்கு விநாயகப் பெருமான் அருள் கிட்டும்' என்று வாழ்த்திஞர் சுவாமிகள்.

'ஒவ்வொரு நாளும் முதலில் சாமி தான் என் ஓடுகாலில் குளிக்க வேண்டுமென்றே நான் விநாயகரை வேண்டிக் கொள்வேன். அவனருளால் அவ்வாறே தினம் நடைபெறுகின்றது. முதலில் சாமி ஓடுகாலில் காலெடுத்து வைத்தால் அன்று நாள் முழுவதும் எனக்கு நல்ல வருமானம் கிடைக்கும்' என்று அன்பு கனியக் கூறிஞர் சேர்வை.

சேர்வை, மணப்பாறையிலிருந்து வந்தவர் போலும். அதனுல் அவரை மணப்பாறைச் சேர்வை என்றே பலரும் அழைத்தனர். தன் உடல் உழைப்பைக் கொண்டு வாழ்பவர். சுவாமிகளிடம் மிக்க அன்புடையவர், அவர்களுக்குச் செய்யும் தொண்டைப் பெரும் பேருகக் கருதியவர்.

சுவாமிகள் நீராடித் திருநீறு அணிந்து இறைவனை வழிபட்டுப் புறப்படும் சமயம், பலர் வந்து சுவாமீ! வணக்கம் என்று கூறி குளிக்கச் செல்வர். சிலர் அவசர அவசரமாகக் குளித்து விட்டுப் பின் தொடர்ந்து சுவாமிகளின் அருளுரையைச் செவிமடுத்தவாறே வருவர்.

இவ்வாறு 'சாமி, சாமி' என்று அன்புடன் அழைக்கப்படுபவர் நாகலாபுரம்—இரெட்டியப்பட்டி எனும் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியப்பிள்ளை என்பவரே யாவர். இவர் இரண்டாண்டுகளுக்கு முன் வீட்டை விட்டு வெளியேறி மதுரைக்கு வந்தவர்; ஒழுக்க சீலர்; தூய உள்ளம் படைத்தவர். இவர் மதுரை வந்தது முதல் விடியல் நேரத்தில் வைகை ஊற்று நீராடலை எக்காரணம் பற்றியும் ஒரு நாளும் கைவிட்டதில்லை.

அதிகாலை நீராடலை ஒழுக்கமாகக் கொண்டது போல், அன்னை மீனுட்சி ஆலய வழிபாட்டையும் முடித்தே பிற அலுவல்களில் நாட்டம் செலுத்துவார்.

ஆற்றிலிருந்து நேராகத் திருக்கோவிலுக்குச் செல்வார். சித்தி விநாயகர் சந்நிதி தொடங்கி ஒவ்வொரு சந்நிதியிலும் முறையாக வழிபட்டு அன்னையின் திருமுன் வருவார்.

'ஐயறிவும் உள்ளொடுங்க, விழிகளிலே ஆனந்த அருவி பொங்க, மதுர மிகு வண்தமிழால்' துதித்துப் பாடுவார். பின்னர் சொக்கநாதப் பெருமானை வழிபட்டு ஒரு தனி இடத்தில் தியானத்தில் அமர்வார். பிள்ளை அவர்கள், இறைவனை வேண்டிக் கொள்வது, தனக்குப் பொன்னும் பொருளும் வேண்டும் என்பதல்ல. 'உலக மக்கள் உய்யும் வழியைக் காட்டுக' என்பதேயாகும்.

"இவ்வுலகில் வாழு யிர்கள் எல்லாமும்
எவ்விதத்தும் இடரு ருமல்
செவ்விய நல்லருள் வாழ்க்கை
எளிதாற்றித்
திருவருளாம் செல்வம் பேணித்
திவ்விய மாய்ப் பேரின்ப முத்திபெற
வழியொன்று செய்வாய் என்று
செவ்வியகைம் மலர் கூப்பித்
தொழுதுநதி
நீராடிச் செம்மை பூண்டார்"

(அருள் நிறை சரிதம்)—*

---

* பாலகவி, திரு. மி. கே. வேங்கடராமன் அவர்கள் இயற்றிய ''கருணைமிகு வள்ளல் அருள் நிறை சரிதம்''

நதி நீராடித் தம் அருட்குருவாகிய விநாயகப் பெருமானிடம் கோரிய இவ் வரத்தையே திருக்கோயிலிலும் கேட்பார்.

திருக்கோயிலில் திருக்காப்பு நீக்கித் திருவனந்தல் வழிபாடு தொடங்கும் போது வழிபாட்டில் கலந்துகொள்வார்; வழிபாடு முடிந்து பிள்ளை அவர்கள் வெளியில் வர மணி ஏழாகிவிடும். நேராகத் தாம் பணி புரியும் கடையை நோக்கிச் செல்வார்,

சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் கணக்கப்பிள்ளையாகப் பணியாற்றியது ஓர் இஸ்லாமியர் கடை. அது அன்னை மீனுட்சியின் சந்நிதிக்கு அண்மையில் இருந்த புகழ்பெற்ற பல்பொருள் அங்காடி. பிள்ளையவர்கள் குறித்த நேரம் தவருது கடையைத் திறக்க வந்து விடுவார்கள்.

பழுத்த சிவனடியாராகக் காட்சி தரும் பிள்ளை அவர்கள் ஓர் இஸ்லாமியர் கடையில் கணக்கப் பிள்ளையாய் இருந்தது திருவருட் செயலேயாகும்

1879ல் தம் 23வது வயதில் வீட்டை விட்டு ஒருவரும் அறியாது வெளியேறிய சுப்பிரமணியப்பிள்ளை, இரெட்டியப் பட்டியிலிருந்து திருச்செந்தூர் சென்ருர். செந்திலாண்டவன் வழிகாட்ட அங்கிருந்து நேராக மதுரைக்குக் கால்நடையாக வந்தார். அறிமுகமானவர்கள் ஒருவரும் இல்லை. அப்பெரு நகரில் எங்கு தங்குவது என்ன செய்வது என்பன புலப்படவில்லை. பிள்ளை அதை எண்ணிக் கவலைப்படவில்லை. அன்னை இருக்கின்ருள்; அவள் வழிகாட்டுவாள் என்று திடமாக நம்பினுர். திருக் கோயிலுக்குத் சென்ருர். "என் உள்ளொளியைப் போற்றித்தான் நான் மக்களுக்குப் பணி செய்ய முடியும், அவ்வொளியைப் போற்ற நான் என் உடலைப் போற்ற வேண்டும், அதற்கு வழிகாட்டு அன்னையே! என்று மீனுட்சி அம்மையை வேண்டி நின்ருர்.

'உள்ளம் உயரத் காறும் கோயிலுமே
உதவுமெனக் கொண்ட அண்ணல்
உள் ளொளிரும் ஆன்மாவைப்
போற்றுவது
தூய உடம்பென நினைந்தார்
தெள்ளிய மெய்ஞ்ஞான மிந்த
உடம்பின்றி
எய்தவொணு தென்ன உள்கி
எள்ளலிலாதிவ் வுடம்பைப் பேணுமிடம்
யாதென்ன எண்ண லானுர்.'

(அருள் நிறை சரிதம்)

அன்னை வழிகாட்டினுள். அந்நகரில் நேர்மையான வாணிபத்தால் புகழ் பெற்றது உருண்டைமீராமுஹைறதீன் இராவுத்தர் கடை என்பதைக் கேள்வியுற்று அங்கு சென்ருர் சுப்பிரமணியப் பிள்ளை.

பிள்ளை அவர்களின் தோற்றத்தையும் முகப் பொலிவையும் அருள் நோக்கையும் பார்த்த கடை முதலாளி, அவர் வாய் திறந்து வேலை கேட்டதும் தமக்கு ஒரு பெரும் புதையல் கிடைத்ததாகவே மகிழ்ச்சியுடன் கணக்கு எழுதும் பணியை மேற்கொள்ளச் செய்தார். பல அடியவர்களின் வாழ்க்கைக் கணக்குகளை நேர் செய்யத் தோன்றிய ஒருவர் அவ்வாறு கடைக் கணக்கில் பணப்பற்று வரவை நேர்செய்ய அமர்ந்தது விநோதமே!

எண்ணற்ற பலவித வெளிநாட்டு உள்நாட்டு சாமான்கள் கொள்முதல் செய்தல்; அவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் கடனுக்கும் ரொக்கத் திற்கும் விற்றல்; நெல்லையிலுள்ள கடையின் கிளைக்கு சரக்குகளை அனுப்புதல் பெறுதல்; குறிப்பிட்ட நபர்களுக்குக் குறிப்பிட்ட தொகைக்கு மேல் போகாது குறிப்பிட்ட காலத்திற்கு மேலும் நிலுவை நிற்காது பார்த்துக்கொள்ளுதல்; ஒவ்வொரு பொருளின் கொள்முதல் அடக்க விலை என்ன என்பதை உடனுக்குடன்

கண்டறிந்து குறித்தல் ஆகிய அனைத்திற்கும் கணக்கு வைத்துக்கொள்வது மிகச் சிரமமான வேலையாகும். அவ்வப்பொழுது பல சிக்கல்கள் தோன்றுவது இயல்பு. அவற்றைத் திறமையுடன் கவனித்துக் கணக்குகளை எழுதுவது அநுபவம் பெற்றவர்களுக்கும் எளிதானதல்ல. பிள்ளை அவர்கள் மனம் தளராது அப்பணியை ஏற்று முதலாளிகள் வியக்கும்படி 'துல்லியமாக'க் கணக்குகளை எழுதி வந்தார். பிள்ளையவர்கள் கடைப் பணியை ஏற்ற நாள் முதல் கடையில் நாளும் வியாபாரம் பெருகிச் செல்வம் குவிந்தது.

இரெட்டியப்பட்டியில் மகனைக் காணாது பெற்றோர்களும் உறவினர்களும் கவலையுற்றிருந்தனர். வெகு நாட்களுக்குப் பின் யாரோ ஒருவர் பையனை மதுரையில் பார்த்தேன் என்று கூறக் கேட்டுத் தந்தையாரும் மற்றும் சிலரும் மதுரைக்கு வந்தனர். எங்கெங்கோ தேடிக் காணாது ஒருநாட் காலையில் திருக்கோயில் அருகில் உள்ள கடையில் தம் அருமை மகனைக் கண்டு தந்தை ஆனந்தக் கண்ணீர் வழிய, கட்டி அணைத்துக் கொண்டார். மகனை ஊருக்கு வருமாறும், அவன் விருப்பம் போல் இருப்பதற்கு இனி யாரும் தடை செய்ய மாட்டார்கள் என்றும் கூறி மன்றாடி அழைத்தார். அழுதார் தந்தை.

பெற்ற தந்தையின் பாசத்தைப் புரிந்து கொண்ட பிள்ளை தன் நிலையை அவர்கள் உணரவில்லையே என்று கவலையுற்றார். தாம் செய்ய வேண்டிய அருட் பணி தடைபெறுமே என்று எண்ணினார். தம்மால் வேறெங்கும் வர முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். வேறு வழியின்றித் தந்தையார் தன் பேரன் பிச்சாண்டி பிள்ளை என்பவரை மகனுக்குத் துணையாக இருக்கும்படி விட்டு விட்டு ஊர் திரும்பினார் மகனுக்குத் திருமணம் செய்து விட்டால் அவனைப் பிடித்த தெய்வப்பித்து நீங்குமென்று பலர் கூற அதற்கு ஏற்பாடு செய்ய முனைந்தார். நல்ல இடத்தில் ஒரு பெண்ணரசியைத் தேர்ந்து மதுரையிலேயே திருமணத்தை நடத்தி வைத்தார்.

சுப்பிரமணியப் பிள்ளைக்குத் திருமணத்தில் விருப்பமில்லையாயினும் அதற்கு உடன்பட்டார். இல்லறத்திலிருந்தே துறவு மேற்கொள்ள வேண்டும் என்பதும் இல்லறத்தாரும் முத்தி பெறலாமென்பதும் தமிழ்ச் சான்றோர்களின் முடிவு என்பதை அவர் நன்கு அறிவார்.

'உள்ளமதில் துறவுமனப் பான்மைமிக
உடையவராய் இருந்திட்டாலும்
வள்ளலார் இல்லறத்தார்க்
குணர்வூட்டி
உய்விக்க வந்த தாலே
எள்ளலிலா இல்லறத்தை இவர்க்கருள
இறைவர் திருவுளத்திற் கொண்டார்
கள்ளமிலா இவருளத்திற் கேற்ற நல்ல
கற்பரசி மணப்பெண் ணுனர்.
[அருள் நிறை சரிதம்]

வீட்டிற்கு மனையரசி வந்ததால் பிள்ளை அவர்களின் வாழ்க்கை முறையில் ஏதும் மாற்றம் ஏற்படவில்லை வழக்கம் போல் அதிகாலை வைகை நீராடல், அடுத்துத் திருக்கோயில் வழிபாடு, கடைப்பணி அனைத்தும் முறையாக நடைபெற்றன சோற்றுக்கடை உணவிற்குப் பதில் அன்பு மனையாள் ஆக்கிய உணவை உண்பதுதான் ஒரே மாற்றம்.

* • *

இல்லற வாழ்வும் கடைப்பணியும் தற்காலிகமானதாகவே பிள்ளையவர்கள் செய்துவந்தனர். தாம் செய்ய வேண்டிய பெரும்பணிக்கு காலத்தை எதிர் நோக்கி இருந்தார்.

ஞாலமிசை தாமினிது செய்யவந்த
அரும் பணியை நன்று செய்யக்
காலம்வரும் வரையினிலங் காடியில்நற்
கணக்கெழுதும் தொழில்மேற்
கொண்டு

சீலமிகும் தமைக்காட்டிக் கொள்ளாமல்
அடக்கமுடன் திகழ்ந்தார் அண்ணல்
ஏல அவர் உள்ளிருந்தூக் கருள்அவர்கண்
முகப்பொலிவால் இலங்கிற் றன்றே.
(அருள் நிறை சரிதம்)

அமைதியாக, உறுதியாக, தெளிவாகத் தாம் எதற்காக வந்தோம், செய்ய வேண்டிய பணி யாது என்பதை உணர்ந்தார். அவற்றை நிறைவேற்ற மனமுருகி இறையருளை வேண்டி வந்தார். திருமுகத்தில் அருள் ஒளி நாளும் வளர்ந்தது. பார்த்தோர் பயபக்தியுடன் நடந்து கொண்டனர். பெயரைச் சொல்லிக் குறிப்பதை விட்டனர். 'சுவாமிகள்' அல்லது 'இரெட்டியபட்டி சுவாமிகள்' என்றே கூறத் தொடங்கினர். கடை முதலாளியாகிய இஸ்லாமியரும் அவரைச் 'சாமி' என்றே அழைத்தனர்.

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் தூய உள்ளத்தையும் தெய்வ பக்தியையும் அருள் மொழிகளையும்கேள்வியுற்று மக்கள் பலர் அவரைக் கண்டு வணங்கி ஆசி பெறுவதைப் பெரும் பேருகக் கருதினர். ஆற்றங்கரைக்கும், திருக்கோயிலுக்கும், இராவுத்தர் கடைக்கும் தேடி வந்து ஆசி பெறுவோர் கூட்டம் பெருகிற்று.

மானுமதுரைச் சுவாமிகள் என்ற ஒரு தூய துறவி அப்பகுதி மக்களால் மிகவும் பக்தியுடன் போற்றப்படுபவராவர். இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்ற இல்லறத்துறவி ஒருவர் மதுரையில் ஓர் இஸ்லாமியர் கடையில் பணிபுரிகிறூர் என்பதைக் கேள்வியுற்றூர் மதுரைக்குச் சென்று அவரை பார்க்க வேண்டுமென்ற அவாமேலீட்டால் புறப்பட்டு வந்தார். இருவரும் சந்தித்தனர். ஒருவரை யொருவர் புரிந்து கொண்டனர். உள்ளத்தால் ஒன்றுபட்டனர். இல்லறத்தானும் ஞானியாகலாம் என்பதை உணர்ந்தார் மானுமதுரைச் சுவாமிகள். வாழ்த்தி விடை பெற்றூர். இந்நிகழ்ச்சி ஊர் முழுதும் பரவிற்று. அன்பர் கூட்டம் பெருகிற்று. அவர்கள்பால் சுவாமிகள் இதுவரை காட்டி வந்த அன்பு அருளாக மாறியது. கருணைவள்ளல் ஆயினர் இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

* * *

ஒரு நாள் வழக்கமாகச் செல்லும் நேரத்திற்கு வெகு முன்பே, புறப்பட்டு வைகைக் கரைக்குச் சென்றூர்கள். அவர்கள் உள்ளத்தில் தோன்றிய ஏதோ ஓர் உணர்வு இழுத்துச் சென்றது என்றே கூற வேண்டும். ஓடுகாலில் அந்நேரத்தில் சேர்வையும் வரவில்லை. சுவாமிகள் நீராடினூர்கள். திருநீறு அணிந்தார்கள். தாம் வழிபடும் விநாயகப் பெருமானை நினைந்து கைகூப்பித் தேம்பித் தேம்பி அழுதார்கள். உன் திருவுருவை எனக்குக் காட்ட மாட்டாயா என்று ஏங்கினூர்கள்.

எவ்வுயிரும் உயும்வழியை
எளிதுணர்த்தல்
வேண்டுமென ஏங்கு கின்றேன்
திவ்வியநின் திருக்காட்சி கண்டின்பம்
திளைக்கவுன்னி உருகு கின்றேன்
ஒவ்வொரணுவுளும் நிறைந்த
ஒருவாஎன்
விழைவினை நீ உணர்ந்தி லாயோ
செவ்வையுற நின்னுருவைக் காட்டிவழி
செப்புகெனத் தேம்பி நின்றூர்
(அருள் நிறை சரிதம்)

அப்பொழுது திடீரென்று நினைத்தற்கும் அரிய ஓர் அற்புதம் நிகழ்ந்தது. வைகையின் மணற்பரப்பில் எத்திசையும் இருள் சூழ்ந்து அமைதி நிலவியது. சுவாமிகள் தன்னந்தனியாகக் கைகூப்பிக் கிழக்கு நோக்கி நிற்கின்றூர்கள். கோடி சூரியன் ஒன்றுகூடினூற் போல் ஒரு பேரொளி; அருட்பெருஞ்ஜோதி; மண்ணையும் விண்ணையும் அளாவி சுவாமிகளின் முன் நின்றது. பார்ப்பதற்குக் கண் கூசும் அவ்வொளிப்பிழம்பின் நடுவிலே தம் ஞான குருவாகிய விநாயகப் பெருமானின் திருவுருவைக் கண்ணுற்றூர் சுவாமிகள்,

திகைத்தார்; மருண்டார்; தெளிந்தார்; உளம் உருகினுர்; ஆடினுர்; பாடினுர்; செய்வதறியாது மயங்கினுர்; இரு கரங் களையும் நீட்டி ஓடித் தழுவினுர்; எம் பெருமானை அணைத்தார்; பாய்ந்தது அவர் உடலில் மின்சக்தி போன்று ஓர் அருட்சக்தி; உணர்வு இழந்தார்; தெளிந்த பின் தம் அணைப்பிலே விநாயகப் பெருமானின் சிலா உருவம் ஒன்று இருப்பதைக் கண்டார். என்னே! தம் கழுத்தில் ஒரு மலர் மாலை இருப்பதையும் கண்டார். அன்று சண்டிகேசுரருக்குச் சிவபெருமான் மாலை அணிந்து அருளியது போன்று இன்று இரெட்டியப்பட்டி சுவாமிகளுக்கு விநாயகப் பெருமான் மாலை அணிந்து அருளினுர். ஜோதி மறைந்தது. விநாயகர் திருவுருவைச் சுற்றிச்சுற்றி ஆனந்தக் கூத்தாடினுர் சுவாமிகள்.

அவ்வமயம் அங்கு வழக்கமாக நீராட வரும் அன்பர்கள் பலர் வந்தனர். இறைவன் நிகழ்த்திய திருவிளையாடலை அறிந்து அதிசயித்தனர். அருகில் இருந்த ஓர் அரச மரத்தடியில் விநாயகரை எழுந் தருளச் செய்து, கும்பிட்டுக் கூத்தாடி வழி பட்டனர். "ஸ்ரீ பரிபூர்ண விநாயகர்" என்று சுவாமிகள் வாழ்த்த எல்லோரும் சரணம் சரணம் என்று வாழ்த்தினர். இச் செய்தி நகரில் பரவியதும் மக்கள் திரள் திரளாக வந்து ஸ்ரீ பரிபூர்ண விநாயருக்கு குடம் குடமாகப் பாலாபிடேகம் செய்து வழிபட்டனர்.

இதனைக் கேள்வியுற்றதும் இராவுத்தர் கடை ஊழியர்களும் முதலாளியும் வந்து கண்டு தங்கள் கடைக் கணக்கப் பிள்ளையைப் புகழ்ந்து போற்றினர்.

சுவாமி அவர்கள் ஸ்ரீ பரிபூர்ண விநாயகரை எழுந்தருளுவித்த இடம் இதுதான் என்பதை அவர்களே ஒரு வெண்பாவாக அருளியுள்ளார்கள்.

"மதுராபுரி வடக்காய்
வைகைநதித் தென்பால்
சதுரார் ரயில்பாலம்
தன்மேற்காய்—எங்கும்
கதித்தோங்கும் செந்நெல்சூழ்
கட்டிடத்தின் கீழ்பால்
உதித்தாய் என்
உள்ளத் துறை'

ஸ்ரீ பரிபூர்ண விநாயகரை வழிபட்டு, நாடியன பெற்ற நன்மக்கள் நாளுக்கு நாள் பெருகினர். இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை என்று திருநீறு பூசி நலம் பெற்ருேர் பலர். மதுரை நகரெங்கும் இறைவன் இன்னருள் ஊற்றெடுத்துப் பெருகிற்று. **இறைவனின் 65 ஆவது திரு விளையாடல்** நமது காலத்தில் நடந்ததே என்று பெருமிதம் கொண்டனர் மக்கள்.

* * *

இந்நிலையில் சுவாமிகள் பம்பாய் சென்று கடை அலுவலாகச் சில காலம் அங்கு தங்க வேண்டியதாயிற்று. அந்நாட் களில் சுவாமிகளின் அடியார்கள் பரிபூர்ண விநாயகரை நாள்தோறும் பக்தியுடன் வழிபட்டு வந்தனர். சுவாமிகள் மதுரைக் குத் திரும்பியது கண்டு அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

விநாயகப் பெருமானுக்குக் கோயில் எழுப்ப வேண்டுமென்று முடிவு செய்தனர். அவர்கள் விருப்பப்படியே சுவாமிகள் முன்னின்று கோயில் திருப்பணியைச் செய்து தம் திருக்கரங்களாலேயே குட முழுக்கும் செய்து வைத்தார்கள். மேலும் அவ்வன்பர்கள் ஸ்ரீபரிபூர்ண விநாயகர் கோயிலுக்குத் தென்புறம் கடம்பவன நாதர் கோயில் ஒன்றும் சுவாமிகளின் ஆசியுடன் எழுப்பி முடித்தனர்.

மக்களின் மனது செம்மையுற வேண்டு மென்று தம் மனத்திற்கு உபதேசம் செய்யும் முறையில் பல பக்தி ததும்பும் இசைப்பாடல்களை சுவாமிகள் பாடத் தொடங்கினர். பாடல்கள் ஊற்றெடுத்

தாற் போல் வந்து கொண்டிருப்பதை அடியார்கள் கண்டு வியந்தனர்.

சுவாமிகளிடம் திருநீறு பெற்றுத் தீராத நோயும் தீர்ந்தது. பலருக்கு நினைத்த காரியம் நிறைவேறியது. மக்கட் பேறு பெற்றனர். இவ்வாறு எதை எதையோ வேண்டி சுவாமிகளைப் பார்க்க வருவோர் கூட்டம் பெருகிற்று.

உயிர்த்தொகை அனைத்தும் அல்லல் அகற்றி, அருளின்ப வாழ்வாற்றத்தக்க அருள் நெறியை உலகுக்கு அருள வேண்டும்; அதற்கேற்ற அருந்தவம் ஆற்ற வேண்டும் என உன்னிய அண்ணலார்க்கு அகநாட்டம் மிகுவதாயிற்று. உணவைச் சுருக்கிப் பேச்சைச் சுருக்கி முடிவில் பேசா விரதமே மேற்கொண்டு விட்டார்கள். அன்பர், நண்பர், உறவினர், கடை முதலாளி, யார் பேசினும் வாய் திறந்தார் இல்லை. ஒரு சில எழுதிக் காட்டினார்கள். பின்பு அதனையும் கைவிட்டு எதற்கும் புன்சிரிப்பே பதிலாக முடிந்தது. “உணவில்லாது, பேசாது இராவுத்தர் கடைத்திண்ணையிலேயே இருக்கின்றார் இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்பதைக் கேள்வியுற்று கூட்டங் கூட்டமாக வந்து காணத் தொடங்கினர் மதுரை மக்கள். கடை உரிமையாளர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை மக்களுடன் சேர்ந்து அவர்களும் கவலையுற்றனர்.

ஒரு நாள் திடீரென்று சுவாமிகளைக் காணவில்லை. ஊரெங்கும் தேடினர். பயனில்லை. கருணை வள்ளல் பொதிகை மலையில் தவம் மேற்கொள்ளச் சென்று விட்டார் என்பதை ஒருவரும் அறியார். இவ்வாறு சுவாமிகளின் தவ வாழ்விற்கு வழி வகுத்த மதுரைப்பதி என்ன தவம் செய்ததோ!

இரெட்டியப்பட்டி சுவாமிகளின்
திருவடி வாழ்க.

குயிற் பத்து

அன்பொடு நல்லிசை பாடி அடியர்உள் ளத்தினை யீர்த்தே
இன்பமிக் கூட்டும் குயிலே எவ்வுயிர்க் கும்நலம் மேவப்
பொன்புரை சட்டமொன் றீந்தாள் புண்ணியன் போத வுருவன்
என்பவம் நீக்கி மணந்த ஏகன் இவண்வரக் கூவாய். 1

செம்மை மிகும்இசை பாடிச் சிந்தையை யீர்க்கும் குயிலே
நன்மைசெய் நல்லருட் சட்டம் ஞாலத் தளித்துப் புரப்போன்
இம்மை மறுமை நலங்கள் யாவும் எளிதருள் ஈசன்
மும்மை மலங்கள் முறித்தாள் மோன குருவரக் கூவாய். 2

நற்றமி ழின்னிசை பாடி நாதனைப் போற்றும் குயிலே
சொற்றமிழ் பாடிமெய் யன்பால் தூய புகழ்துதித் தேத்தின்
அற்றமில் பேரின்ப முத்தி அருளும் பரானந்த நாதன்
உற்றிவண் பேரின்ப மூட்ட உருகி யன்போடும்நீ கூவாய். 3

தீந்தமி ழின்னிசை பாடித் தேவனைப் போற்றும் குயிலே
சாந்த வுருவுடை நாதன் தத்துவம் யாவும் கடந்தோன்
பூந்தவி சாக அடியார் புனித இதயங்கொள் பூமான்
காந்தமென எனை யீர்த்தாள் காருணி யன்வரக் கூவாய். 4

அருளிசை பாடும் குயிலே ஆனந்த வீடருள் நாதன்
மருளினை நீக்கியாள் மன்னன் மாதவத் தோருள் திகழ்வோன்
பொருளும் மெய்ப் போகமும் நல்கிப் பூதல மீதிற் புரப்போன்
தெருளடி யார்க்கருள் ஞானத் தேசுமிக் கோன்வரக் கூவாய். 5

காவி லமர்ந்திசை பாடும் கருமை நிறங்கொள் குயிலே
பூவலர் பாமலர் சூடிப் போதம் மிகச்செய் புனிதன்
ஓவி லொளிர்கரு ணாளன் உண்மை யறிவின்ப மானோன்
காவல் புரிந்துமெய்ஞ் ஞானக் கண்ணருள் வோன்வரக் கூவாய். 6

காரெனும் வண்ணக் குயிலே காசினி உய்நெறி தந்து
சீரும் சிறப்பும் வழங்கிச் செம்பொருள் காட்டி யருள்வோன்
ஆரியர்க் காரியன் ஆனோன் அடியவர்க் காரமு தானோன்
காரண காரியம் யாவும் கடந்தொளிர் வோன்வரக் கூவாய் 7

வாக்கினில் தூய்மை செழிக்க வள்ளலைப் பாடும் குயிலே
ஆக்கல் அளித்தல் அழித்தல் மறைத்தல் அருளலென் றோதும்
சீர்க்கவி ஞர்தொழில் ஐந்தும் செய்யும் திறமை மிகுந்தோன்
பார்க்கொளி யாய்த்திகழ் தூய பாங்குடை யோன்வரக் கூவாய். 8

உண்மையன் பாலிசை பாடி ஒருவனைப் போற்றும் குயிலே
திண்மை மிகும்தவச் செல்வம் செந்திரு எய்த வருகென்(று)
அண்மையில் அன்பரை யீர்க்கும் அற்புதப் பேரரு ளாளன்
தண்மை வழங்கியென் னுள்ளும் தழைகுர வோன்வரக் கூவாய். 9

விண்ணவர் மாமுனி வோர்கள் வியக்க அருளிசை பாடும்
புண்ணிய மிக்க குயிலே பொறி புலன் யாவும் கடந்தே
திண்ணிய மெய்த்தவம் பேணத் திறனருள் சீருடைச் செம்மல்
எண்ணிய வாறிங் கெனக்கே இனிதருள் வோன்வரக் கூவாய். 10

அல்லும் பகலும் நமக்கு
ஈசன் துணையல்லாது
ஆர் துணை உண்டு சொல்வாய் மனமே
(சுவாமிகள்)

≪ சான்றோர் சால்புகள் ≫

நூலகவித்தகர்
உயர்திரு. வே. தில்லைநாயகம், M.A., M.L.S., B.T.. அவர்கள்
2724, அண்ணா நகர், சென்னை-600040.

பலர்

உலகில் கோடானு கோடி மக்கள் பிறக்கின்றனர்; வளர்கின்றனர்; வாழ்கின்றனர்; மடிகின்றனர்; மறைகின்றனர் அவர்களில் பெரும்பாலோரைப் பற்றி உலகத்திற்கு ஒன்றுமே தெரிவது இல்லை! ஏன் அவரவர் குடும்பத்தாருக்குக் கூட கொஞ்ச காலத்திற்குப் பிறகு தெரிவது இல்லை; தெரிந்துகொள்ள முடிவது இல்லை.

சிலர்

ஆனால் அதற்கு மாறாக சிலர் மட்டும் என்றும் வாழ்பவர்களாக – நின்று வாழ்பவர்களாகத் திகழ்கிறார்கள்! இது எப்படி? தங்கள் அறிவால், அனுபவத்தால், ஆற்றலால், செயலால், செய்நேர்த்தியால், வாக்கால், வாக்கு அருளால் வாழ்கிறார்கள். இதில் எத்தனையோ வகை.

வகை

வீரத்தால் உலகம் எல்லாம் விளம்பரம் பெற்றவர் சிலர். சேரன் செங்குட்டுவன், அலக்சாண்டர், கசினி முகமது, நெப்போலியன் போன்றோர் அவர்களில் சிலர்.

அறிவியலால் அகிலப் புகழ் பெற்றவர்கள் பலர். ஆர்க்கிமிடிசு, கூடன்பர்க், எடிசன், ரூதர்போர்டு, சி. வி. இராமன் போன்றோர் அவர்களில் சிலர்.

சமயத்தால் சகம் முழுதும் சாகாவரம் பெற்று வாழ்பவர்கள் பலர். புத்தர், மகாவீரர், ஏசுநாதர், முகமது நபி' சங்கரர் முதலியோர் அவர்களில் சிலர்.

சான்றோர் யார்?

இவர்களில் சான்றோர் ஒருவகை. சான்றோர் யார்?

கடமை உணர்வு, பண்பு நலன், அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை, கொல்லாமை, பணிவு, பாசம் இன்னா செய்தாருக்கு மினியவை செய்தல், மலை குலைந்தாலும் ஒழுக்க நிலை குலையாமை முதலிய நற்குணங்களால் சான்றோர் ஆகின்றனர். அது மட்டுமல்ல புது வழி காண்கின்றனர், இது எப்படி?

புதுவழியினர்

தாங்கள் கொண்ட கருத்துக்களை உலகிற்கு எடுத்துச் சொல்லி விளக்குவதற்காக சில அடிப்படைக் கருத்துகளை வாய்பாடுகள் அமைப்பில் வெளியிடுகின்றனர். அவைகளைக் காணும் போது மிக எளிமையாய் இருக்கும். ஆனால் அது வரை யாராலும் எடுத்துரைக்கப்படாமல் இருந்து அவர்களால் மட்டுமே வெளிப்பாடுகளாக உரைக்கப்பட்டவைகளாகும். மாதிரிக்குச் சில.

பொருளாதார வாய்பாடு

வளர்க்குநர்கள் (Growers) தோண்டுநர்கள் (Diggers), ஆக்குநர்கள் (Makers) நகர்த்துனர்கள் (Movers) மற்றும் உதவுநர்கள் (Helpers) ஆகியோரே பொருளாதார அடிப்படையினர்.

அதாவது விவசாயத்தாலும், தோண்டுதலாலும் பொருள்கள் தயாரிக்கப்பட்டு செய்பொருள்களாக மாற்றப்பட்டு போக்குவரத்தால் பொருள்கள்

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்ல உதவும் போது தான் பொருளாதாரம் செயற்படுகிறது என்கிருர் பி. சி. ரென் (P. C. Wren)

ஆங்கில உயர்நிலைப் பள்ளி இலக்கணம் எழுதியவர் அதே ரென் தான். ஏர்னஸ்ட்ரோ (Earnest Row) என்பவருடன் எழுதிய Work, Wealth and Wages என்ற நூலில் விளக்கியுள்ளார்,

நூலக வாய்பாடு

உலகத்தில் எழுதப்படும் நூல் ஒவ்வொன்றும் படிக்கப்பட வேண்டும். படிக்கப் பயன்படுவதற்காகவே எழுதப்பட்டது. அது படிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். வெளியான ஒவ்வொரு நூலும் யாராவது ஒருவரால் படிக்கப்பட வேண்டும். இதற்குக் காலத்தை வீணுக்காமல் செயற்பட வேண்டும். அப்படிச் செய்யும் போதுதான் நூலகம் வளரும்.

இச்செய்தியை நூலகவியல் முன்னேடி டாக்டர் அரங்கநாதன் Five Laws of Library Science என்ற நூலில் நூலக வாய்பாடு அழகாக ஐந்து வாக்கியங்களில் குறிப்பிடுகிருர். அது இதோ:

1. நூல்கள் படிப்பதற்கே (Books are for use)
2, ஆளுக்கு ஒரு நூல் (Every reader his book)
3. நூலுக்கு ஒர் ஆள் (Every book its reader)
4. காலம் கருதுக (Save the time)
5 நூலகம் வளரும் (Library is a growing organism)

அருட்சட்ட வாய்பாடு

இதுபோல உலக வாழ்வுக்கு—அருள் வாழ்வுக்குச் சட்டம் உண்டா என்ருல் பலருக்குத் தெரியாது ஆனுல் இருக்கிறது. செய்தி இதோ: அதுவும் ஐந்துதான்:

1. ஒரு தெய்வக் கொள்கை
2. மரக் கறி உணவு
3. பஞ்ச மாபாதகத் தவிர்ப்பு
4. வெள்ளி விரதம்
5. மறைந்தாருக்கு மண் மறைவு

இந்த அடிப்படை குழந்தைகளுக்கும் முதியோருக்கும் பொருந்தும்; ஆணுக்கும் பெண்ணுக்கும் இசையும்; பணக்காரருக்கும் ஏழைக்கும் ஏற்றதாகும்; படித்தவருக்கும் படியாதவருக்கும் ஒத்து வரும்; தமிழருக்கும் ஆங்கிலேயருக்கும் ஒக்கும்; முதலாளியும் தொழிலாளியும் பின்பற்றலாம்; இல்லறத்தாரும் துறவறத்தாரும் ஏற்கலாம்!

ஆதாரம் யார்?

இந்த எளிய கருத்தை-ஆனுல் நெடு வாழ்வு தரும் உயரிய கருத்தை-எங்கு காணலாம்? நூல்கள் இருக்கின்றனவா, எங்கு கிடைக்கும் என்கிறீர்களா?

முதல் நூல் அதாவது-முதலாவது படிக்க வேண்டிய நூல் எது தெரியுமா? அதுதான்.

சமயப் பொது நெறி கண்ட சற்குரு நாதர் 1982 36 பக்கங்கள்தான். பெரிய காஞ்சிபுரம் (631502) நிமந்தகார ஒற்றைவாடை வீதியிலுள்ள வித்வான் சு. மங்கையர்க்கரசி அவர்களிடம் பெறலாம் விலை ரூ 6 தான்.

இதையே காவிய நயத்தோடு படிக்க வேண்டுமா? பாலகவி வேங்கடராமன் அவர்கள் பாடிய கருணை மிகு வள்ளல் அருள் நிறை சரிதம் 1981 படியுங்கள்! பக்கம் 1145-தான் பாடல்கள் 4672 விலை ரூ. 60 மட்டுமே கிடைக்குமிடம் திருமிகு அ. வெங்கடாசலம், ஸ்மார்ட் பிரிண்டர்ஸ் உரிமையாளர், 161 கோவிந்தப்ப நாயக்கன்தெரு, சென்னை 600001.

இதற்கு எல்லாம் மூலநூல் எது என்று கேட்கத் தோன்றுகிறதா? நியாயம்தான். இதற்கு எல்லாம் மூலநூல்-முதல்நூல் 1937-ல் வெளிவந்தது. எழுதியவர் ஆட்சிச் சொற் காவலர் திரு. கீ. இராமலிங்கனுர் அவர்கள். அதன் நான்காம் பதிப்பு 1974-ல் வெளிவந்தது. வேண்டுமானுல் திரு வெங்கடாசலம் அவர்களுக்கோ அல்லது திருமிகு மங்கையர்க்கரசி அவர்களுக்கோ எழுதுங்கள்.

அல்லது நூலகத்திற்கு வாருங்கள் படிக்கலாம்.

இதற்கெல்லாம் ஆதாரம் யார்? அவர் தான்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்
16-9-1856—12-1-1923

— —

அண்ணலார் எண்ணமெலாம் அடியார்கள்
எங்குள்ளார் என்று நாடும்
அண்ணலார் மொழியெல்லாம் மறைமொழியாய்
அடியர்செவி பாய்ந்தி னிக்கும்
அண்ணலார் மூச்செல்லாம் அனைத்துயிரின்
குறைநீக்கி நலம்வி ளைக்கும்
அண்ணலார் அடிமலர்தோய் இடங்களில்எல்
லாவளமும் செழிக்கு மாலோ.

—கருணைமிகு வள்ளல்-பக்கம் 394

அருளென்னும் உருவோனே வா! வா!

அருளென்னும் உருவோனே வாவா—அருள்
அற்புதம் யாவும்செய் செயலோனே வா வா
பொருள்அள்ளி அருள்வோனே வா வா—நல்ல
போகம் அனைத்தும் அருள்வோனே வா வா (அரு)

இருள்நீக்கி அருள்வோனே வா வா—என்னை
ஏக வழிக்கண் இழுப்போனே வா வா
தெருள்நல்கிக் காப்போனே வா வா—தீய
ஜென்மப் பகையைச் சிதைப்போனே வா வா (அரு)

சத்தா யொளிர்வோனே வா வா—தூய
சக்தி அனைத்தும் தருவோனே வா வா
சித்தாய்த் திகழ்வோனே வா வா—மேலாம்
சித்தாட லெல்லாம் புரிவோனே வா வா (அரு)

ஆனந்த மானோனே வா வா—பர
மானந்த வாழ்வை அருள்வோனே வா வா
தானந்த மில்லோனே வா வா—ஒப்பில்
சச்சிதா னந்த வடிவோனே வா வா (அரு)

எங்கும் இருப்போனே வா வா—எனக்(கு)
ஏகாந்த மோனவீ டீவோனே வா வா
மங்குல்நேர் வள்ளலே வா வா—உள்ள
மையல் தவிர்த்தின்ப மீவோனே வா வா (அரு)

பொற்பு மிகுந்தோனே வா வா—ஞான
போதம் புகட்டி யருள்வோனே வா வா
சொற்பொரு ளானோனே வா வா—எண்ணம்
சொல்செயற் கெட்டாச் சுடரோனே வா வா (அரு)

அருவுரு வானோனே வா வா—எங்கும்
அருளால் அனைத்தும் புரிவோனே வா வா
கருநீக்கும் கர்த்தனே வா வா—சூழும்
கன்மம் சுடும்கன லானோனே வா வா (அரு)

வேதாந்த விமலனே வா வா—உண்மை
விளம்பும் சித்தாந்த விகிர்தனே வா வா
நாதாந்த நாடனே வா வா—பர
ஞானம் விளக்கும் போதாந்தனே வா வா (அரு)

மேலாம் யோகாந்தனே வா வா —தூய்மை
மேவும் கலாந்த விளக்கமே வா வா
பாலாழி யானேனே வா வா —விண்ணோர்
பரவி அருந்தமு தானேனே வாவா (அரு)

கண்மூன் றருள்வோனே வா வா—கடைக்
கண்ணேக்கத் தால்அருள் செய்வோனே வா வா
ஓண்மூலா தாரனே வா வா —உயர்
ஓங்கார மாகி ஒளிர்வோனே வா வா (அரு)

கைப்பொரு ளானேனே வா வா — சற்றும்
கைவிடா தென்னுட் கலந்தோனே வா வா
மெய்ப்பொரு ளானேனே வா வா —மாயை
மேகம்சூ ழாச்சிற் கதிரோனே வா வா (அரு)

செம்மை அருள்வோனே வாவா—உண்மைச்
சீடர் குழாத்தென்னைச் சேர்ப்போனே வாவா
மும்மை மலம்கொய்வோய் வா வா—பர
முத்தியின்பத்தைக் கொடுப்போனே வா வா (அரு)

இருடி நகரோனே வா வா —உள்ள
இன்பம்எல் லாம்எனக் கீவோனே வா வா
சுருதி முடிவோனே வா வா—யாரும்
சொல்லா உயர்நெறி சொல்வோனே வா வா (அரு)

கருதிய தீவோனே வா வா—அதி
காலை எழுப்பும் கருத்தனே வா வா
பருதி அனையோனே வா வா—என்றன்
பாவம் மன்னித்தாள் பரமனே வா வா (அரு)

நீராட்டி யருள்வோனே வா வா—உள்ளம்
நின்மல மாக்கும் நிருபனே வா வா
சீராட்டிக் காப்போனே வா வா—ஞானச்
செல்வம் நிறைத்துட் செழிப்போனே வா வா (அரு)

நற்றவம் நல்குவோய் வா வா—ப்ரம்ம
ஞானனந் தம் பெற ஊக்குவோய் வா வா
பற்றெழித் தாளுவோய் வா வா—ஈடில்
பரம பதச்சுகம் ஊட்டுவோய் வா வா. (அரு)

பொல்லார் இருப்பிடத்தில் போகாதே-மனமே
பொல்லாங்கு நேர்ந்துவிடும் கண்டாய்
நல்லார் இருப்பிடத்தை நாடி நாடிநீ
நலத்தைத் தேடிக் கொள்வாய் மனமே
(சுவாமிகள்)

இரெட்டியப்பட்டி சுவாமிகள்

டாக்டர். உயர்திரு. மு. மு. இஸ்மாயில் அவர்கள்
தமிழக உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி.

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் 60-வது ஆண்டு குருபூஜையின் போது மலர் ஒன்று வெளியிட ஏற்பாடுகள் நடக்கின்றனவென்றும், அந்த மலருக்கு நான் ஒரு கட்டுரை எழுதித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்

நான் பெரிதும் தயங்கினேன், எனினும் 'ஆட்சிச் சொற்காவலர்,' 'சாந்த சீலர்' — உயர்திரு. கீ இராமலிங்கனூர் அவர்கள் இதில் கொண்டிருக்கும் ஈடுபாட்டையும், பாலகவி மி. கே வேங்கடராமன் தங்களையே இதற்காக அர்ப்பணித்துக்கொண்டிருப்பதையும் என்னால் பாராட்டாமலும், வியக்காமலும் இருக்க முடியவில்லை. அதன் விளைவுதான் இச்சிறு கட்டுரை.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருட்ப்ரஸாதத்தையும், அவர்களுடைய வரலாற்றையும் நான் படித்துப் பார்த்தேன் பாரதப் பெருநாட்டில் நீண்ட காலமாக முனிவர்களும், ஞானிகளும், சித்தர்களும் சங்கிலித் தொடர்போலத் தோன்றிக்கொண்டே வந்திருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறையும் வெவ்வேறாக இருந்த போதிலும், அவர்கள் அனைவரும் சத்தியத்தைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் வேறுபட்டவையல்ல. காரணம்' 'உண்மை' ஒன்று தான்.

இரெட்டியப்பட்டி சுவாமிகளுடைய 'சட்ட'த்தில் இடம்பெற்றிருக்கும் கொள்கைகளைக் கண்டேன். சாதாரண வாழ்வில் ஈடுபட்டிருக்கும் மக்களால், அன்றாட வாழ்வில் அவையனைத்தையும், பின்பற்ற முடியாவிட்டாலும், அவற்றில் அடங்கியுள்ள சில நெறியைப் போற்றாமல் இருக்க முடியாது.

அந்தச் 'சட்ட'த்தில் இடம் பெற்றிருக்கும் கொள்கைகளில்,

> "பரம்பொருள் ஒருவரே என்ற தீர்மானமான எண்ணம் கொள்ள வேண்டும். எந்த மதத்தினையும் நிந்தித்தல் கூடாது."

> "'வேலைக்கு ஏற்ற கூலி' என்பது போல் எந்த அளவு உறுதியும் ஊக்கமும் கொண்டு கைப்பற்றுகிறோமோ, அந்த அளவுக்குக் கைமேல் பயன் கிட்டுவதையும், தூய நல்வாழ்வு அமைவதையும், இறைவன் அருள் முன்னின்று எல்லா வகைக்கும் வழி காட்டி அழைத்துச் செல்வதையும், நாம் நன்கு உணர்ந்து அருள் துணை கொண்டு முன்னேறலாகும்."

என்பன போன்றவை என் அறிவையும் உணர்வையும் கவர்ந்தன.

இவையும் காலாகாலமாகப் பல பெரியோர்களும், ஞானிகளும் சொல்லி வருபவைதாம். உண்மையில் இவற்றை மறுப்பவர்கள் கூட யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் செயலில் அனுஷ்டிப்பவர்கள் தான் அரிதாக இருப்பார்கள். இங்கோ இவற்றை ஆர்வத்தோடும், ஈடுபாட்டுடனும், பக்தியோடும் உறுதியாகப் பலபேர் தங்கள் வாழ்க்கையில் இன்றும் அனுஷ்டித்துக் கொண்டு வருகிறார்கள்; அதனை மற்றவர்களிடமும் பரப்ப முயல்கிறார்கள் என்பதை அறியும்பொழுது, அத்தகையவர்களை உள்ளம் நெகிழ்ந்து போற்றிப் பாராட்டி, அவர்களுடைய எண்ணிக்கை பெருகுமாக என்று இறைவனைப் பிரார்த்திப்பதல்லாமல் என் போன்றோர் வேறென்ன செய்யக்கூடும்?

குருவை ஏத்துவாம்

கூருவ றைபுகாத்
திருவ ளர்நெறி
தருசி றந்தசற்
குருவை யேத்துவாம். 1

அகமல ரமர்ந் (து)
இகபரம் தரும்
சுகவடி வுடைப்
பகவற் போற்றுவாம். 2

ஆசிலா அருள்
தேசு நல்கியுள்
மாசு நீக்கியாள்
ஈசற் போற்றுவாம். 3

சுசியு டையவர்
பசித விர்த்துமெய்
யிசையை நல்கருள்
விசையை ஏத்துவாம். 4

கரவி லாருளம்
மருவி யாண்டிட
வருகு ருபதம்
பரவி வாழ்த்துவாம். 5

அன்னை தந்தையாய்
மன்னு தெய்வமாய்
இன்னல் தீர்த்தருள்
மன்னை யேத்துவாம். 6

அற்பு தம்பல
பொற்பு டன்செயும்
தற்ப ரன்புகழ்
செப்பி யேத்துவாம். 7

நற்கு ணம்தரும்
சற்கு ருபரன்
பொற்க ழல்எணி
நெக்கு ருகுவாம். 8

செம்பொ ருள்தனை
இம்பர் ஈந்தருள்
நம்பி நற்கழல்
நம்பி யேத்துவாம். 9

திருவெ லாம்தரும்
குருவ ருள்மது
பருகி டமனம்
உருகி யுன்னுவாம். 10

ஒருவ ழிபுகல்
குருவ டிநிழல்
மருவும் அன்பினல்
பரவி வாழ்த்துவாம். 11

காலம் காணரும்
சீலன்பொற் பத
மூலம் போற்றியிஞ்
ஞாலத் துய்வமால் 12

குருவருளால் குவலயத்தில் குறைதீர்ந்து நலம்பெருகும்
குருவருளால் வளம்பலவும் கொழிக்கஅருள் வாழ்வமையும்
குருவருளால் தவமோங்கும் குருவருளால் மனம்கனியும்
குருவருளால் உண்டாகும் நலம்அனைத்தும் கூறெணுமோ?

— கருணைமிகு வள்ளல்—பக்கம்-7

குருநாதர் தொடர்பு

உயர்திரு. G. சரவணப் பிள்ளை அவர்கள்,
நிலக்கிழார், திருவிசலூர்.

பேரன்புமிக்க தாய் அவர்களுக்கும் அடியார் பாத தூளிகளுககும் அடிமை அநேக நமஸ்காரம் செய்து எழுதிக் கொண்டது, எனக்குத் தற்சமயம் வயது எழுபத்தாறு ஆகிறது. நான் பிறந்தது முதலே பல இடங்களைப் பார்க்குந் தோறும், பல நற்செயல்களைச் செய்ய வேண்டும் என்று எண்ணுவதுண்டு. ஆனால் நம் இரெட்டியப்பட்டி சுவாமிகளைப் பற்றிக் கேள்விப் பட்டதுமே, உலகத்தில் இப்படி ஒரு தெய்வம் உண்டா என்று எண்ணினேன்.

ஆனால், 1950-ல் நான் இரெட்டியப் பட்டி சன்னிதானம் சென்றதும், இது நடக்குமா? என்று எண்ணிவிட்டேன். அதன் பிறகு, ஆண்டவர் என்னை ஆட் கொள்ளத் திருவுளம் கொண்டதால், நம்பிக்கை ஏற்பட்டு, சட்டத்தை மேற் கொண்டேன்.

நாளாக ஆக, இப்படி ஒரு தெய்வம் உலகத்தில் எங்குமே இல்லை என்று எண்ணி, பல திட்டங்கள் போட்டேன். அது நடக்குமா? என்று நான் ஐயப்பட்டதும் உண்டு. நடப்பது நடக்கட்டும் என்று சுவாமிகளின் அடியார் ஒருவரை இரெட்டியப்பட்டிக்கு அனுப்பி, கோவில் விரிவாக்குவதற்கு ஆன திட்டத்துடன், பக்கத்தில் உள்ள சில மனைகளையும், புஞ்சை நிலங்களையும் விலை பேசுமாறும், கோயில் பூசை சரியாக நடக்கும்படி கவனிக்கு மாறும் ஏற்பாடு செய்தேன்.

"பிற்காலத்தில் இது நடைபெறப் போகிறது, இப்போது நீ இதற்கு முயற்சி செய்யாதே" என ஆண்டவர் குறிப்பு தோன்றியதால், மேற்கொண்டு முயல்வதை நிறுத்தி வைத்தேன்.

பிறகு சிலகாலம் கழித்து, ஆண்டவர் அடியாராகிய திரு. கிருஷ்ணமூர்த்தி சுவாமி என்னிடம் வந்து, தன்னை கோவில் திருப்பணிக்கு ஆண்டவர் அழைத்ததாக வும் "என்னிடம் வசதியில்லையே; நான் எப்படிச்செய்வேன்" என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில், "திருவிசநல்லூர் சரவணப் பிள்ளையிடம் பணம் இருக்கிறது; நீ போய்க் கேள்; கொடுப்பார்" என்று சொன்னதாகவும், என்னிடம் வந்து விவரத்தைச் சொல்லி ஒரு நோட்டு புத்தகத்தைத் தந்து, கொடுக்கும் தொகையை அதில் எழுதிக்கையெழுத்துப் போடச் சொன்னார்கள்.

அதில் ரூபாய் ஆயிரத்துக்குக் கையெழுத்துப் போட்டுப் பணமும் கொடுத்து அனுப்பினேன். தன்னுடன் கோவில் திருப்பணிக்குப் பாலகவியும் வருகின்றார் என்றும், இருவரும் தான் கோவில் திருப்பணிக்குப் போகிறோம் என்றும் சொன்னார். ஆனால் இவர்கள் இருவரும் தொழில் நுணுக்கம் தெரியாத வர்கள். ஆதலால், சிலகாலம் கோவில் திருப்பணி நடைபெறாமல் தடைப் பட்டு நின்றுவிட்டது. ஆனால், அஸ்திவாரம் மட்டும் மிகவும்

பலமாக போடப்பட்டு, பூமி மட்டத்திற்கு வந்து நின்று விட்டது. அதன் பிறகு, பாலகவி சுவாமிகள் மனது புண்பட்டு, கோயில் திருப்பணிக்குச் சரியான முடிவு தெரியும் வரையில் உண்ணுவிரதம் இருப்பதாகத்தொடங்கி, இரண்டு வாரம் உண்ணுவிரதம் இருந்தார்.

அப்போது தற்செயலாக நான் பிள்ளையார்குப்பம் போயிருந்தேன். பூஜை அறையில் படுத்திருக்கும் போது, குருநாதர் அடங்கி விட்டார் என்று அழுத வண்ணம் விழித்துப் பார்க்கையில், ஒன்றும் புரியாமல் இருந்தது, அதன் பிறகு, பிள்ளையார்குப்பம் அன்னையும் நானும் இரெட்டியப்பட்டி சென்றிருக்கையில், பாலகவி உண்ணுவிரதம் இருக்கும் விஷயம் கேட்டு, அதற்குத் தான் ஆண்டவர் குறிப்புக் காட்டியிருக்கிறுர் என்று தாயிடம் சொல்லி, உடனே பாலகவி சுவாமியிடம் தெரிவித்து உண்ணுவிரதத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது

அதன்படி ஆண்டவர் உத்தரவு கேட்டு, உண்ணுவிரதத்தை நிறுத்தி விட்டார். பிறகு காஞ்சிபுரம் தாய் அவர்கள் ஆண்டவர் சந்நிதியில் கலசம் வைத்து, அதை அடிமையின் தலைமேல் வைத்து, கோயிலைச் சுற்றி வந்து, அஸ்திவாரத்தின் மேல் தெளிக்கும்படி சொன்னுர்கள். அப்போது இருந்த நிலைமையில், 'இது எப்படி நடந்தேறப் போகிறது?' என்று நான் கவலைப்பட்டு, மன வேதனையுடன் அவர்கள் சொன்னதையும் செய்தேன்.

பல அடியார்கள் கண்ணீர் விட்டு மனம் கலங்கி நிற்பது கண்டு ஆண்டவர் அருள் புரிந்தார். அதுவரையில் தீவிரமாக ஈடுபடாமல் இருந்த, சென்னை திரு. சாம்பசிவ சுவாமி அவர்கள் தாமாகவே முன் வந்து, திருப்பணியை நடத்துவதாகவும், ஆண்டவர் அருள் புரிய வேண்டுமென்றும் தீர்மானத்திற்கு வந்தார்.

ஷி சுவாமிகள் இரெட்டியப்பட்டியில் தங்கிக்கொண்டு, தம் கையாலேயே சமையல் செய்து சாப்பிட்டுக்கொண்டும், பல அடியார்களின் உதவியைக் கொண்டும், கோயில் திருப்பணியை நடத்தி விட்டார்கள். கும்பாபிஷேக சமயத்தில், சாம்பசிவ சுவாமிகள், கும்பாபிஷேகச் செலவிற்குப் பணம் இல்லாமல், பல அடியார்களிடம், 'கைமாற்ருகவாவது பணம் கொடுங்கள்; கும்பாபிஷேகம் ஆனதும் நான் கொடுத்து விடுகிறேன்' என்று கேட்க, சில அடியார்கள் 'இன்றைக்குக் கொஞ்சம் கூடப் பணம் இல்லாமல் திண்டாடுகின்றீரே; நாளை பன்னிரண்டு மணிக்கெல்லாம் சுமார் பன்னிரண்டாயிரம் ரூபாய் பட்டுவாடா செய்ய வேண்டுமே; என்ன செய்வீர்கள்?' எனத் திரும்பவும் அவரைக் கேட்டு விட்டார்கள்.

அதற்கு மேற்படி சுவாமி அவர்கள், 'எல்லாம் ஆண்டவர் கொடுத்து விடுவார்' என்று தயங்காமலே சொல்லி, காரியத்தை தயக்கம் இல்லாமலே முடித்து விட்டார்கள். பிறகு, அவர் கவலைப்பட்ட முதல் நாள் இரவு ஆறு மணியிலிருந்து, மறு நாள் பன்னிரண்டு மணிக்குள், தேவையான பன்னிரண்டாயிரத்துக்குப் பதினுன்கு ஆயிரம் ரூபாய் அடியார்கள் மூலம் வசூல் ஆகி விட்டது இதைக் கண்ட அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர் ஆண்டவர் அருளின் பெருமையை உணர்ந்து போற்றினர்.

இதற்காகப் பாடுபட்ட திரு. கிருஷ்ணமூர்த்தி சுவாமிகள், திரு. பாலகவி சுவாமிகள், திரு. சாம்பசிவ சுவாமிகள் ஆகிய இவர்களின் மூன்று குடும்பங்களையும் யாவரும் போற்றி வணங்காமல் இருக்க முடியாது. இவர்களுக்கு அடியார் உலகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது எனலாம்.

பொது வாழ்வில் ஈடுபடுவோர்க்குப் பல இன்னல்கள் தோன்றுவது உண்டு. அதை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிட்டு, நாம் செல்லும் வழி சரியா? தப்பா? என்று ஆண்டவரிடம் அடிக்கடி முறையிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். நாம் செல்லும் வழி சரியாக இருந்தால், சில புத்திமதிகளைச் சொல்லி, ஆண்டவர் நம் கையைப் பிடித்து அழைத்துச் செல்வதுண்டு. நாம் செல்லும் வழி தவருன தாக இருந்தால், சில ஆபாசமான நிகழ்ச்சிகளைக் காட்டுவார். அதைக் கண்டு நாம் உடனே திரும்பிவிட வேண்டும். திரும்பாவிட்டால் பலத்த கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும்.

'அரிது அரிது மானிட ராதல் அரிது' என்று தொடங்கிய ஒளவைப் பிராட்டியார், 'தானமும் தவமும் தான் செய்வராயின், வானவர் நாடுவழி திறந்திடுமே' என்று அருளியுள்ளார். ஆதலால் நாம் தானம், தர்மம் செய்ய முன் வர வேண்டும். தவ வாழ்வு வாழப் பழக வேண்டும்.

ஆனல், பொருள் கைக்கு வந்தவுடன், நம் குடும்பச் செலவிற்கு வேண்டுமே; நம் வாரிசுகளுக்கு வேண்டுமே என்று சேர்த்து வைக்க மனம் நாடுமே யொழிய, தர்மம் செய்ய மனம் வராது. அதில்தான் சூக்ஷ்மம் இருக்கிறது. அப்படி நமது மனம் மாறி, தர்ம வழியில் செல்லாது, பொருள் சேர்க்கும் வழியில் செல்லும் போது, ஆண்டவர் நம்மைத் தட்டி விட்டு விடுவார். அப்போதாவது நமக்குப் புத்தி வந்து, தர்ம வழியில் சென்று விட்டால், உடனே ஒன்றுக்குப் பத்தாகக் கொடுத்து விடுவார். இது எனது அனுபவ உண்மை.

'நோய்' என்பது உடன் பிறந்து கொல்லும். நாம் என்று பிறப்பு எடுத்தோமோ, அன்று முதலே வியாதியும் ஆரம்பமாகி விட்டது. ஆதலால்தான் ஆண்டவர் எளிய வாழ்க்கையில், எளிய மக்களுக்கு இந்தச் சட்டத்தைக் கொடுத்திருக்கிருர். பல ஆண்டுகள் தவம் இருந்து இறைவன் அருள் பெற்று, அனுமதி பெற்று, மாபெருங் கருணையால் வகுத்துக் கொடுத்த வழி இது. சாதாரணமாக ஒருவர் நோய் வாய்ப்பட்டால், உடனே மருத்துவச் சாலைக்கு ஓடுவதுண்டு. ஆனல் அடியார்களுக்கு இம்மாதிரி நோய் ஏற்பட்டால், சிலர் இன்னது செய்வது என்று தெரியாமல், பயந்து போய், மருத்துவச் சாலைகளில் மருத்துவரை நாடி விடுகின்ருர்கள்.

அம் மாதிரி செய்யாமல், நோய் வாய்ப்பட்டவர்கள், அடியார் வீட்டுக்குச் சென்று, அவர்களைக் கேட்டோ, சுவாமி சன்னிதிக்குச் சென்ருே நோய் தீர்த்துக் கொள்ளலாம். அதற்கு முடியாவிட்டால், அடியார் ஒருவரை அவர்கள் வீட்டுக்கு அழைத்தோ, அல்லது கடிதம் மூலம் தெரிவித்தோ, நன்மை பெறலாம். இது நானும் பலரும் அனுபவித்த உண்மை; ரகசியம்.

நானும் திரு. நாயுடு சுவாமியும் சில சமயம் எண்ணியதுண்டு: இரெட்டியப் பட்டி செல்வதில் பல தொந்தரவு இருப்பதால், வேறு ஏற்பாடு செய்ய, திட்டமிட்டோம். அன்று இரவு திரு. நாயுடு சுவாமி என் வீட்டில் தங்கி இருந்தார். எனக்கு போலீஸ் மூலம் கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவு வந்திருப்பதாக நிகழ்ச்சி நடந்தது. நான் உடனே திரு. நாயுடு சுவாமியிடம் சொல்ல அதே நிகழ்ச்சி தமக்கும் நடந்ததாகக் கூறினர். நாங்கள் போட்டிருந்த திட்டத்தை அடியோடு கைவிட்டோம்.

நமக்குக் கஷ்டம் நேரும் காலத்தில் **'ஓம் குரு நாதா'** என்ற மந்திரம் ஜபித்தால் அதுவே போதும் என்று குருநாதர் சொன்னதாக, திரு. நாயுடு சுவாமிகள் அடிக்கடி பல முறை என்னிடம் சொல்லி இருக்கிருர்கள்.

அடியார்கள் பலரிடம் பலகுறைபாடுகள் இருக்கலாம். அதை தெரிந்தோ

தெரியாமலோ வெளியில் பேசக் கூடாது. அப்படிப் பேசினுல், அந்தக் குற்றத்தை அவர்களே செய்யும்படி வைத்துப் பலரிடம் இழுத்துக் காட்டி விடுவார் நம் ஆண்டவர். இது பலர்க்குத் தெரிவதில்லை. புரிவதும் இல்லை. இந்த முறை தெரியாமல், நானும் பேசி, பல தடவை அகப்பட்டுக் கொண்டு, கஷ்டப் பட்டிருக்கிறேன்.

இரெட்டியப்பட்டி சுவாமிகளுடைய அடியார்கள் யாருக்கும் நிகரில்லை. ஆனுல் தன்னைப் பற்றிப் பெருமையாக நினைக்கக் கூடாது. பிறரைப் பற்றித்தான் பெருமையாக நினைக்க வேண்டும், அடியார்களுக்கு நிகரில்லை என்றும். நாளுக்கும் கோளுக்கும் அவர்கள் அஞ்ச வேண்டியதில்லை யென்றும் பல மகான்கள் முன்னமேயே பாடியுள்ளார்கள் இரெட்டியப்பட்டி சுவாமிகளுடைய கொள்கையும் அதுவேயாகும்.

குருநாதர் சட்டநெறி ஏகவழிபாடு. எந்த மதத்தினரும் அவரவர்கள் இஷ்டப் பட்ட தெய்வத்தைப் பூஜை செய்யலாம். பிற மதத்தினரையோ, பிற தெய்வங்களையோ இகழ்வது பெரிதும் மடமையாகும். யாவருக்கும் தெய்வம் ஒன்றே தான். சில அறிவாளிகள் கூட 'உங்கள் சாமியை கும்பிட்டால் வேறு சாமியைக் கும்பிடக் கூடாதாமே! என்று என்னிடம் பல பேர் கேட்டதுண்டு. அதற்கு நான் எங்களது கொள்கை மனதை ஒரு நிலையில் நிறுத்த வேண்டும் என்பதாகும். அதற்கு தியானம் முக்கியமானது. தியானத்திற்கு ஒரு தெய்வத்தை மனதில் நிலைநிறுத்த முடியாத நீ, பலதெய்வத்தைக் கும்பிட்டு, எதை மனத்தில் நிறுத்துவாய்? அதுதான் கருத்தேயொழிய வேறு தெய்வத்தைக் கும்பிடக்கூடாது என்று அர்த்தம் இல்லை; என்று சொல்லியிருக்கிறேன்.

நான் அனுபவித்த வரையில் இரெட்டியப்பட்டியில் பல மக்களுக்கு அன்னம் அளித்து வழிபடுவதுதான் ஆண்டவர் கருத்து என்பது தெரிகிறது.

யாருக்கும் தொண்டு செய்ய வேண்டும். கோபம் கூடாது. பொறுமை கூடாது. ஜாதி வேற்றுமை கூடாது. ஏழை பணக்காரன் என்ற எண்ணம் கூடாது. வெந்நீர் அருந்தக் கூடாது. மாமிசம் சாப்பிடக் கூடாது. பொய் திருட்டு கூடாது. காமவேட்கைப்படல் ஆகாது. மது பானம் அருந்தக் கூடாது.

ஆனுல் அதில் ஈடுபட்டவர் சட்டத்தில் சேரக் கூடாது என்று அர்த்தம் இல்லை. இதை ஆண்டவரிடம் அடிக்கடி முறையிட்டு, என்னைப் புனிதமுள்ளவனுக ஆக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். நாம் எவ்விதக் குற்றமும் செய்யக்கூடாது. "நான் செய்வது எல்லாம் உன் அருள் என்றும், எனக்கு வேண்டுவதை நீ கொடுத்து, என்னைக் கை விடாது உன் அருளால் இனிது காப்பாற்ற வேண்டும்" என்று முறையிடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

'இவை எல்லாம் எனையாளும் ஈசன் செயல்' என்ற எண்ணத்துடன் வாழ் வாற்ற வேண்டும். எதுவும் நடை முறையில் கொண்டு வருவது கடினம். முன் வினைப்பயன், விட்ட குறை தொட்ட குறை அல்லாது எதுவும் நடை பெருது. எல்லாம் இனிது நடந்தேற ஆண்டவர் அருள்புரிய வேண்டுகின்றேன்.

———

காப்போன் ஒருவன் உண்டு

காப்போன் ஒருவன் உண்டு பேதை நெஞ்சமே—நீ
கவலைப் படுதல் வேண்டாம் பேதை நெஞ்சமே
பூப்போல் விளங்கிடுவாய் பேதை நெஞ்சமே—அவன்
பொன்னடியை உன்னிஉய்வாய் பேதை நெஞ்சமே

அன்பில் மலர்ந்திடுவான் பேதை நெஞ்சமே—அவன்
அருளால் உலகம்உய்யும் பேதை நெஞ்சமே
என்புள் ளுருகவைப்பான் பேதை நெஞ்சமே—அன்பர்
இதயந் தனில்உறைவான் பேதை நெஞ்சமே

செல்வ வளம்கொழிப்பான் பேதை நெஞ்சமே—அருட்
செம்மை மிகவிளைப்பான் பேதை நெஞ்சமே
வல்வினை கள்தவிர்ப்பான் பேதை நெஞ்சமே—அருள்
வாழ்வு கொடுத்தருள்வான் பேதை நெஞ்சமே

'சட்டம்' என் றென்றுகண்டான் பேதை நெஞ்சமே—அதைத்
தரணிக் களித்(து) உவந்தான் பேதை நெஞ்சமே
நிட்டை முடிவருள்வான் பேதை நெஞ்சமே—கழல்
நிழலை வழங்கிடுவான் பேதை நெஞ்சமே

எல்லாம் அவன்செயல்காண் பேதை நெஞ்சமே—இதை
எப்பொழுதும் மறவேல் பேதை நெஞ்சமே
நல்லார் குழாம் விழைவாய் பேதை நெஞ்சமே—எல்லா
நன்மையும் எய்திடலாம் பேதை நெஞ்சமே

அவனன்றி ஓரணுவும் பேதை நெஞ்சமே—என்றும்
அசையா தெனல்சத்தியம் பேதை நெஞ்சமே
புவனம் தனுகரணம் போகமெல்லாம்—அவன்
பொருந்த அளிப்பவன்காண் பேதை நெஞ்சமே

உடல் பொருள் ஆவியெல்லாம் பேதை நெஞ்சமே—அவன்
உடமை யெனஉணர்வாய் பேதை நெஞ்சமே
கடலிற் பெரியதெனும் கருணையுளோன்—அவன்
காட்டும் வழிநடப்பாய் பேதை நெஞ்சமே

எல்லாம் நன்மைக்கெனவே பேதை நெஞ்சமே—நீ
எண்ணி அமைதி கொள்வாய் பேதை நெஞ்சமே
எல்லாப் பொருளினுள்ளும் பேதை நெஞ்சமே—அவன்
இன்னருள் கண்டுவப்பாய் பேதை நெஞ்சமே

குருநாதன் நாமமொன்றே பேதை நெஞ்சமே—கூறின்
குறைதவிர்ந் துய்ந்திடலாம் பேதை நெஞ்சமே
குருநாதன் சட்டமொன்றே பேதை நெஞ்சமே—இந்தக்
குவலயத் தைப்புரக்கும் பேதை நெஞ்சமே

முற்பிறவி யின்பயனாய் இப்பிறவி
யிற்பிணிகள் வரவும் கூடும்
இப்படியில் உறுபிணிகள் எண்ணிலவாம்
அவற்றில் எதுவரினும் அண்ணல்
சொற்படிவை கறைமாலை தண்ணீரில்
மூழ்கிஉளத் தூய்மை யோடும்
சிற்பரன் தண் ணருள்நாடி நீறுதுழாய்
அமைதீர்த்தம் பருகல் வேண்டும்.

—கருணைமிகு வள்ளல்-பக்கம் 347

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாற்று ஓவியங்கள்

(ஓவியர் திரு. S. K. சாரதி அவர்கள், சென்னை.)



1. சுவாமிகள் திருஅவதாரம்




2 கல்வி பயிலச் செல்லுதல்



3. ஏழைகட்கு உதவும் ஏழை பங்காளரும் வெறுப்புற்ற பெற்றோரும்




4. மதுரை மாநகரில் கணக்குப் பிள்ளை




5. திருமணம்



6. வைகையாற்றின் தென்கரையில்
பரிபூர்ணர் திருக்காட்சி



7. குற்ருலம் குகையில் அருந்தவம்



8. அருட்சட்டம் அருளுதல்

அருட்கடலாம் ஆண்டவர்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத்தலைவர்,
உயர்திரு: **S. R. ஆதிதாசன்** அவர்கள், புதுவை.

ஆண்டவரின் அருளால் நிகழ்ந்த அற்புதங்கள் எண்ணற்றவை 1937-ஆம் ஆண்டு அடிமையை ஆண்டவர் ஆட்கொண்டார். புதுவை மாநிலம் மணமேடு எனும் ஊரில் ந. இராபத்திர ரெட்டியார் இல்லத்தில் ஆண்டவரின் "வழிகாட்டும் வான் பொருள்" கிடைக்கப் பெற்று ஆண்டவரால் ஆட்கொள்ளப் பட்டு அது முதற்கொண்டு இதுவரை சட்டநெறியில் இருந்து வரும் அடிமையின் வாழ்வில் ஆண்டவர் அருளால் நடந்த அருள் நிகழ்ச்சிகள் பலவாகும்.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல ஆண்டவரின் அருள் நிகழ்ச்சிகளை விளக்க ஒரு சில அனுபவங்களைக் கூற அடிமை விழை கின்றேன்.

புதுவை மாநிலம் கரையாம்புத்தூர் எனும் ஊரில் வாழ்ந்து வரும் இராமச்சந்திர ரெட்டியாரின் மனைவி தனலட்சுமி அவர்கள் செய்வினையால் சூழப்பட்டு, ஆறு வருடகாலம் பற்பல இன்னல்களை அனுபவித்து பின்னரே ஆண்டவர் அருளால் ஆட்கொள்ளப் பட்டதால் அடிமை இல்லம் வந்தனர். நாய், பச்சைக்கிளி, ஆஞ்சநேயர், கன்னிமார், காளி போன்ற பலரை செய்வினை செய்தவர். தூதனுப்பித் துன்பம் தர, வந்தவை எல்லாம் ஆண்டவரிடம் புகலடைந்து விட்டதால், தனலட்சுமிக்கு ஓரளவு துன்பம் குறைந்தது. கடைசியாக செய்வினை செய்தவர்- பாவை வைத்து, தனலட்சுமியை, ஆடையின்றித் திரிய வைக்க நினைத்து விட்டனர். அப்போது ஆண்டவர் நிகழ்த்திய நிகழ்ச்சி அப்பப்பா! நினைத்ததுமே நெஞ்சு நெகிழ்கிறது.

ஒருநாள் காலை ஸ்நானம் முடித்து அடிமை நிஷ்டையில் அமர்ந்து விட, தனலட்சுமி வெளியே கிளம்பி விட்டது. அது அலட்சியமாக இரு தெருக்களைக் கடந்ததும், அடிமை வீட்டில் பால் கறக்கும் பால்காரர் இலட்சுமணன் என்பவர் தெருமுனையில் தனலட்சுமியைக் கண்டு திரும்பவும் வீடு சேர்த்தார். அதே சமயம் நிஷ்டை நிறைவு பெற்றெழுந்த அடிமையிடம், தனலட்சுமி மூலமே ஆண்டவர் வந்து, 'அப்பா! இப்படி விட்டு விட்டாயே!" என வினவ, அடிமை, "நிஷ்டையில் அமர்ந்ததால் நிலை தெரிய வில்லை' எனக் கூற, ஆண்டவர் உன் நிஷ்டையைக் காக்கும் பொருட்டு நானே தான் அப்பா, அப்பெண்ணைக் கொணர்ந்து சேர்த்தேன் என்றார்" ஆகா! என்னே ஆண்டவர் அருள்! அடிமையின் நிஷ்டையையும் காத்து தனலட்சுமியையும் தெருவில் திரியவிடாமல் பால்காரராக வந்து அருள்புரிந்த மகிமையை சொன்னால் எழுதினால் புரியாது-அனுபவித்தால்தான் புரியும்.

அம்மந்திரவாதி மூலம் பாவையைக் கொதிக்கும் நீரில் போட்டு தனலட்சுமி யின் உயிரையும் போக்க நினைத்தனர். செய்வினை செய்தவர். ஆனால் அன்றிரவு முழுமையும் ஆண்டவர் அடிமை இல்லத்தில் இருந்து தனலட்சுமியின்

உயிரைக் காத்து, மறுபிறவி கொடுத்தனர். அதையும் தம் வாயால், இது இப் பெண்ணுக்கு மறுபிறவி! குழந்தை போலவே நடத்துதல் வேண்டும் என்றும் கூறியருளினர்.

செய்வினையால் தன் 40 வயது வரை குழந்தை இல்லாமல் இருந்த தனலட்சுமி, ஆண்டவர் அருளால் ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி, இப்போது அவர்களும், அப்பத்து வயது பெண் குழந்தையும் நலமாக உள்ளனர்.

இது ஒரு துளி. இது போன்ற பல நிகழ்ச்சிகள் உள. இதோ ஒன்று! ஒருநாள் அடிமை, களத்தில் தங்க இயலாமல் வயல் வேலையாளிடம் சொல்லி விட்டு, வீடு வந்து சேர்ந்தது. மறுநாட் காலை திரும்ப வயலுக்குச் சென்ற போது, வயலாள், என்னுங்க சாமி! ராத்திரி வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டு போகவே இல்லையா? ராத்திரி 12, 1 மணிக்கு வந்து ''என்ன சுப்பராயா! முழிச்சிகிட்டு இருக்கியா! தூங்கிட்டியா''ன்னு கேட்டீங் களே!'' என்றான். உண்மை புரிந்த அடிமைக்கு. இதைக் கேட்டதும் ஆனந்தம் பெருகியது. ஆண்டவர் அடிமையின் பயிரைக் காக்க, தாமே சென்று நிகழ்த்திய அற்புதத்தை எண்ணி எண்ணி இன்றும் அடிமை ஆனந்தக் கண்ணீர் பெருக்குகிறது.

மற்றுமோர் துளி! அடிமை, நிகழ் ஆண்டின் தொடக்கத்தில் அறுவடைக்குச் சென்றிருந்த போது, ஒரு மண்ணுங்கட்டி இடது கால் விரலால் இடித்து விட, அடிமை அதைக் கவனியாமல், தொடர்ந்து வேலைகளைச் செய்து வந்தது. 7 நாட்கள் சென்றதும் திரும்பவும் அதே விரலில் இடித்து விட்டது. அதன் பின்னர் கால் வீங்கி, நடக்க முடியாமற் போகவே அடிமை வீட்டுக்கு வந்து விட்டது.

சில தினங்களில் விரலுக்கு மேற்பக்கம் உள்ள பாதத்தில் கொப்புளம் தோன்றி, ஊசியளவு துவாரம் ஏற்பட்டு, கொப்புளம் உடைந்து நீர் கசிய ஆரம்பித்து விட்டது. இதற்குள் மூன்று விரல்களில் காயம் பரவி, அழுகிய நிலையில் இருந்தது. மேற்பக்க காயத்தில் நீர்க்கசிவு நின்று மேல்தோல் பிய்த்துக் கொள்ளவே, கத்தியால் சுரண்டி எடுத்தது போன்று, காயம் பள்ளமாகி பாத எலும்பு தெரிய ஆரம்பித்தது. இதற்குப் பின், பாதத்தின் கீழேயும் இதே போன்று கொப்புளம் ஏற்பட்டு, மேற் பக்கம் போன்று கீழேயும் காயம் தோன்றி விட்டது. இதுவரை காயம் ஏற்பட்டு நான்கு மாதம் ஓடி விட்டது. கீழ்ப்பாக காயத்தினை அழுத்தினுல், பெருவிரலின் இடுக்கில் சீழ் ஒழுக ஆரம்பித்து, எங்கும் சீழ் நாற்றம் அடிக்க ஆரம்பித்தது.

பார்த்தவர் அனைவரும் ''ஆஸ்பத்திரிக் குக் கொண்டு போங்க'' எனக் கூற ஆரம்பித்து விட்டனர். ஆண்டவர் அருள் இருந்ததால் அடிமை ஆண்டவர் திருப் பாதத்தை இறுகப் பற்றிக் கொண்டதால், இறுதியில் நன்மையே அடைந்தது. இறுதி யில் அடிமையின், பெருவிரலுக்கும் சுண்டு விரலுக்கும் இடையே இருந்த மூன்று விரல்களும் விழுந்துவிட்டன. ஆபரேஷன் செய்து எடுத்து விட்டீர்களா? என்று கேட்குமளவு விரல்கள் இற்று விழுந்து விட்டன.

பின் நம் சட்ட நெறியிலுள்ள திரு. சாமிப்பிள்ளை அவர்களின் பிரான்ஸ் நாட் டில் உள்ள புதல்வர்கள் ஷண்முகமும், சிவராஜமும் வந்து பார்த்துவிட்டு, கூறிய வார்த்தைகள் இவை:—

''சுவாமி! ஆஸ்பத்திரி சென்றிருந் தால் கணுக்கால் வரை எடுத்து விடு வார்கள்; ஆனல் ஆண்டவர் அருளால். கருணையால், மகிமையால், உங்கள் மூன்று விரல்கள் மட்டுமே போய்விட்டன. உங்களை ஆண்டவர் தான் தம் திருவரு ளால் இத்துடன் வினையைத் தீர்த்து, உய்ய வழிவகை செய்துள்ளார்'' என்றனர்.

இவற்றைக் கேட்டு, அடிமை—ஆண்டவர் அருளை எண்ணி எண்ணி இன்பம் அடைந்தது.

அடிமை இயம்பிய இவ்வருள் நிகழ்ச்சிகள் ஆண்டவரின் அருள் எனும் கடலில் கிடைத்த ஒரு சில முத்துக்களுக்கு ஈடாகும், ஆண்டவரின் அருள் எல்லையற்ற கடல். அக்கடலில் அளவிலா முத்துக்களும் வலம்புரிச் சங்கங்களும் நிறைந்துள்ளன. இத்தகு அருட் கடலாம் ஆண்டவரால், அடிமைக்கு அளிக்கப்பட்ட நாமம். 'ஆதிதாசன்' என்பதே.

அடிமை வாழ்வில் ஆண்டவர் நிகழ்த்திய அருள் நிகழ்ச்சிகள் போன்று பல அடியவர்களிடத்தும் ஆண்டவர் நிகழ்த்திய—நிகழ்த்தும்—நிகழ்த்தப் போகின்ற அருள்நிறை காட்சிகள் ஏராளம்! ஏராளம்!! ஏராளம்!!!

———

இறையருள் நம்வினைநுகர்ந்து தீர்ப்பதற்குப்
பிறவிதந்த தென்ப துண்மை;
இறையருளால் வினைதீரும்; இறையருளால்
நலம்விளையும் என்ப துண்மை;
இறையருளால் அமைமருந்தால், மருத்துவனுல்
பிணிகள்தவிர்ந் தேகு மென்றால்
இறையருளை யேநாடிப் பிணிதீர்த்துக்
கொள்ளல்மிக இனிய தன்றோ?

கருணைமிகு வள்ளல்-பக்கம் 344.

<<நாயகரைக் கொண்டு வா!>>

உள்ளமென்றே உள்ளிருக்கும் வெள்ளையன்னமே—நீயோர்
உதவிபுரி வாயோசொல்வாய் வெள்ளையன்னமே
கள்ளமற்ற மேனிகொண்ட வெள்ளையன்னமே—என்றன்
கணவரிடம் தூதுசெல்வாய் வெள்ளையன்னமே.

கயிலைமலை மீதிருப்பார் வெள்ளையன்னமே—தேவர்
கணங்கள் தொழவீற்றிருப்பார் வெள்ளையன்னமே
கயமுகத்தி னேடொனிர்வார் வெள்ளையன்னமே—சென்று
கண்டவுடனே பணிவாய் வெள்ளையன்னமே

பணிவுடனே போற்றிசெய்து வெள்ளையன்னமே—ஆங்கோர்
பாங்கினில் அழைத்துச்செல்வாய் வெள்ளையன்னமே
துணிவுடனே நின்றுபோற்றி வெள்ளையன்னமே—செய்தி
சொல்லநீ தொடங்கிடுவாய் வெள்ளையன்னமே.

கன்னியை மணம்புரிந்து காட்டினில்விட்டே—அவர்
கயிலையில் இருப்பதும் நீதியாகுமோ?
சொன்னபடி வந்தழைத்துக் கொள்ளுவார் என்றே—அவர்
சொல்லைநம்பி வாழுகின்றேன் இன்னுமுலகில்

துட்டமிரு கங்கள்பல இந்தவனத்தில்—நாளும்
துன்பம்விளைக் கின்றனவே என்னசெய்குவேன்
இட்டப்படி யீர்த்தெனது கற்பையழிக்க—இங்கே
எத்தனையோ வேடர்உள்ளார் எப்படி உய்வேன்?

எண்ணமுடியாத பல இடர்களுக்குள்—சிக்கி
ஏங்கிவருந்தி உயிரைத் தாங்கியிங்குளேன்
கண்ணினீர் பெருக்கிமிகக் கலங்கிநின்று—கொண்ட
கணவர் வரவைநோக்கிக் காத்திருக்கிறேன்.

ஒவ்வொரு கணப்பொழுதும் ஒருயுகமாய்ப்—போக்கல்
உனக்குநன் ருய்த்தெரிந்த உண்மையல்லவோ?
திவ்விய தரிசனம்தந் துடனழைத்துக்—கொண்டு
செல்லுமாறு நல்லசொல்லால் சொல்லி வேண்டுவாய்

ஏழைபங்காளர் என்றும் கருணைநிறை—கடல்
என்றும்மெய் யன்பரெல்லாம் இயம்புகின்ருர்
ஏழையினிடத்தில் அவர்க் கொருசிறிதும்—தயை
ஏனே இதுவரையும் உதிக்கவில்லை

துன்பமகன் றின்பமோர்நாள் தோன்றுமென்றே—நம்பி
சோரும்என்றன் ஆவியினைத் தாங்கி வாழ்கிறேன்
அன்புவடி வாமவர்க்கிவ் வுண்மையெல்லாம்—சொல்லி
அழைத்துக்கொண் டேவருவாய் வெள்ளையன்னமே

விரைவினில் அவர் வராமல் தாமதித்தால்—பின்னர்
விளையும்இங்கே அனர்த்தம் வெள்ளையன்னமே
தரையில்அவர் மீது பழி சார்ந்திடுதல்—சற்றும்
சரியல்ல வென்று சொல்வாய் வெள்ளையன்னமே

என்நிலைமை நீயறிவாய் வெள்ளையன்னமே—இதை
இவ்வுலகில் ஆர்அறிவார் வெள்ளையன்னமே
நன்மொழிகளைத் தருணம் பார்த்துநவின்றே—என்றன்
நாயகரைக் கொண்டு வா வா வெள்ளையன்னமே.

———

நாவின் நுனிமேல் வைத்து நாசிநுனியால் பார்க்க
நடன சபைதனில் நடிக்கும் சிலம்பொலி
மேவியே நின்றிடத் தோன்றுதெல்லாம் தோன்றும்
விதத்தைத் தெளிவாக அறியவும் கூடுமோ?
(சுவாமிகள்)

SOME REMINISCENCES

Sriman. A. RAMACHANDRA GUPTHA, B. A., L. T.,
Kanchipuram.

To be associated with any activity connected with the Saint of Reddiapatty is a joy and a privilege. It is this consideration that has prompted me, a layman, to share some experiences of mine with the readers. I am thankful to the people bringing out this Diamond Jubilee Number for permitting me to do so.

I should, at the outset, like to mention why I deem myself lucky; I come from Madurai, which was the scene of the early activities of Swamiji; my early years were contemporaneous with the closing years of his stay on earth in the flesh; the shop in which he was accountant in Madurai, was just behind our house and within a stone's throw. I must have been a child of five or six then.

When I was about nineteen, I was making a railway journey to Madras. Chance brought to my compartment a group of devotees, presumably returning from an event in Reddiyapatty. They were discussing it. What attracted my interest was that a holyman had been effecting miraculous cures for illnesses with just plain water and nothing more.

Some ten years after, I became employed as a teacher in Kanchipuram Here I found a fellow-teacher practising Swamij's 'Chattam'. He spoke to me of early morning cold water baths and the use of cold water as remedy for human ailments, both of body and mind. I was taken by surprise and was much impressed. I had read Gandhiji's guide to health, in which he advocates the application of wet earth on to the human body to cure diseases. He had successfully tried it on his ashramites. If earth should hold the power to effect cures, why not water, I asked myself. Do not we believe in holy dips in the Ganga and the Cauvery? So God Almighty has placed, within easy reach of all, an enexhaustible supply of a remedy, available at all times, even to the poorest of the poor. Really a blessing and a boon, especially in these days. For, falling ill has become a luxury, which makes a big hole in our pockets.

But it is during the past fifteen years that I have come to understand and appreciate the richness of Swamiji's legacy to mankind. I am becoming rather increasingly and closely acquainted with those illustrious and committed devotees of Gurunatha — Sri La Sri Balakavi Swami and Kanchipuram Arul Gnana Selva Thai. Their every breath, every moment of time, and every ounce of energy is being spent in furthering the spread of the Chattam. Through them I have had the good fortune of having been blessed by Arul Sakthi Annaiyar of Pillaiyarkuppam. They placed in my hands a copy of 'Vali Kattum Vaan Poruzhl' by Thiru Ramalingar. To go through it is an exalting experience. The

events of Swamiji's life, vividly described, come alive and seem to pass before our eyes. It reads like a fairy tale. Truth is stranger then fiction, indeed.

And now has come out that Magnum Opus of the Swami's life and teachings—"Karunai Mighu Vallal," by Sri Balakavi Swami. Epic in size, a song celestial, it is the biography of Gurunatha in about 5000 verses. The narrative flows down his pen with the ease of a down hill stream. One is reminded of the Ramavana, the Maha Baratha, the Thondar Puranam of Sekizhar.

I have a request to make of Sri Balakavi Swami. I had for non-detailed study in the S.S L.C. 1925, a small book entitled "ஆளுடைய பிள்ளையாரின் அற்புதக் கோவை" in Tamil. It was a fine book, profusely illustrated, and gave, as small stories, the anecdotes in the life of Sambandar. It was eminently suited for impressing young minds. If Sri Balakavi were to produce such a book on Gurunatha's life and teachings, it would serve to catch people young and lead them on in the path of Arulneri Chattam of Gurunatha.

I had the good fortune to visit Reddiyapatti, the birth place of Gurunatha, on an ordinary occasion. It is a quiet spot, far from the madding crowd's ignoble strife, untainted yet by modern civilization. Deep peace seems to hang in the air—ideal for inner peace and meditation. The area around Gurunathar's Shrine is like an ashram. And again I made a pilgrimage to that holy place for a Gurupooja. It is an unforgettable experience—thrilling to the bone.

A new convert, I have found profound peace and solace in the code of conduct presribed by Swamiji. I have had my share, though small, of illnesses. and I came through, unscathed, without recourse to any medical treatment. I am none the worse, only all the happier, for adopting this way of life. What an encouraging thought to feel that one has always an unfailing divine guide, just behind you, ever ready to comfort you in moments of trial, and to bring you cheer and joy!

———

மரக்கறி உணவு

சைவஉண வானமரக் கறியுணவே
தாமசரா ஜஸத்தை நீக்கும்
சைவஉண வானமரக் கறியுணவே
சாத்விகம்சன் மார்க்கம் நல்கும்
சைவஉண வானமரக் கறியுணவே
தெய்வநலம் தந்து பேணும்
சைவஉண வானமரக் கறியுணவே
சட்டநெறிக் கேற்ற தென்றூர்.

கருணைமிகு வள்ளல்·பக்கம் 342.

நல்ல மிட்டாய்

நல்ல மிட்டாய்—மிக—நல்ல மிட்டாய்
ஞானசற் குருஎன்னும் நாம மிட்டாய்
நல்ல மிட்டாய்—எல்லாம்—வல்ல மிட்டாய்
நம்வினை போக்கி அருள் நல்கும் மிட்டாய்

உயர்ந்த மிட்டாய்—மிக—உயர்ந்த மிட்டாய்
ஓம்குரு நாதாஎன்றுள் உரைக்கு மிட்டாய்
உயர்ந்த மிட்டாய்—எனையும்—உகந்த மிட்டாய்
உள்ளும் புறமுமாகி ஒளிரும் மிட்டாய்

சிறந்த மிட்டாய்—மிகச்—சிறந்த மிட்டாய்
செம்மையென் னுள்விளங்கத் திகழும் மிட்டாய்
சிறந்த மிட்டாய்—வழி—திறந்த மிட்டாய்
தெய்வம்என என்னுள்ளே நிறைந்த மிட்டாய்

இனிய மிட்டாய்—மிக—இனிய மிட்டாய்
எம்குரு நாதன்என்றுள் இலகும் மிட்டாய்
இனிய மிட்டாய்—யார்க்கும்—எளிய மிட்டாய்
ஏகசுக போகம்நல்கும் த்யாக மிட்டாய்

சத்ய மிட்டாய்—அழியா—நித்ய மிட்டாய்
சாந்தநிலை மாந்தருக்கே தந்தருள் மிட்டாய்
சத்வ மிட்டாய்—அருளுள்—வைத்த மிட்டாய்
தன்னைஎனக் கீந்துபேணும் தத்வ மிட்டாய்

இனிக்கும் மிட்டாய்—அருளாய்—இனிக்கும் மிட்டாய்
என்னைத்தன் னோடினிதே இணைக்கும் மிட்டாய்
இனிக்கும் மிட்டாய்—அமுதாய்—இனிக்கும் மிட்டாய்
இணையில் பரமானந்தம் திணிக்கும் மிட்டாய்

கருணை யொளியினையுள் காட்டும் மிட்டாய்—என்றும்
கரையாம லேஇனிப்புள் ளூட்டும் மிட்டாய்
அருணதள பாதபத்மம் அருளும் மிட்டாய்—சச்சி
தானந்த பூரணமாய் அமைந்த மிட்டாய்

நஞ்சையும் அமுதெனச்செய் நல்ல மிட்டாய்—பர
நாதமுடி மீதிலங்கும் போத மிட்டாய்
செஞ்சரண் துணையெனக்கொள் சீலர்தம்மைத்—தன்னுள்
சேர்த்துப்பர ஞானசுகம் தேக்கும் மிட்டாய்.

வள்ளலார் கண்ட பெருநெறி

'முத்தமிழ்க் காவலர்'
உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்,
திருச்சிராப்பள்ளி-8.

[உலகத்தில் ஜாதி சமயச் சண்டைகள் பெருகி, மூடப் பழக்க வழக்கங்கள் மலிந்து, உண்மை எது எனத் தெளிவாக மக்கள் உணர முடியாமல் திகைத்த காலத்தில், உண்மை எது என உணர்த்தி, மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்து, சமரச சன்மார்க்கத்தை விளக்கத் தோன்றியவர் இராமலிங்க சுவாமிகள் ஆவர்.

அவர் காட்டிய அருள் நெறியைப்பற்றி விளக்குவதே இக் கட்டுரையாகும்]

நெறி பல வகை. அதில் பெரு நெறி ஒரு தனி வகை. நெறி என்றாலே நன்னெறியைக் குறிக்கும். தீ நெறியைக் குறிக்காது. இதை "நெறி நின்றார் நீடு வாழ்வார்" என்னும் திருக்குறளால் அறியலாம்

வள்ளல் பெருமான் தமது அருட்பாவில் பல நெறிகளைப் பற்றிக் கூறியிருக்கிறார். அவற்றுள் பெருநெறி என்பதை அடிக்கடி பல்வேறு இடங்களில் கூறியிருப்பதைக் காணலாம்.

பெருநெறி என்பது எது? என்றால் என்ன கூறுவது? அருட்பாவில் தெய்வமணி மாலையில் 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்' என்ற பாடலில், உறவுநெறி, வஞ்சநெறி; பக்தி நெறி; வாய்மை நெறி; பெரு நெறி சமய நெறி; துறவு நெறி; யோக நெறி; அறிவு நெறி; கருணைநெறி; உடல் நல நெறி முதலிய அத்தனையையும் காணலாம்.

பெருநெறி என்பது நான்கு எழுத்துக்களில் உள்ள இரண்டு சொற்களையுடைய ஒரு சிறு சொற்றொடர். வள்ளலாருக்கு முன்பும் பழந்தமிழ் இலக்கியத்திலும் இச் சொற்றொடரை எவரும் பயன்படுத்தியதாக அறிய முடியவில்லை.

வள்ளலாரின் வழிபடு குருவாகிய திருஞான சம்பந்தரின் "பெருநெறிய பிரம்மாபுரம் மேவிய பெம்மான்" என்ற சொற்றொடர் இறைவனையும், அவன் கோயில் கொண்ட சீர்காழியையும், அந் நகரத்தின் சான்றோர்களின் நெறியையும் விளக்கிக் காட்டுவதிலிருந்து, பெருநெறி என்பது எல்லா நெறிகளிலும் உயர்ந்த நெறி என்பதும், அது சான்றோர்களால் கையாளப் பெற்ற—கையாளப் படுகின்ற நெறி என்பதும், அது அன்பு நெறி, அருள் நெறி, கருணை நெறி ஆகிய மூன்று நெறிகளாலும் பின்னப்பட்ட ஒரு பெருநெறி எனவும் விளங்கிற்று. அது மட்டுமல்ல, மற்ற நெறிகளெல்லாம் பிறர் கொடுக்க வேண்டும் என்பதாகவும், இந்த பெரு நெறி மட்டும் பிறர் கொடுத்துப் பெறுவதல்ல; "தானே பிடித்து ஒழுக வேண்டிய ஒன்று" என்பதும் புலப்படுகிறது.

அன்பு நெறி

1 இதைப் பக்தி நெறி எனவும் கூறுவர். இதற்கு வள்ளலார் இலக்கணம் கூறும்போது இறைவனை ஒரு மலை என்கிறார். அதனால் பார்த்து எவரும் பயந்துவிட வேண்டியதில்லை. அம்மலை "அன்பு என்ற கைப்பிடிக்குள் அடங்கும் என்கிறார்.

அடுத்து இறைவனைக் கடல் என்கிறார். அதைக் கண்டு எவரும் மலைக்க வேண்டியதில்லை. அக்கடல் "அன்பு என்ற குடத்துக்குள்" அடங்கி விடக்கூடியது என்கிறார். அடுத்து இறைவனை இவ்வுலகம் முழுவதும் நிரம்பியுள்ள ஒரு பரம் பொருள்" என்கிறார். இதைக் கண்டு எவரும் கலக்கமடைய வேண்டியதில்லை. அப்பரம்பொருள் "அன்பு எனும் வலைக்குள்" அகப்பட்டு விடும் என்று கூறுகிறார். இதிலிருந்து வெளியை விட, மலையை விட, கடலை விட அன்பு பெரியது என்று தெரிகிறது. இறுதியில் இறைவனே "அன்பு உருவானவன்" என்று "அன்புருவாம் பரசிவமே" என முடிக்கிறார்.

2 இதனைத் திருமூலரும் "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவது யாரும் அறிகிலார். அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே" எனக் கூறியிருப்பதாலும் நன்கறியலாம்.

3 இனி மக்களாய்ப் பிறந்தவர்கள் இறைவனிடத்தில் அன்பு செலுத்தியாக வேண்டும் என்பதற்காக இறைவன் எத்தகையவன் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார். 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே' என்பது அவரது வாக்கு. இறைவன் கற்றவர்க்கு மட்டும் அல்ல, சிறிதும் கல்லாதவர்க்கும் மகிழ்ச்சியைத் தருபவன். ஏன்? அவன் மகிழ்ச்சியே உருவானவன் என்கிறார்.

4 அடுத்து "காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்" என்பது அவரது வாக்கு. கண் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல. கண் இல்லாதவர்களுக்கும் கண் அளிப்பவன் இறைவன். காரணம் எல்லா உயிர்களுக்கும் இறைவன் கண்ணாகவே இருப்பவன் என்பது அவர் கருத்து. இதில் ஒன்று கண் இல்லாதவர்களுக்கு கண் கொடுப்பது புரிகிறது. கண் உள்ளவர்களுக்கும் அவன் கண் கொடுப்பது என்பது எப்படி? அது ஆராய வேண்டிய ஒன்று. ஆராய்ந்தால் அது ஊனக் கண்ணிலும் உயர்ந்த ஞானக்கண் என்பது புலப்படும்.

அருள் நெறி :

1 வள்ளலார் "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்கிறார். இதனால் உயிர்கள் வாடுவது மட்டுமல்ல, பயிர் வாடுவதைக் கண்டும் அவர் வாடியிருக்கிறார் என்று தெரிகிறது. அது அருள் நெறியில் மிக உயர்ந்த நெறி. இதில் "கண்ட போதெல்லாம்" என்ற ஒரு சொற்றொடர் இருக்கிறது. இது வள்ளலார் ஒரு பயிரை வாடியிருக்கும் போது கண்டிருக்கிறார். கண்டு வருந்தியிருக்கிறார். மறுபடியும் உழவன் தண்ணீர் இறைத்து அப்பயிர் செழித்து நிற்பதைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார் அடுத்து ஒரு நாள் அதே பயிர் வாடியிருப்பதைக் கண்டு வருந்தியிருக்கிறார் என்ற நிகழ்ச்சிகளையெல்லாம் "கண்ட போதெல்லாம்" என்ற சொற்றொடர் அறிவிக்கிறது.

2 வள்ளலார் உடம்பு ஒரு முறை இளைத்திருந்தது அன்பர்கள் காரணம் கேட்டபோது "நான் வருகின்ற வழியில் நடந்து சென்ற மக்களில் பலரின் உடல் இளைத்திருப்பதைக் கண்டேன்; அதனால் என் உடம்பு இளைத்து விட்டது போலும்" என்றார். இது எவ்வளவு பெரிய அருள் நெறி!

3 மற்றொரு தடவை வள்ளலாருடைய புருவம் துடித்தது. இதைக் கண்டதும் "யாருக்கோ எவருக்கோ துன்பம் வரப் போகிறது அதைக் கண்டு நான் துடிக்கப் போகிறேன் என்பதை இத்துடி துடிப்பு துடித்துக் காட்டுகிறது" என்று கூறியிருக்கிறார். இந்த உயர்ந்த அருள் நெறியை நம்மால் சிந்தித்துக் கூட பார்க்க முடியவில்லை. அவ்வளவு உயர்ந்து நிற்கிறது இந்த அருள் நெறி!

4 வள்ளலார் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சொத்து ஒன்றும் இல்

லாதவர். வருமானமும் இல்லாதவர். இவரின் இந்த நிலை கண்டு தமையன் கடிந்ததால் குடும்பத்தின் ஆதரவையும் இழந்தார். தமயனுர் இவருக்கு வீட்டில் சோறு போடக் கூடாது என்று கட்டளை இட்டிருந்ததால், பசிக்கு உணவு கிடைக்காமல் வருந்தியும் அவர், எவரிடத்திலும் சென்று இரந்ததில்லை. எதுவும் ஏற்றதில்லை. அவர் வாழ்க்கையில் பல காலம் பசித்திருந்து 'பசி' மக்களை எப்படி வருத்தும் என்பதை நன்கு உணர்ந்திருக்கிருர். அதன் விளைவே, "சத்திய தருமச் சாலை"யைத் தோற்றியதும், மக்களின் பசிப் பிணியைப் போக்கும் செயற்கருஞ் செயலைச் செய்திருப்பதும், என உணரலாம்.

கருணை நெறி :—

1 உலகில் உள்ள எல்லா நாட்டினரிடத்தும், எல்லா மதத்தினரிடத்தும், எல்லா மொழியினரிடத்தும் மட்டுமல்ல, எல்லா உயிர்களிடத்தும் காட்டுவதே "கருணை நெறி" ஆகும். இதற்கு 'உயிரிரக்கம்' என்று பெயர். இதையே "ஜீவ காருண்யம்" என்பர். வள்ளலார் கூறியிருக்கிற கருணை நெறியிலும், ஒருமைப் பாட்டிலும் மக்கள் மட்டுமல்ல எல்லா உயிர்களும் அடங்கியிருக்கின்றன.

2 ஒரு தவமுனிவன் தவம் செய்ய விரும்பிய தன் மாணுக்கனிடம் உரிய வழியைக் காட்ட வேண்டும் என உணர்ந்து, "தம்பீ! உன்னுல் ஒரு பெருந் தவத்தை செய்ய முடியுமா? என்று கேட்க அவனும் முடியும் என வாக்களித்தான். அவர் உடனே இவ்வாறு கூறினுர். அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணு! அரும்பசி எவருக்கும் ஆற்று! மனத்துள் பேதா பேதம், வஞ்சம், பொய், களவு, சூது, சினம் இவற்றையும் தவிர்ப்பாயாகில் செய்தவம் வேறொண்றுண்டோ?" இதுவே பெருந் தவம் எனப் போதித்தார்.

இத்தவத்தில் மூன்று நெறிகள் உள்ளன. அனைத்துயிர்களும் ஒன்று என்று எண்ணுவது; அரும்பசி எவருக்கும் ஆற்றுவது; மனத்தைப் தூய்மைப் படுத்துவது. இம் மூன்றுமே "கருணை நெறி"களாகும்.

3 வள்ளலாருடைய கருணை நெறிகளில் ஒன்று 'எல்லா மக்களும் தங்கள் மனதைத் தூய்மைப் படுத்திக் கொண்டு பேராசைகளையும்பேதங்களையும் ஒழித்து" சன்மார்க்க நெறி நின்று இறைவனை அடைய வேண்டும் என்பது.

அதற்காக வள்ளலார் பேதை மக்களைப் பார்த்து வருந்தி அவர்கள் நிலையைத் தன்மேல் ஏற்றித் தானே பேதையானேன், அதுவும் வெறும் பேதையல்ல, "பேயேறி நலிகின்ற பேதையானேன்" என்கிருர். அப்படி ஆனது எதனுல் என்பதற்குக் காரணமும் கூறுகின்ருர். "பித்தேறி அலைகின்ற மனத்தினுலே பேயேறி நலிகின்ற பேதையானேன்" என்று. எந்தெந்த பித்துக்கள் மனத்திலே ஏறின? என்பதை விளக்கியும் காட்டுகிருர் வஞ்சக வாழ்க்கை ஏறி, மயக்கம் ஏறி, பேராசை ஏறி, மதவெறி ஏறி அதனுலே பித்து ஏறியது என்று.

அந்த பித்து மனதை எப்படி அலைக் கழிக்கிறது என்பதற்கு ஒரு உவமையும் காட்டுவதுதான் நமக்குப் பெரும் வியப்பைத் தருகிறது நாம் ஏறுகிற, பொருள்கள் என சில உள்ளன. அவை கப்பல், மாடிப்படி முதலியன. அவை நம் மேல் ஏறுவதில்லை.

நம் மேல் ஏறுகின்ற சில பொருட்கள் உள்ளன. இவை ஆடை, அணிகலன்கள் முதலியன. அவற்றின் மேல் நாம் ஏறுவதில்லை. ஆனுல் இரு பொருட்கள் ஒன்றின் மேல் ஒன்று ஏறுகின்றன. அவை மத்தும், தயிரும்.

மத்தின் மேல் தயிர் ஏறி, தயிரின் மேல் மத்து ஏறி "சர்-சர்" என்று அலைக் கழிப்பது போல இந்தப் பித்து என்

மனத்தின் மேல் ஏறி, மனம் அதன் மேல் ஏறி நான் அலைக்கழிக்கப்படுகின்றேன் என வருந்துகின்ருர். இது அவர் நிலையை அல்ல, நம் நிலையை எண்ணியே கூறி யிருப்பதாகும். பாடலும் இதுதான்.

"மத்தேறி அலை தயிர்போல் வஞ்ச
வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தி னேடு
பித்தேறி அலைகின்ற மனத்தி னுலே
பேயேறி நலிகின்ற பேதை யானேன்"

என்பது.

முடிவுரை:-

ஆக மூன்று பிரிவுகளைக் கொண்டு முறுக்கப் பெற்ற ஒரு வடக்கயிறு போன்றதுதான் அன்பு நெறி, அருள் நெறி, கருணை நெறிஆகிய மூன்று நெறி களையும் பின்னிக் கொண்டிருக்கின்ற ஒரு நெறி. அதுவே பெருநெறி எனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மற்ருெரு வகையில் நெறி என்ருல் வழி, பெருநெறி என்ருல் உயர்ந்த வழி நல்ல வழி என்ருகும். இதனுடைய நேரான மொழி பெயர்ப்பே சன் மார்க்கம் (மார்க்கம்-வழி) இதைக் கண்ட பெருமகன் வள்ளலார்.

சன்மார்க்கம் என்பது சத்மார்க்கம் என அமையும். சத் என்ருல் உண்மை. மார்க்கம் என்ருல் வழி. உண்மைப் பொருளாகிய இறைவனை அடையும் வழியே சன்மார்க்கம் எனப்படும். அதனை விளக்க அவதரித்தவரே இராமலிங்க சுவாமிகள். அவர் அமைத்த நெறிக்கே சமரச 'சன்மார்க்கம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

[இவ்வாறு வடலூர் வள்ளலார், சமரச சன்மார்க்கம் தழைத்தோங்க வழி காட்டினுர்.

இதுவரை தோன்றிய எல்லா அருளாளர்களும் கண்ட கனவை நன வாக்கவே, எல்லாச் சமயங்களின் சாரம் அனைத்தையும் திரட்டி, எல்லா உயிரும் எளிதிற் கையாண்டு இம்மை மறுமை நலங்கள் அனைத்தையும் முத்திப் பேற்றையும் எய்தத்தக்க அருள் நெறியைச் சட்டம் என்ற பெயரால் திருவருள் துணை கொண்டு வகுத்து வழங்கி, எக்காலத்துக்கும் எல்லா உயிர்க்கும் அரும்பெருந் துணையாய் இருந்து, அல்லல் நீக்கி அருள் நலம் பாலிக்க அவதரித்த குருபெருமானே ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் ஆவர்.

அவர்களது குருபூஜை மணி விழா நினைவாகவே இம்மலர் வெளியிடப் பெறுகிறது.]

விடியல் ஐந்து நாழிகைமுன் தண்ணீரில்
விழுச்சக்தி திகழ்வ தாலே
படியின்மிசை அக்காலம் தவருமல்
மூழ்குநர்க்குப் பயன்மிக் கெய்தும்
உடலிலுள்ள நாடிநரம் புகட்(கு) உரம்மிக்
குறும்; மூளை கூர்மை யெய்தும்;
படரி ரத்தம் தூய்மையுறும்; பரனருள்நம்
மேற்படிந்து பயன்மிக் கூட்டும்.

—கருணைமிகு வள்ளல்-பக்கம் 336.

ஊதுதி சங்கே

ஊதுதி சங்கே—ஊதுதி சங்கே
ஒப்பிலெங்கள் அப்பன்வர ஊதுதி சங்கே

நாதமுடி மீதொளிர்வோர்க் கூதுதி சங்கே
நாலுமறை நாயகருக் கூதுதி சங்கே
போதவடி வாயிருப்போர்க் கூதுதி சங்கே
பூரணம தாய்ப்பொலிவோர்க் கூதுதி சங்கே (ஊதுதி)

ஆறுபகை யும்தகர்ப்போர்க் கூதுதி சங்கே
ஆகம உருவினருக் கூதுதி சங்கே
ஈறுமுதல் ஏதுமில்லோர்க் கூதுதி சங்கே
ஏகசுகம் நல்கிடுவோர்க் கூதுதி சங்கே (ஊதுதி)

பேறெனமெய்ஞ் ஞானமீவோர்க் கூதுதி சங்கே
பெண்ணுடன்ஆ ணனவருக் கூதுதி சங்கே
தேறினர்க் கமுதமானார்க் கூதுதி சங்கே
சித்தமலம் நீக்கிடுவோர்க் கூதுதி சங்கே (ஊதுதி)

அன்பர்குறை தீர்த்தருள்வோர்க் கூதுதி சங்கே
ஐம்புலன்வென் றோர்க்கருள்வோர்க் கூதுதி சங்கே
இன்பெனஎங் கும்செறிந்தோர்க் கூதுதி சங்கே
என்னுள்இல கும்இறைவர்க் கூதுதி சங்கே (ஊதுதி)

———

முற்பிறவி யின்பயனாய் இப்பிறவி
யிற்பிணிகள் வரவும் கூடும்
இப்படியில் உறுபிணிகள் எண்ணிலவாம்;
அவற்றில்எது வரினும் அண்ணல்
சொற்படிவை கறைமாலை தண்ணீரில்
மூழ்கிஉளத் தூய்மை யோடும்
சிற்பரன்தண் ணருள்நாடி நீறுதுழாய்
அமைதீர்த்தம் பருகல் வேண்டும்.

—கருணைமிகு வள்ளல்-பக்கம்-347.



விநாயகர் பெருமை

'செந்தமிழ் வேந்தர்', 'புலவர்ஏறு',

உயர்திரு. **ந. ரா. முருகவேள்,** M.A., M.O.L, அவர்கள்

ஆசிரியர்: "திருக்கோயில்"

முன்னுரை :

இந்து மதத்திற்குரிய கடவுளர் பலருள் விநாயகர் மிக்க முதன்மையும் சிறப்பும் உடையவராகத் திகழ்கின்றார். இந்து மதத்தைச் சேர்ந்த அன்பர்கள் எந்தச் செயலைத் தொடங்குவதாக இருந்தாலும், விநாயகரையே முதலில் வணங்கித் தொடங்கும் வழக்கம் உடையவராக உள்ளனர். 'முன்னவனே யானை முகத்தவனே' என இராமலிங்க அடிகள் குறிப்பிடுதல் காணலாம். திருவள்ளுவர் தமது திருக்குறளின் முதற் குறளில் 'ஆதிபகவன்' எனச் சுட்டியது, முதலில் தொழப்பெறும் கடவுளாகிய விநாயகரையே குறிப்பதாகவும் கொள்ள இடமுண்டு.

தொன்மையும் முதன்மையும் :-

மக்கள் முதன் முதலில் தோன்றிய இடம் மலையும் மலையைச் சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சித் திணையே என்பர் ஆராய்ச்சியாளர். யானை குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்காதலின், முதன் முதல் தோன்றிய மனித குலத்தினர், முதன் முதலில் யானை முகமுடைய விநாயகரையே தொழத் தொடங்கினர் போலும். விலங்குகளுள் யானையானது ஏனைய எல்லாவற்றிலும் பெரியதாதல் போல, யானை முகமுடைய விநாயகர் ஏனைய எல்லாக் கடவுளரிலும் மிக்க சிறப்பும் முதன்மையும் உடையவர் என்பது புலனாகின்றது.

'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்றபடி எல்லா ஓசை ஒலிகளுக்கும் மூல முதலாகத் திகழ்வது பிரணவம் என்னும் ஓங்காரமேயாகும். அம்மூல முதல் ஒலியினின்றே எல்லாப் பொருள்களும் உலகங்களும் தோன்றுவ ஆயின என்பர் ஞானிகள். நம் உடலின் அமைப்பும், நம்முடைய காது இருதயம் இரைப்பை கருப்பை முதலிய உறுப்புகளும், ஓங்கார வடிவினவாகவே இருத்தல் காணலாம். சங்கு முதலிய இயற்கைப் பொருள்களும் அவ்வடிவினவாகவே காணப்படுகின்றன. இவ்வாற்றால், உலகத்தின் தோற்றமும் இயக்கமும் ஓங்காரத்தினாலேயே நடைபெறுகின்றன என்பதனை, ஞானிகள் நன்கு கண்டுணர்ந்தனர். தாம் கண்ட இவ்வுயரிய உண்மையினை, எளிய பாமர மக்கள் எல்லோரும் கூட உணர்ந்து உய்யும் பொருட்டு, முழுமுதற் பரம்பொருளை அவ்வோங்கார வடிவினதாக, இயற்கையில் அமைந்து தோன்றும் யானை முகம் கொண்டுள்ளதாகவே, ஞானிகள் உணர்ந்து உலகுக்கு உணர்த்துவாராயினர்.

பிற நாடுகளில்;-

யானை முகமுடைய விநாயகப் பெருமான், இந்து மதத்தில் மட்டுமேயன்றி சமணம் பௌத்தம் ஆகிய மதங்களிலும் சிறப்பாகப் போற்றி வழிபடப் பெறுகின்றார். இவரது வழிபாடு நமது இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, நேபாளம், திபெத்து, பர்மா, சயாம், இந்தோசீனா, சீனா, ஜாவா, பாலி, போர்னியோ, ஜப்பான், கொரியா முதலிய நாடுகளிலும், சிறப்புற நிகழ்கின்றது. சமன் லால் என்னும் ஆசிரியர், இந்து அமெரிக்கா என்னும் தமது நூலில், அமெரிக்கா நாட்டில் பெரு, மெக்சிகோ, முதலிய பகுதிகளிலும், விநாயகர் வழிபாடு இருந்தமைக்குரிய சான்றுகள் பல காணப்படுகின்றன என்று குறிப்பிடுகின்றார். ஜப்பானிய மக்கள் விநாயகரை 'Kon-Kitton' என வழங்குகின்றனர். சைனாவில் பாறையில் அமைக்கப் பெற்ற 'King-Hsein' (கி. பி. 531) என்னும் கோயிலில், விநாயகர் திருவுருவம் காணப்படுகின்றது. கி. மு. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகக் கருதப்பெறும் அமராவதிச் சிற்பங்களுள் விநாயகர் திருவுருவம் காணப்படுகின்றது என்று பர்ஜெஸ் என்னும் அறிஞர் கூறுகின்றார். ஆப்கானிஸ்தானத்தில் மிகப் பழமை வாய்ந்த விநாயகர் திருவுருவங்கள் இரண்டு, தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர்களால் அண்மையில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. நேபாளத்தில் பஞ்சமுக விநாயகர் மிகுதியாகப் போற்றப்படுகின்றார். ஜாவாத்தீவில் பழங்காலத்தில் சைவம் வைணவம் பௌத்தம் ஆகிய சமயங்கள் மிகுதியாகப் பரவியிருந்தன. கி. பி, 13ஆம் நூற்றாண்டு முதல் இஸ்லாமிய சமயமே பெரிதும் தலையெடுத்தோங்கியது. எனினும் இன்னும் அங்கே, விநாயகரின் செல்வாக்கு மக்களிடையிற் சிறிதும் குன்றாமல் நிலவி வருகின்றது.

ஜேனஸ் (Janus) என்னும் உரோமக் கடவுளுக்கும், நமது துவிமுக கணபதி வடிவத்திற்கும், நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. நமது கூத்தாடும் விநாயகருக்கும், நடனமாடுகின்ற தயோனிசஸ் (Dionysus) என்னும் அயோனியக் கடவுளுக்கும் இடையே, பல ஒப்புமைகள் காணப்படுகின்றன. நம் இந்திய நாட்டோடு உரோமரும் யவனரும் மிகப் பழங்காலத்திலேயே வாணிகத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பது வரலாற்று நூல்களில் புலனாதலின், நம்முடைய விநாயகர் வழிபாடு அங்கெல்லாமும் பரவியிருந்தது எனவும் நாம் கொள்ளுதல் கூடும்.

தத்துவ நுட்பம்:-

விநாயகரின் திருவுருவம் எத்தனையோ பல தத்துவ நுட்பங்களை உணர்த்திக் கொண்டிருக்கின்றது. விநாயகரின் திருவுருவத்தில் நாபி பிரமனையும், முகம் திருமாலையும், முக்கண் சிவபிரானையும், இடப்பக்கம் சக்தியையும், வலப்பக்கம் சூரியனையும் குறிப்பதாகப் பெரியோர் கூறுவர். விநாயகரின் ஐந்து திருக்கைகளில் உள்ள பொருள்களுள் பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் உணர்த்துவதாக நூல்கள் நுவலும் விநாயகர் விலங்குருவத் தலையும், தேவ உருவத் திருமேனியும், பூத உருவத் திருவடிகளும் பெற்றுத் திகழ்கின்றார். இங்ஙனம் முரண்பாடுகள் பலவற்றையும் ஒருங்கமைத்துக் கொண்டுள்ள விநாயகரின் வடிவம், அத்துவைத சித்தாந்த தத்துவ நுட்பத்தினைக் காட்டிக் கொண்டிருக்கிறது என்று 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த நல்லகனி என்னும் அத்துவைத தத்துவாசாரியர் பாடி உள்ளார்.

நூல்கள்;

விநாயகர் வழிபாடு கி. பி. 6 அல்லது 7-ம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமிழ்

நாட்டில் பரவத் தலைப்பட்டது என ஆராய்ச்சியாளர்கள் கூறுவதுண்டு. எனினும் கி மு. 1500 ஆண்டுகட்கும் மிக முற்பட்டது எனக் கருதப் பெறும் இருக்கு வேதத்தின் மூன்றும் மண்டிலத்தில் 'கணுநாம் த்வா கணபதிம்' எனத் தொடங்கும் 23ஆம் செல்யுளில் கணபதியாகிய விநாயகரைப் பற்றிய குறிப்பு அமைந்திருக்கின்றது. இதில். 'கண - கணபதி-கவி – ஜேஷ்ட – பிராம் மணஸ்பதி என வரும் சொற்கள் விநாயகரையே குறிப்பனவாகக் கொள்ளலாம். கணேசபுராணம், முற்கல புராணம், பவிஷ்ய புராணம், விஷ்ணுதர்மோத்தர புராணம், பிரம்மவைவர்த்த புராணம், கருட புராணம், அக்கினி புராணம் கணபதி உபநிஷத், கணேச கீதை முதலிய பல நூல்கள் விநாயகரின் பெருமையை விளக்குகின்றன. ஆதிசங்கரர் கணேச புஜங்கம் கணேச பஞ்சரத்தினம் ஆகிய நூல்களை அருளிச் செய்துள்ளார். கனகர், முற்கலர் பார்க்கவர், மதங்கர், வியாசர் முதலிய முனிவர்கள் விநாயகரை வழிபட்டு அருள் பெற்றுள்ளனர். திருஞானசம்பந்தர், நம்பியாண்டார் நம்பிகள், கபில தேவர் அதிரா அடிகள், மெய்கண்டார். ஔவையார், கச்சியப்ப முனிவர் முதலிய தமிழ்ச் சான்றோர்கள் பலர் விநாயகரைத் துதித்து வழிபட்டுள்ளனர். கச்சியப்ப முனிவர் தமிழிற் பாடியுள்ள விநாயக புராணம் பெரும் புகழ் பெற்றதொன்றாகும்.

திருவுருவங்கள்:—

விநாயகரின் திருவுருவை, வெவ்வேறு வகைகளில் வெவ்வேறு நிலைகளில் சிற்ப நூல்கள் சிறப்புற அமைத்து விளக்கியுள்ளன. சிற்ப நூல்களின் பின்வருமாறு விநாயகரின் 32 திருவுருவங்கள் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன. அவையாவன:

1 பால கணபதி 2 தருண கணபதி 3 பக்த கணபதி 4 வீர கணபதி 5 சக்தி கணபதி 6 துவஜ கணபதி 7 சித்தி (பிங்கல) கணபதி 8 உச்சிஷ்ட கணபதி 9 விக்கின ராஜ கணபதி 10 க்ஷிப்பிர கணபதி 11 ஏரம்ப கணபதி 12 லட்சுமி கணபதி 13 மகா கணபதி 14 விஜய [புவனேச] கணபதி 15 நிருத்த கணபதி 16 ஊர்த்துவ கணபதி 17 ஏகாட்சர கணபதி 18 வர கணபதி 19 திரியட்சர கணபதி 20 க்ஷிப்ரப் பிரசாத கணபதி 21 அரித்ர கணபதி 22 ஏகதந்த கணபதி 23 சிருஷ்டி கணபதி 24 உத்தண்ட கணபதி 25 ரிணமொச்சக கணபதி 26 துண்டி கணபதி 27 துவிமுக கணபதி 28 திரிமுக கணபதி 29 சிம்ம கணபதி 30 யோக கணபதி 31 துர்க்கா கணபதி 32 சங்கடஹர கணபதி.

இம் முப்பத்திரண்டு கணபதிகளுள், முதற்கண் உள்ள 16 கணபதிகளின் திருவுருவங்களும் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற, இராமேசுவரம் சங்கர மண்டபத்தில், மிக அழகிய முறையில் எழுந்தருளச் செய்யப் பெற்றுள்ளமை, அன்பர்கள் அனைவரும் கண்டு களிக்கத் தக்கது.

அற்புதச் சிற்பங்கள்:—

இங்ஙனமே, விநாயகரின் அற்புதமான அழகிய சிற்பத் திருவுருவங்கள் பற்பல இடங்களில் காணப்பெறுகின்றன. அவைகளைப் பற்றிய சிறு குறிப்புகள் வருமாறு:

1. நேபாளத்திலும், இந்தோனேசியாவிலும், நான்கு முகங்களை உடைய விநாயகர் திருவுருவங்கள் மிகுதியாகக் காணப் பெறுகின்றன.

2. பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலையில், ஐந்து முகங்களுடன் பத்து கரங்களுடனும், 'மகாராஜ லீலாசனம், என்னும் நிலையில், தாமரை மலரை ஏந்திய இடக்கையை உடைய வல்லபை என்னும் சக்தியைத், தமது இடப்பக்கத் தொடையில் அமரச் செய்து தழுவிக் கொண்டுள்ள ஏரம்ப கணபதியின் திருவுருவம் காணப்படுகின்றது.

3. சுசீந்திரம் தாணுமாலயப் பெருமான் கோயிலில், அம்மையின் சந்நிதிக்கு எதிரே, விநாயகரின் பெண்மைத் திருவுருவம் (கணேசானி(உள்ளது. ஒரு காலை மடித்து, மற்றொரு காலைத் தரையில் ஊன்றிக் கொண்டு, சுகாசன நிலையில், பாசம் அங்குசம் ஏந்தி, அபய வரத முத்திரைகளுடன். நான்கு கரங்கள் உடையதாக அத்திருவுருவம் விளங்குகின்றது.

4 ஜபல்பூருக்கு அருகே, பேரேகாட் என்னும் இடத்தில் இத்தகைய கணேசானியின் திருவுருவம் காணப் படுகின்றது.

5 மதுரைக் கோயிலில், துவார பாலகருக்கு அருகே கம்பத்தடிமண்ட பத்தில், வியாக்கிரபாத கணேசானி என்னும் திருவுருவம், இரண்டு கைகளுடன் ஒரு கையில்; தாமரை ஏந்திக் கொண்டு, மற்றொரு கையை மீனாட்சி அம்மை போல் தொங்க விட்டுக் கொண்டுள்ளது.

6 வேலூர் கோட்டையில், சிற்பக் கலை நலம் செறிந்த திருக்கல்யாண மண்டபத்தில், நவநீத கிருஷ்ணரைப் போல அழகிய குழந்தை வடிவத்தில் விநாயகர் விளங்குகின்றார்.

7 விநாயகருக்கு மூஷிகம் என்னும் பெருச்சாளியே வாகனம் ஆயினும். அவருக்கு சிங்கமும் வாகனமாகச் சில இடங்களில் காணப்படுகின்றது. சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டு ஐந்து தலைகளுடன் கூடிய பஞ்சமுக விநாயகர் திருவொற்றியூர் தியாகேசுவரர் கோயிலி லும், நாகபட்டினம் காயரோகணேசு வரர் கோயிலிலும் எழுந்தருளியுள்ளார். திருவொற்றியூரில் ஐந்து தலைகளும் ஒரே வரிசையில் உள்ளன. நாகப்பட்டினத்தில் நான்கு திசைகளிலும் நான்கு தலைகளும் மேலே ஒரு தலையும் உள்ளது.

8 மதுரை, திருச்செந்தூர் சிதம்பரம், குமரகோட்டம் முதலிய தலங் களில், முக்குறுணி விநாயகர் மிகப் பெரிய திருவுருவம் கொண்டு விளங்குகின்றார். இவருக்கு முக்குறுணி அரிசியில் மோதகம் செய்து படைக்கப்படுகிறது.

6 தஞ்சை மாவட்டம் திருநள் ளாற்றில். சாளிக்கிராமம் என்னும் சிலை வடிவத்தில் விநாயகர் பூசிக்கப்பெறு கின்றார்.

10 மைசூர் மாநிலத்தில் அளப்ட் (துவார சமுத்திரம்) என்னும் இடத்தில், ஒய்சளேசுவரர் கோயிலில் உள்ள மிகச் சிறந்த, வேலைப்பாடு உடைய நிருத்தன விநாயகர் திருவுருவம் கண்டு மகிழத் தக்கது

11 விநாயகர் திருவுருவங்களில், பொதுவாகப் பெரும்பாலும் துதிக்கை யானது இடப்புறமாகவே இருக்கும். ஆனால் சுவாமிமலை என்னும் முருகன் தலத்திற்கு அருகேயுள்ள, திருவலஞ்சுழி என்னும் தேவாரப் பாடல் பெற்ற தலத்தில் வலப்புறமாகச் சுழித்துள்ள தும்பிக்கையுடன் கூடிய, வலம்புரி விநாயகர் திருவுருவம் மிகச் சிறப்பான முறையில் அமைந்திருக்கின்றது. சிற்ப வேலைப்பாடுகளிலேயேமிகவும் கடினமான தாகப் புகழோங்கி உள்ள திருவலஞ் சுழிப் பலகணியின் சிற்பத் திறனும் நாம் கண்டு களிதுளும்பற்பாலது.

12 மைசூர் மாநிலத்தில் நஞ்சன்கூடு என்னும் இடத்தில் உள்ள உச்சிஷ்ட (சக்தி) கணபதி என்னும் திருவுருவம் மிக்க சிறப்பானதொன்று, 'மந்திர மகார்ணவம்' என்னும் முறையில் இத் திருவுருவம் அமைக்கப் பெற்றுள்ளது.

13 விநாயகப் பெருமான், பொது வாகக் கோயில்களில் பெரும்பாலும் திருச்சுற்றுலைகளின் முகப்பிலேயே, இடம் பெற்றிருப்பது வழக்கம். ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில், காரைக்குடியினின்று திருப்புத்தூருக்குச்

செல்லும் வழியில், குன்றக்குடிக்கு அருகே பிள்ளையார்பட்டிக் கோயிலில், கருவறையிலேயே விநாயகர் மூலவராக எழுந்தருளியுள்ளார். வேறு எங்கும் இல்லாத முறையில், அங்கு அவர் இரண்டு திருக் கைகளுடன் மட்டும் காணப்படுகின்றார். விநாயகருக்குத் தமிழ் நாட்டில் முதல் முதலாக எடுக்கப் பெற்ற கோயில்களுள் இதுவே மிகப் பழமையான கோயில் என்பது அறிதற்குரியது.

14 ஆந்திர மாநிலத்தில் திருப்பருப்பதம் என்னும் தேவாரப் பாடல் பெற்ற ஸ்ரீசயிலத்தல், விநாயகரின் அழகிய திருவுருவம் கண்ணபிரானைப் போல வேய்ங் குழல் ஊதும் நிலையில் அமைந்து திகழ்கின்றது. தமிழ் நாட்டிற் சில இடங்களில் வீணை ஏந்திய விநாயகரின் திருவுருவம் காணப்படுகின்றது.

15 மகாராட்டிர மாநிலத்தில், பாலகங்காதர திலகர் என்னும் தேசியப் பெருந்தலைவர், தேசப் பற்றை ஊட்டி மிகவும் வளர்க்கும் முறையில் விநாயக சதுர்த்தி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுதற்குப் பெரிதும் ஊக்கம் அளித்தார். அம்மாநிலத்தில் மார்கோவான் என்னும் இடத்திலும் அதைச் சுற்றிலும் விநாயகருக்கென்று பல புகழ் பெற்ற கோயில்கள் அமைந்துள்ளன. அக்கோயில்களில் முறையே மயூரேசர், சிந்தாமணி விநாயகர், விக்கினேசுவரர், விநாயகர், வல்லாளேசுவரர், கணபதி, கிரிஜத்மகர், சித்தி விநாயகர் என்னும் அஷ்ட விநாயகர்கள், கோயில் கொண்டுள்ளனர். தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளிக் குன்றின் மேல் உள்ள உச்சிப்பிள்ளையார் கோயிலும் மிக்க புகழ் வாய்ந்தது.

16 காஞ்சிபுரத்தில் திருவோண காந்தன் தளி என்னும் தேவாரப் பாடல் பெற்ற கோயிலில், கருவறை மண்டபத்தினது நுழைவாயிற் சுவரின் முகப்பில் விநாயகர் திருவுருவம் ஒன்று உள்ளது. அவர் தம் அருகே சென்று, நாம் செவியை அணுக வைத்து நிற்பின், ஒருவகை ஓங்கார ஒலி ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்கலாம். இத் திருவுருவை அமைத்த சிற்பக் கலைஞர் யாரரோ? சிலையில் அமைந்த திருவுருவில், எங்ஙனம இவ்வகை ஒலி எழுகின்றது என்பது வியப்பாக உள்ளது! எத்தனையோ நெடுங் காலமாக, எத்தனையோ பல்லாயிரக் கணக்கான மக்கள், இவ்வொலியைக் கேட்டு, மகிழ்ந்து வியந்து வணங்கிச் செல்கின்றனர்.

வல்லபை கணபதி:-

விநாயகப் பெருமானைப் பெரும்பாலும் திருமணம் ஆகாத பிரமச்சாரி நிலையினராகவே, பொது மக்கள் கருதுவர். எனினும் விநாயகருக்கு வல்லபை என்னும் சக்தியை மனைவியாக நூல்கள் குறிப்பிடும். வல்லபையோடு கூடிய கணபதிக்கு வல்லபகணபதி என்பது பெயர். இவர் பத்துக் கைகளை உடையவராக விளங்குவார். இப் பத்துக் கைகளிலும் முறையே திருமகள், பார்வதி, இரதி, நிலமகள் ஆகியோருக்கு உரிய தாமரை, பாசம், உற்பலம், நெற்கதிர் ஆகியவைகளையும் திருமால், சிவ பெருமான், மன்மதன், வராகன் ஆகியோருக்கு முறையே உரிய சக்கரம், சூலம், வில், கதாயுதம் என்பவற்றையும் ஒற்றைத் தந்தம் மாதுளம்பழம் ஆகியவற்றையும் ஏந்திக் கொண்டிருப்பர். இவ்வல்லப கணபதியை வழிபடுவோர் எல்லா வல்லமைகளையும் பெறுவர். நினைத்த செயல்களை எல்லாம் இனிது நிறைவேற்றி முடிப்பர். இராமலிங்க அடிகளார் 'வல்லப கணேசர்' 'சித்தி விநாயகர்' பற்றிப் புகழ்ந்து சிறந்த சில திருப்பதிகங்களைத் தமது திருவருட்பாவில் அருளிச் செய்துள்ளார்.

முடிவுரை:-

ஞானத் தெய்வமாகிய விநாயகர், சித்தி புத்தி என்னும் இருமனைவியரை மணந்து கொண்டு க்ஷேமம் லாபம் என்னும் இரு புதல்வர்களைப் பெற்றெடுத்துள்ளார் என்பர் பெரியோர். விநாயகரை வழிபடுபவர்களுக்கு நினைத்தது கைகூடும்; அறிவாற்றல் ஓங்கும்; இன்ப வாழ்வும் நற்பேறுகளும் ஏற்படும் என்பது இதன் கருத்து. எனவே இத்தகைய பல சிறப்புக்களையுடைய விநாயகப் பெருமானை நாம் அன்புடன் வணங்கினால், நமக்கு வாக்குண்டாம், நல்ல மணமுண்டாம், மாமலராள் நோக்குண்டாம்; மேனி நுடங்காது" ஆதலின் விநாயகரை நாம் அன்புடன் பணிந்து வழிபட்டு, நலம் பலவும் பெற்று உய்வோமாக!

உடல்பொருள் ஆவியை இறைவற்(கு) ஒப்படைத்தல்
சட்டம்என உரைத்தார் அண்ணல்
உடல்பொருள் ஆவியை இறைவற்(கு) ஒப்படைத்தேன்
எனஉரைத்துத் தொடங்கல் சட்டம்
உடல்பொருள் ஆவியை இறைவற் (கு) ஒப்படைக்கும்
செயலைநிறை வேற்றல் சட்டம்
உடல்பொருள் ஆவியை முழுதும் ஒப்படைத்த
போது சட்டம் முழுமை யாமே.

—கருணைமிகு வள்ளல்-பக்கம்-377.

'சட்டம்' எனும் தாய்

அதிகாலை யில்தண்ணீரில் ஆட்டி விபூதி தீர்த்தம்
அருந்தப் புரியும் எங்கள் தாய்
துதிசெய் தொருகோ யிலைச் சுற்றிப் பணிந்துபோற்றித்
தூய்மை பெறப் புரியும் தாய்
பதிநினை வைஅளித்துப் பாசமெல்லாம் பொடித்துப்
பசுத்துவம் நீக்கும் எங்கள் தாய்
பதியெனும் நல்லிருடி நகர் அமர் குருநாதர்
பார்க்கருள் சட்டமெனும் தாய். 1

மருந்தருந் தாநெறியில் மன்னித் திகழவைத்து
வரும்பிணி யாவும் நீக்கும் தாய்
அருந்தமெய்ஞ் ஞானஅமு தளித்(து)உப வாசம் தந்துள்
அருள்விழி யைத்திறக்கும் தாய்
பெருந்தன மாம்தவத்தைப் பேணும் அடியவர்க்குப்
பேரின்ப மாய்விளங்கும் தாய்
திருந்திஉய் யுமாறென்னை யீர்த்து நலன்கள் அருள்
திருவருட் சட்டமெனும் தாய். 2

பொய்வழி யைவிலக்கிப் புனிதம் மிகப்புரிந்து
போதம் புகட்டியருள் தாய்
மெய்வழி யிதுவென மேதினிக் கேஉணர்த்தி
மேன்மை பெறப் புரியும் தாய்
உய்வழி யொன்றும்அறி யாமல் அலைந்தஎனை
ஊக்கிப் புரந்தருளும் தாய்
தெய்வ ஒளியருளிச் செம்மை அனைத்தும் நல்கும்
திருவருட் சட்டமெனும் தாய். 3

குருடர் விழிபெறவும் செவிடர் செவிபெறவும்
குவலயத் தேஅருளும் தாய்
பருதி ஒளியினுள்ளும் மதியின் நிலவினுள்ளும்
மழையினுள் ளும்நிலவும் தாய்
குருதியோட் டத்தினுள்ளும் நாடி நரம்பினுள்ளும்
குலவுமூச் சுள்ளும் மேவும் தாம்
இருடி நகர்சற்குரு திருவரு ளின்உருவாய்
இலகருட் சட்டமெனும் தாய். 4

முடவரும் கைகால் பெற்று மூதுல கில்திகழ
　　முழுக்கரு ணைபுரியும் தாய்
உடற்பிணி அனைத்தையும் உறுபவப் பிணியையும்
　　ஒழித்துச் சுகம் வழங்கும் தாய்
படிப்பறி யாதவரும் பரமப தம்பெற்றுய்யப்
　　பரிந்தருள் நல்கும் எங்கள் தாய்
இடக்கு மிகும்எனையும் ஈர்த்துத் திருத்திப் பேணும்
　　இன்னருட் சட்டமெனும் தாய். 5

ஊமைக்கு வாக்கருளி மலடுக்குப் பிள்ளைநல்கி
　　உவகை மிகப்புரியும் தாய்
ஓமக்க ரத்தைஓதி உள்ளொளி யைவிளக்கி
　　உண்மைப் பொருள் உணர்த்தும் தாய்
நேமப் படிநடத்தி நிட்டையைக் கூட்டிவைத்து
　　நிகரில் நிலைகள் அருள் தாய்
காமக் கனல்தணித்துக் கடுந்தவத் தைவளர்த்துக்
　　கருணைசெய் சட்டமெனும் தாய் 6

நிகழ்வன முன்னுணர்த்தி நெஞ்சினுக் கெச்சரித்து
　　நீளுள கிற்புரக்கும் தாய்
அகழ்பவ ரையும்தாங்கும் அவனியைப் போல் அருளால்
　　அடியர் பிழைபொறுக்கும் தாய்
புகழ்பொறு மைபுனிதம் போகம்போ தம்அனைத்தும்
　　புணர்த்தி வளர்த்தருளும் தாய்
திகழும்எல் லாஉயிரும் செல்வம்எல் லாமும் எய்திச்
　　செழிக்கச்செய் சட்டமெனும் தாய். 7

ஆனந்த மாம்வடிவோ டனைத்துயி ருள்ளும் நிறைந்
　　தருளமு தையருத்தும் தாய்
ஞானம் தரும்குருவாய் நன்மறை யின்பொருளாய்
　　நாதவிந் தாய்த்திகழும் தாய்
மோனம் தழைநிலையாய் முத்திக் கனல்வடிவாய்
　　மூல மலம்களையும் தாய்
தானந்த மில்லா தாகித் தாரணி யெங்கும் ஓங்கும்
　　சட்டம் எனப்பொலியும் தாய். 8

வேதம் அனைத்தினுள்ளும் விரிந்தும்சூக் குமமாயும்
　　விளக்கிக் கொண்டே விளங்கும் தாய்
பூதபெள திகமாகிப் பொறிபுலன் யாவினுள்ளும்
　　புகுந்து புனிதமாக்கும் தாய்

ஏதம் அனைத்தும்தவிர்த் தினியநல் வாழ்வுநல்கி
ஏற்றம் மிகஅளிக்கும் தாய்
சாதனம் நன்றுகூறி சாதன மாய்ப்பயனும்
சட்டம் எனப்பொலியும் தாய். 9

கண்ணும் ஒளியுமாகிக் காதும் ஒலியுமாகிக்
கையும் செயலும்ஆகும் தாய்
எண்ணம் அனைத்துமாகி எண்ணப் படும்பொருளாய்
எங்கும் நிறைந்திலங்கும் தாய்
விண்ணுல கச்சுரரும் விழுத்தவ முனிவரரும்
வியந்து புகழவொளிர் தாய்
மண்ணுல கர்க்குத்தூய பக்குவம் நல்கிப்பேணும்
மாணருட் சட்டமெனும் தாய். 10


ஆன்ம நேயஒருமைப் பாட்டை விளக்கித்தூய
அருளமுதம் வழங்கும் தாய்
ஊன்மலி யும்உடம்பை உயர்திருக் கோயிலாக்கி
ஒப்பில் பொலிவருளும் தாய்
மேன்மையெல் லாம்உதவி வழித்துணை யாய்அமைந்துள்
மேவும்அச் சம்தவிர்க்கும் தாய்
நான்மலி நெஞ்சினையும் ஞானத்தி னல்திருத்தும்
நல்லருட் சட்டமெனும் தாய். 11

மதம்மொழி நாடுஜாதி பேதமெல் லாம்கடந்து
வயங்கும் இறையைநிகர் தாய்
இதமொழி கூறிஉண்மை இன்பநெறி உணர்த்தி
இகபர வாழ்வருளும் தாய்
உததிசூழ் உலகினில் ஒருவரும் அற்றவர்க்கும்
உறுதுணை யாய்ப்பொலியும் தாய்
பதமலர் என்சிரமேல் பதித்துப் பக்குவம் செய்து
பயனருள் சட்டமெனும் தாய். 12


———

துளசிதீர்த் தத்தால் சூழும் நோயறும்; தூய்மையுண்டாம்;
துளசிதீர்த் தத்தால் உள்ளம் தெளிவுறும்; சோர்வு நீங்கும்;
துளசிதீர்த் தத்தால் ஞானம் தோன்றிடும்; சுகமுண்டாகும்;
துளசிதீர்த் தத்தால் எய்தும் நலம்சொலற் காமோ?என்றார்.

—கருணைமிகு வள்ளல்-பக்கம்-548.



இரெட்டியப்பட்டி குருநாதர் திருக்கோயிலில் உள்ள
மூலஸ்தான மூர்த்தி



விநாயகர் குருநாதர்

இரெட்டியப்பட்டி குருநாதர் திருக்கோயிலில் உள்ள
உத்ஸவ மூர்த்திகள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சட்டமும் சுகம் பெறு திட்டமும்

திருப்பணித் திலகம்

ஸ்ரீகுருநாதர் சட்டத்தில் முக்கியமாகக் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைக் கேட்டதும் சிலர் அஞ்சுகிறார்கள். இது நம்மால் முடியாது என்று முடிவு கட்டிவிடுகிறார்கள். சிலர் சட்டத்தில் தான் இருக்கிறேன்; சரிவர அனுஷ்டிக்க இயலவில்லை என்று கூறிவிடுகிறார்கள்.

1 ஏதாவது ஒரு காரியத்தைத் தொடங்கும்போது நம்மால் முடிக்க முடியும் என்று நம்பிக்கையுடன் தான் காரியத்தைத் தொடங்குகிறோம்.

2 கண்டிப்பாக முடித்துத்தான் தீர வேண்டும் என்று வைராக்கியம் பூணுகிறோம். நம்பிக்கை, வைராக்கியம் இவை இரண்டும் தான் நம்முடைய வினைகளைப் போக்கிக்கொள்ளவும், ஆண்டவனை அடையவும் மிக முக்கியமானவை. ஒரு பறவை பறக்கும் போது இரண்டு இறக்கைகளையும் பயன்படுத்திக்கொள்ளும். அந்த இரண்டு இறக்கையில் ஒன்று நம்பிக்கையும் மற்றொன்று வைராக்கியமும் என்று வைத்துக் கொண்டால் தான், நாம் மேல் நிலைக்குப் போக முடியும்

சட்டத்தில் விடியல் நீராட்டம் சிறப்பான அம்சம் ஆகும். ஒரு நாள் கூடத் தவறாமல் விடியல் 4 மணிக்கு நீராடி முடிக்க வேண்டும். வியாதி வந்தால் மருந்து அருந்தக் கூடாது என்பது சட்டம். வியாதியே வராமல் தடுத்துக்கொள்வதற்கு 4 மணி ஸ்னானம் முக்கியம். பச்சை நீரில் அந்த சக்தி 4 மணி முதல் $4\frac{1}{2}$ மணி வரை தான் முழுமையாக உள்ளது. இதை நம் முன்னோர்கள் கையாண்டு வந்துள்ளார்கள். தற்போதும் சில பெரியோர்கள் கையாண்டு வருகிறார்கள். ரஷ்யாவிலும் கூட வியாதி வராமல் தடுப்பதற்கு விடியற்காலை பச்சை நீரில் ஸ்னானம் செய்கிறார்கள் என்பதை அடியேன் ஒரு புஸ்தகத்தில் படித்திருக்கிறேன். சிலர் பச்சை நீரில் ஸ்னானம் செய்தால் வியாதி வருகிறது என்று பயப்படுகிறார்கள், அவர்களும் ஆண்டவர் சட்டத்தை எடுத்துக்கொண்டு விடியற் காலையில் பச்சை நீரில் ஸ்னானம் செய்து பார்த்தால் அதன் மகிமை விளங்கும்.

அடுத்ததாக விநாயகர் வழிபாடு. விநாயகரை வழிபட்டால் எல்லா தெய்வங்களையும் வழிபட்ட பலன் கிடைக்கிறது. பிரணவ ஸ்வரூபியாகிய அவரே ஆதியும் அந்தமுமாக உள்ளவர். விநாயகரைப் பற்றி விளக்க வேண்டும் என்றால் எத்தனை பக்கம் எழுதினாலும் போதாது அடியேனுக்கு எல்லாவற்றையும் கூறவும் முடியாது. சிலர் காலையில் ஒரு மைல் நடந்து செல்கிறேன், அப்பொழுது தான் வாயு தொந்தரவு இராது என்கிறார்கள். இதுவும் தலை விதியா? அவர்கள் விநாயகரை 108 முறை அல்லது 54 முறை வலம் வந்தால் எல்லா வியாதிகளும் போய் விடும் என்பதை உணரவில்லை. அடுத்ததாக துளசி தீர்த்தம். அதில் ஆண்டவர் அருள் பிரசாதமாகிய திருநீறு இட்டு சாப்பிட வேண்டும். காலையில் துளசியை உட்கொண்டால் பல வியாதிகள் நீங்கிவிடும்.

வியாதி வந்தால் மருந்து கூடாது என்பதைக் கேட்டதும் சிலர் பயப்படுகிறார்கள். 'இது ஒரு மூடநம்பிக்கை; நாமே சாவை வரவேற்கிறோம்' என்று கூறிவிடுகிறார்கள். மருந்து அருந்தினால்

சாவு கிடையாதா? மருந்து அருந்துபவன் எத்தனை டாக்டரையும் எத்தனை ஆஸ்பத்திரியையும் பார்த்து எத்தனை காலமும், எத்தனை பணச்செலவையும் செய்தும் இறந்து விடுகிறான். அப்பொழுது தான்புரிகிறது அவனுக்கு. ஆயுள் அவ்வளவு தான், பணம் செலவாக வேண்டிய வேளை என்று மனதை சமாதானம் செய்துக் கொள்கிறான்.

ஆனால், சட்டத்தில் சேர்ந்து வைராக்கியம் உள்ளவர்கள் 30, 40, 50 ஆண்டு காலம் வைத்தியம் செய்யாமலேயே வாழ்ந்து வருபவர்களைப் பார்த்தாவது துணிவுக்கு வரலாமே! பிரசவத்துக்கு எப்படி பச்சை நீரைக் கொட்டுவது? மருந்தும் டாக்டரும் இல்லாமல் இருக்க முடியுமா? என்று கேட்கிறார்கள். அடியேனுடைய குடும்பத்தில் மனைவி, மகள், மருமகள் இப்படி 10-12 பிரசவத்தைப் பார்த்திருக்கிறேன்.

மருந்து இல்லாமல் ஆயிரக்கணக்கானவர்கள் சட்டத்தில் பிரசவித்து எத்தனை குருநாதன், ஞானகுரு, பாலகுரு செல்வகுரு, சற்குருமூர்த்தி, பிரணவமூர்த்தி இப்படி எத்தனை மூர்த்திகள் எத்தனை கணேசன் இப்படி எல்லாம் பலர் இருப்பதைக் காண்கிறோம். ஆண்டவரை உறுதியாகப் பற்றுவதற்கு இதை எல்லாம் பார்த்தாவது தைரியம் அடையுங்கள்.

அடுத்ததாக உயிர்க் கொலை செய்யாமை, புலால் உண்ணாமை மிக மிக முக்கியமானவை. புல், பூண்டு முதல் சகல ஜீவன்களிடத்திலும் ஆண்டவன் உள் உறைகின்றான். கடவுளை பரமாத்மா என்று கூறுகிறோம். பல ஆத்மாக்கள் சேர்ந்ததுதான் பரமாத்மா. தனித்தனியாகக் கூறினால் ஜீவாத்மா என்கிறோம். ஆண்டவரை அறிய, அடைய உயிர்களைக் கொல்லுதல், புலால் உண்ணுதல், கூடாது.

சட்டத்தில் ஒரு முக்கிய அம்சம் விரதம் இருப்பது. இதுவும் வியாதி வராமல் தடுக்கிறது சிலர் வீட்டில் இருந்தால் கூட மூன்று நான்கு வேளை உணவு கொள்வார்கள். வெளியில் புறப்பட்டவுடன் வழியில் கிடைக்கும் வித விதமான உணவுப் பண்டங்கள் அத்தனையும் சாப்பிட்டு விட்டு "சம்பாதிப்பதில் பாதிப்பணம் டாக்டருக்குக் கொடுக்கிறேன்" என்கிறார்கள்.

இக்காலத்தில் புதுப்புது வியாதிகள் வருகின்றன. புதுப்புது மருந்துகள் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்த மருந்தினாலேயே புதிய வியாதியும் தோன்றுகிறது. வியாதி வந்தாலும் மருந்து அருந்த வேண்டாம் என்பதுதான் சட்டம். எல்லா வியாதிகளையும் நம் ஆண்டவர் விபூதி ஒன்றே போக்கி விடுகிறது. மருந்து அருந்தும் போதும் வியாதி வரும் போதும் ஆகாரக் கட்டுப்பாடு தேவை. எப்போதுமே ஆகாரக் கட்டுப்பாடும், சில தினங்களில் விரதம் இருப்பதும் போன்ற கொள்கையை உடைய ஆண்டவரின் அடியார்களுக்கு வியாதியும் இல்லை. மருந்தும் இல்லை.

ஆரம்பத்தில் வெள்ளிக்கிழமை விரதம் எல்லோருக்கும் உண்டு. பிறகு அடியவர்கள் உடல் நிலைக்கேற்ற படியும் தீவிரபக்குவத்திற்கேற்ற படியும் ஆண்டவரே விரதத்தை அநுஷ்டிக்கும்படி கட்டளை இடுகிறார்கள். உபவாசம் என்பதன் பொருள்: உப-சமீப, வாசம்—வசிப்பது. ஆண்டவனுடைய சமீபத்தில்வசிக்கும் நாள்தான் உபவாசம். அன்று நம்முளம் சதா ஆண்டவனையே நினைக்கிறது. அடுத்ததாக லாகிரி வஸ்துக்கள், மது பானம் போன்றவையும் சில வியாதிகளைத் தோற்றுவிக்கின்றன. ஆதலால் அவைகளையும் அறவே நீக்க வேண்டும்.

நம் ஆண்டவர் படிப்படியாக எல்லோரும் முத்திப் பேற்றை அடைய வேண்டும் என்றே இந்த சட்டத்தை

ஏற்படுத்தி உள்ளார்கள். உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் மனம் தூய்மை அடைய முடியும். அலையாத நீரில்தான் அடியில் இருக்கும் பொருளைக் காண முடியும். அப்படியே மன அலைவை இரவு நேரத்தில்தான் சற்று நிறுத்த முடியும். ஆழமாகிய உள்ளத்தில் உள்ள ஆண்டவனை அறிய **நிஷ்டை இருத்தல் அவசியம்.** பிரணவ சொரூபியாகிய ஆண்டவரை மனதில் நினைத்து, தினமும் படிப்படியாக அரை மணி நேரம், ஒருமணி நேரம், இரண்டு மணி நேரம் என இப்படி நிஷ்டை இருந்து பழகுதல் வேண்டும். எல்லோரும் தைரியமாக ஆண்டவர் சட்டத்தைப் பற்றுங்கள்: நம்பிக்கை வையுங்கள் வைராக்கியம் பூணுங்கள்.

மனிதப் பிறவி எடுத்ததன் பயன் இனி பிறவாத நிலையை அடைய, பிறப்பு இறப்பு இல்லாத ஆண்டவனை இடைவிடாது மனத்தில் எண்ணி, முக்திப் பேற்றை அடைவதேயாகும். அவனருளாலேயே அதையும் அடைய பிரார்த்திக்கின்றேன்.

அடியேனது பேரன்புக்குரிய திரு' பாலகவிஸ்வாமிகளுக்கு ஆண்டவர் நீண்ட ஆயுளைத்தந்து இன்னும் எத்தனையோ புத்தகம் வெளிவர அருள் புரிய வேண்டுகிறேன்.

ஆட்கொண் டருள் திறம்

கள்ளம் மிக்கஉள்ளம் கொண்ட எனைமணம்
கொள்ள விழைந்தாரடி—மணம்
கொள்ள விழைந்தாரடி

உள்ள பொருளினை உள்ள படியே
உணர்த்தும்என் கொண்கரடி—நன்
றுணர்த்தும்என் கொண்கரடி

உள்ளன் பணுவும் அறியா எனையும்
உவந்தழைத் திட்டாரடி—உள்
ளுவந்தழைத் திட்டாரடி

மெள்ளமெள் ளத்தன் கரம்என் சிரத்தினில்
மேவப் புரிந்தாரடி—நன்று
மேவப் புரிந்தாரடி

விள்ளருங் காலமாய் உள்ள உறவென
விண்டுணர்த் திட்டாரடி—வாயால்
விண்டுணர்த் திட்டாரடி

உள்ளஉள் ளநன் றினிக்கும் ஞானவமு
தூட்டி யணைத்தாரடி—இனி
தூட்டி யணைத்தாரடி

வெள்ளையுள் ளம்கொண்ட உன்னையா னென்றும்
விடேனென் றுரைத்தாரடி—என்றும்
விடேனென் றுரைத்தாரடி

எள்ளும் வகையா னியற்றிய பாவம்
எரியெழச் செய்தாரடி—நன்
றெரியெழச் செய்தாரடி

உள்ளும் புறமும் அமையும்மெய்க் காவலாய்
உற்றமைந் திட்டாரடி—நன்றே
உற்றமைந் திட்டாரடி

துள்ளும் கரணங்கள் துள்ளாவண் ணம்ஞான
வள்ளல் புரிந்தாரடி—ஞான
வள்ளல் புரிந்தாரடி

வெள்ள மெனவே பெருகும் திருவருள்
வள்ளல் அளித்தாரடி—அருள்
வள்ளல் அளித்தாரடி

உள்ளம்வாக் குக்காயம் யாவும்கைக் கொண்டெனக்
கோய்வளித் திட்டாரடி—எனக்
கோய்வளித் திட்டாரடி

உள்ள உரைக்கவொண் ணுமெய்த் தவப்பே
றுவந்தெனக் கீந்தாரடி—நன்
றுவந்தெனக் கீந்தாரடி

பள்ளிபல் லண்டமுமாக அமைத்தருட்
பாடம்கற் பிப்பாரடி—அருட்
பாடம்கற் பிப்பாரடி

தெள்ளும் உணர்வோ டருட்பாடம் கற்றால்
திருவடி சேர்ப்பாரடி—நன்றே
திருவடி சேர்ப்பாரடி

அள்ளஅள் ளக்குறை யாத அருட்செல்வம்
அடியார்க் குரியதடி—உண்மை
அடியார்க் குரியதடி

———

அருட்சட்ட அடியார்கள் அனைவருக்கும் இகபர நலங்கள் அனைத்தும் வழங்கியருளுமாறு குருபரம் பொருளை இறைஞ்சுகிறோம்.

வே. இராமலிங்கம், B E. நெய்வேலி,
வே. குருநாதன், M. A. பவானி

ஓம் ஸ்ரீ பரிபூர்ணர் திருவருள் வாழ்க!

தலைவியின் ஏக்கம்

பூக்களும் கனிகளும் நிறைந்த மரங்கள் வானளாவ உயர்ந்து விளங்கும் கவின்மிகு சோலை ஒன்று. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால் வகைப் பூக்களும் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு மணம் வீசுகின்றன இவர்களுக்கு நாங்கள் இளைத்தவர்களா என்பதைப் போன்று வாழை, மா, பலா. கொய்யா, விளா போன்ற பழங்கள் மணம் வீசுகின்றன.

எழில் மிகுந்த இச்சோலையினுள் நுழைகின்றோம். எங்கும் யாரும் காணவில்லையே என எண்ணிய நமக்கு மெல்லிய குரலொலி கேட்கின்றது. யாரோ இருவர் பேசுகின்றனர். என்ன என்று கவனிப்போமா?

ஏக்கம் மிகுந்த குரல் இழையோடுகின்றது. ஊக்கம் ஊட்டும் குரல் உடன் ஒலிக்கின்றது. யாராக இருக்கலாம். பெண் குரலாகக் கேட்கின்றதே. ஆமாம்! உற்றுக் கேட்போம்.

தலைவி ஓங்கியுயர்ந்த மரத்தைச் சுற்றிச் செழுமையாகப் படர்ந்த கொடி ஒன்றினைப் பற்றிச் சாய்ந்த வண்ணம் நிற்கிறாள். பேரழகி பெண்களுக்கெல்லாம் அரசி போன்று விளங்குகின்றாள். சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சற்றும் மதித்தாளில்லை எதையோ எதிர் நோக்கி ஏக்கத்தோடு நெடுமூச்செறிகிறாள். எதிரே தரையில் அமர்ந்து உரிமையோடு உரையாடும் அவள் தோழியாகத்தான் இருக்க வேண்டும்.

தோழி: தலைவி! இப்படி யாரையோ நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கின்றாயே அவர் என்ன அவ்வளவு புகழ் பெற்றவரா?

தலைவி; தன் நினைவு வரப் பெற்றவளாய் (தலைவனைப் பற்றிய பேச்சை எடுத்தால் மட்டுமே அவளுக்குத் தன் நினைவு வரும்)-ம் என்ன கேட்டாய்? அவர் எத்தகைய புகழ் உடையவர் என்றா? உலகத்திலே உள்ள அத்தனை உயிர்களுக்கும் அவர் கொடுத்தால் தான் புகழ் உண்டு. "பூசை புரிகின்ற மெய்த்தவத்தோருக்குப் புகழ் கொடுக்கின்ற தீரனடி"

தோழி: அவர் தம் புகழை மட்டும் கேட்டு உள்ளத்தைப் பறி கொடுத்தாயா அல்லது அவரை நேரில் கண்டதுண்டோ?

தலைவி: பரவசமடைந்தவளாய், கண்களைச் சிறிது நேரம் மூடிக் கொண்டு கற்பனையில் திளைத்தாள். பின்னர், நான் என்ன சொல்வேனடி, சொல்வதற்குச் சொல் ஏது அவர் பேரழகை "சொல்லத் தொலையாத அற்புதத் தானத்தைச் சொல்லவும் நாவுண்டோ தோகையரே எல்லையற்ற பரஞ்சோதியடி அவன் எங்கும்நிறைந்த பிரகாசனடி" "அண்டபகிரண்டம் அனைத்துமே தானுகிப் பண்டு பழுத்த பழம்" அதை நான் கண்டதுண்டு. உண்டதுண்டு.

தோழி: என்னடி பித்தம் பிடித்தவள் போல் உளறுகின்ருய்? சொல்லத் தொலேயாததாம், எல்லேயற்றதாம், பண்டு பழுத்ததாம், இத்தகைய ஒன்று உனக்கு எப்படியடி கிட்டும்?

தலேவி: ஏன் கிட்டாது? கிட்டுமட்டும் யான் உண்ணேன்; உறங்கேன்; அவர் பெருமைகளேயும், அருள்செயல்களேயும், அற்புதங்களேயும், அனுபவித்தால் தானே உனக்குத் தெரியும்?

தனக்கென ஒன்றும் வேண்டாத் தகைமையாளன், அவனுடைய ஊர் இரெட்டியப்பட்டி ஊர் சிறியதுதான். ஆனுல் அவருடைய புகழோ மிகப் பெரிது. இவ்வுலக மக்கள், பாமர மக்கள், ஏழை மக்கள் முத்தி நிலே அடைய வேண்டும் என்று எண்ணினுர். ஆஹா. அவர்தம் தயைமிகுந்த உள்ளம் வாடியது. ஏங்கியது. எதற்காக? தான் உய்வு பெறவா? இல்லேயில்லே. தன்னேப் பற்றிய சிந்தனேயே அவருக்கு எப்போதும் இருந்ததில்லே.

தோழி: எல்லா மக்களும் உய்ய வேண்டும் என்றுதான் எல்லாப் புராணங்களும் இதிகாசங்களும் தோன்றின. இவர் மட்டும் என்ன புதிதாய்க் கண்டார்?

தலேவி: இத்தனே காலமாக சான்றேர்களும், ஞானிகளும் கண்ட கனவை நனவாக்கினுரடி தோழீ நனவாக்கினுர். ஓர் உருவம் கொடுத்தார், வரையறுத்தார். விஞ்ஞானத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் இணேத்தார், பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தார். எளிய முறையில் சிறந்த பலனே நுகர வழி செய்தார், தேனுக இனிக்கும் கருத்துக்கள் அடங்கிய அருட்சட்டம் வகுத்தார்.

தோழி: வகுத்தால் மட்டும் போதுமா? அது நடை முறையில் நடைபெற வேண்டாமா? எத்தனேயோ திட்டங்கள் திட்டப்பட்டதோடு நின்று விட்டனவே.

தலேவி: ...க்கும் எங்கள் தலேவர். செயல் வீரர், கர்மவீரர், காக்கும்வீரர், அப்படி விட்டு விடுவாரா என்ன தம் திட்டத்தை? சட்டத்தைக் கடைப் பிடிக்கும் அனேத்து உயிர்களேயும் கண்ணுக்குள் கண்ணுக வைத்துக் காப்பார். காக்கின்றுர்.

தோழி அப்படியா? தெரியாமல் சொல்லி விட்டேன். உன் உள்ளத்தைக் கொள்ளே கொள்ள வேறு என்ன காரணம்?

தலேவி: கண்டால் ஈர்க்கும் காந்தரடி அவர் கூறுகிறேன் கேள். அருள் கனிந்த அற்புதத் தெய்வீகத் தோற்றம். கருணேநருத் துளிக்கும் திருவிழிகள், அருள் நெறி காட்டும் அற்புதத் திருவருட்சட்டத்தைப் புகலும் திரு வாய், அஞ்சாதே என்று அபயம் அளிக்கும் அருள் திருக்கரங்கள், எத் தகைய இடுக்கணில் உள்ளவர்களேயும், காக்கும் திருவடிகள். அத்திருவடிகளின் பெருமை ஒன்றைமட்டும் கூற என் ஒரு நா போதாது. திருநெறி காண மதுரையில் இருந்து திருக்குற்றுலம் சென்றன அத்திருவடிகள். பன்னிரண்டு ஆண்டுகளாக மடித்த நிலேயில் அமர்ந் திருந்தன. பெரும்பேற்றைப் பெற்ற பின் அதை யாருக்குக் கொடுப்பதென குற்றுலத்திலிருந்து காசி வரை நடந்து சென்றன. அம்மட்டோ: காசியில் கங்காதேவியின் அருள் பெற்று. ஆந்திர மாநிலத்தில் பெரும்பேறு பெற்ற மூப்பக்கவுண்டலுவுக்கு அருள் செய்த பின் பாரதத்தின் தென்கோடி வரை நடந்து பல அடியார்களேத் தேர்ந் தெடுத்தன, அத்திருவடிகள் பட்ட தனுல்தான் நம் பாரத நாடு புனிதம் பெற்றது. அத்திருவடிகள் பட்ட இட மெல்லாம் அருள்மணம் வீசின, அருள் நலம் கொழித்தன.

தோழி: அம்மாடி இவ்வளவு பெரியவரா உன் தலைவர்?

தலைவி; அவர் பெருமை அளப்பரியது. இன்னும் சொல்கிறேன் கேள். அவர் அருளுருவைக் கண்டதுமே எவரும் தம் மனத்தைப் பறி கொடுப்பர். பரந்த மார்பு, நீண்டு விளங்கும் திருக்கரங்கள். தவத்தின் ஆற்றலைக் காட்டும் நீண்ட திருமுடி ஒளிவீசும் தாடி, அடி யெடுத்து வைத்து நடந்தால் அருகில் இருப்பவர்களுக்கும் கேட்காது. அவர் அமரும் போதும், அசையும் போதும், அருள் உபதேசம் அருளும் போதும் அவர் தம் அங்க அசைவுகளைக் கண்டாரே அறிவர் இன்பத்தை, ஒரு மயில் நடனமாடுவதைப் போல இருக்கும் இம்மட்டோ! இன்னும் கூறுகிறேன் கேள்.

தூரத்தே அண்ணல் வருவதைக் கண்டவுடன் நமக்குள் மகிழ்வு உண்டாகும் களி துளும்பும். நம்மிடம் வருவாரோ நம்மை அணைப்பாரோ என்று ஏக்கம் உண்டாகும். (பெருமூச்சு விடுதல்) குழந்தையின் குணம் அவரிடம் உண்டு மெள்ள அவர் திரு வடிகளைத் தீண்டினால் அம்மம்மா எத்தனை இன்பம். இன்னும் அவர் திருவார்த்தைகளைக் கேட்பின் அதுவே திருவாசகமாகும். என்றும் கடுஞ் சொல் கூறார்.

தோழி; நீ கூறுவதைக் கேட்கக் கேட்க எனக்கும் அவரைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது, காட்டுவாயோ?

தலைவி: காட்டுவதா! அவரை நினைத் தாலே நான் என்னை மறந்து விடு கின்றேன். நான் எங்கே அவர் என்னிடம் வரும் போது காட்டுவது? ஆனால் வழி ஒன்று சொல்கிறேன் கேள். "ஆசை அபிமானமகன்று, அகம் புறம் சுத்தமாய்க் கலந்து, முற்றுந் தெளிவாகி விட்டால், அன்புடன் சற்குரு வருவார்; இன்ப மோன நிலைதனைத் தருவார்.

தோழி: ஆமாம். சொல்லுதற்கும் காணு தற்கும் எட்டா இத்தலைவர் எப்படி உன்னைக் கலந்தார்.

தலைவி: 'அடியார்க் கெளியவர்' அவர். தேவர்களாலும் காண முடியாதவ ராயினும் மனம் உருகி வேண்டி நின்றால் உடனே, எதிரில் வந்து தோன்றுவார். என்னை முழுதும் அவருக்கு ஒப்படைத்து விட்டேன். என் உடல், பொருள், ஆவி அனைத்தும் அவருக்கே அர்ப்பணம் செய்து விட்டேன். அவர் என் ஆசை யெலாம் அடக்கி அருளொடு கலந்தார். நான் என்ற கோட்டைக்குள் இருந்த தத்துவப் பொருள்களை எல்லாம் எமனுக்கு இடமில்லாமல் தனியாகக் கொள்ளை கொண்டார்.

அவர் என்னை ஆண்ட விதம் கூறு கிறேன் கேள். அவரைப் பற்றிக் கேட் டறிந்தேன். அவருக்கு என் உள்ளம் கோயிலாக்கினேன். எனக்கொன்றும் வேண்டாம் நின்பதமல்லாமல் என்று உறுதி கொண்டேன். ஆதிபராபர மாகிய அவர் இந்த அடிமையை ஆட் கொண்ட சூட்சுமம் என்னவென்று உரைப்பேன். என்னிடம் இருந்த கசடு களை நீக்கினார். அழுக்கை நீக்கி அமுதத்தைச் சொரிந்தார்.

இதுவரை எவை நிலை என எண்ணி னேனோ அவை எல்லாம் பொய்யாயின. எல்லா உயிர்களிலும் அவர் ஒருவரே இருப்பதை உணர்ந்தேன். பேரானந்தம் என்பது இதுதானோ என எண்ணினேன். அவரோடு இருப்பதையே விரும்பினேன். ஆனால்... ஆனால் அவர் என்னை எப்படி எல்லாம் வருத்துகின்றார். கல் நெஞ்சர் தாம்.

தோழி: என்னடி இது. இதுவரை ஏதோ புகழ்ந்து விட்டு இப்போது உன்னை வருத்துவதாகவும், கல் நெஞ்சக்காரர் என்றும் கூறுகின்றாயே இது நியாயமா?

தலைவி: பின் என்னடி! மாலையிட்ட நாள் முதலாய் மறுத்து முகம் பார்க்கவில்லை. பெண் பாவம் வீண் போகாப் பிழைகள் வந்து சேருமுன்னே கண் பார்வையிட்டுயிரைக்காரும் என்று வேண்டுகிறேன். கார்மேகம் போலக் கலங்கி அமுத கண்ணீர் ஆருய்ப் பெருக்கெடுக்கின்றது.

கணவனை அறிந்த மங்கை கருதியவள் சென்றணைந்த கலவியில் நயந்து கொஞ்சுங் கனியமிர்த முண்டவஞ்சி கனவிலும் மறந்து நெஞ்சம் அயர்வாளோ? நான் அந் நிலையில்தான் உள்ளேன். இவ்வுலக சுகம் ஏதும் எனக்குப் பிடிக்கவில்லை நீயே சொல் இவ்வளவு தூரம் என்னை வருத்தும் அவர் கல் நெஞ்சக்காரர் தானே!

தோழி: நீ இதுவரை கூறிய அவர் தம் ஒப்பற்ற குணங்களை வைத்து ஆராய்ந்தால் அவர் கல் நெஞ்சக்காரர் அல்லர். நீ இன்னும் பக்குவம் பெறவில்லை. முழுப் பக்குவம் ஆகட்டும் என்று காத்திருக்கின்ருர். அவசரப் படுகின்ருயே. ஆறு தன் கணவனுகிய கடலை அடையும் போது ஆரவாரம் எல்லாம் ஒடுங்கி எவ்வாறு மெதுவாகச் செல்கிறதோ அவ்வாறு அவரை அடையும் பக்குவம் நீ பெற்று விட்டால் உடனே வருவார். கவலைப்படாதே விரைவில் வருவார்.

''கலக்கமும் வேண்டாம் அம்மா
பெண்ணினரசே அவர்
கலங்காத கண்டனம்மா
பெண்ணினரசே

தலைவி: பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். இனி என்னுல் பொறுக்க முடியாது நானின்றி அவர் வாழ இயலும் அவரின்றி யான் வாழ இயலுமோ? என் வளையல்கள் நெகிழ்ந்தன. உடலில் பசலை பூத்தது. பாரிலுள்ளோர் ஏசிப் பழிக்கின்ருர்கள். கண்கள் உறங்க மறுக்கின்றன அவர் இப்போதே வர வேண்டும். என் தாபம் தீர்க்க வேண்டும். நான் அவருள் என்னுள் அவர் கலக்க வேண்டும். இது நடக்குமாடீ தோழீ.

தோழி: அம்மா! உன் குறிக்கோள் உயர்ந்தது. வாழ்க உன் உள்ளம்! நீ வைராக்கியமும், பக்தியும் பெற்றிருப்பதால் நீ நினைத்ததை அடைவாய்! இதுவே தருணம் உன் ஏக்கம் கண்டால் எனக்கே பொறுக்கவில்லை அவர் எவ்வாறு பொறுப்பார். ஓடி வருவார் அணைப்பார் இன்பமீவார்.

தலைவியின் ஏக்கத்தைக் கண்டோம். நாமும் அவ்வேக்கம் கொள்வோமா!

வெண்ணிலாவே

தூயவிண்ணி லேஇலங்கும் வெண்ணிலாவே—என்றன்
சோகம்தீர மார்க்கம் உண்டோ வெண்ணிலாவே
நாயகனைக் காணஎண்ணி வெண்ணிலாவே—இங்கே
நாளும் அழுதேங்கு கின்றேன் வெண்ணிலாவே

கருணைவடி வாளர்என்பார் வெண்ணிலாவே—என்பால்
கருணைஅவர்க் கென்றுண் டாமோ வெண்ணிலாவே
அருள்நயந்த வார்த்தை சொல்லி வெண்ணிலாவே—என்றன்
அருகில் அவர் என்றமர்வார் வெண்ணிலாவே

எங்கும்அவர் உள்ளார்என்பார் வெண்ணிலாவே—என்னுள்
எவ்விடத்தில் உள்ளார் சொல்வாய் வெண்ணிலாவே
கங்குல்பகல் என்பதின்றி வெண்ணிலாவே—அவரைக்
கலந்து களிக்க வேண்டும் வெண்ணிலாவே.

சக்தியெல்லா மீவார்என்பார் வெண்ணிலாவே—அவரைச்
சாரும்சக்தி யென்றீ வாரோ வெண்ணிலாவே
முக்தியின்ப மீவார்என்பார் வெண்ணிலாவே—பெற்று
மூழ்கியுள் ளமிழ வேண்டும் வெண்ணிலாவே

என்னைஅவர்க் கீந்துவிட்டேன் வெண்ணிலாவே—அன்றே
என்னுடல் பொரு ளுடனே வெண்ணிலாவே
தன்னைஎனக் கென்றீவார்சொல் வெண்ணிலாவே—அவர்க்காத்
தாங்கி உயிர் வாழுகின்றேன் வெண்ணிலாவே.

பண்ணின்மறை பாடுவாராம் வெண்ணிலாவே—அவர்
பாடும்மறை கேட்க வேண்டும் வெண்ணிலாவே
எண்ணில்பொரு ளானுர்என்பார் வெண்ணிலாவே—அவரை
எப்படியான் காண்பதோ சொல் வெண்ணிலாவே

ஆதியந்தம் இல்லார்என்பார் வெண்ணிலாவே—என்னை
அன்பொடணைப் பாரோ சொல்வாய் வெண்ணிலாவே
ஜோதிவடி வாளர்என்பார் வெண்ணிலாவே—அவர்
ஜோதிகண்டுள் ளொன்ற வேண்டும் வெண்ணிலாவே

வேண்டும்வரம் ஈவார்என்பார் வெண்ணிலாவே—ஏழை
வேண்டுவதிங் கேன் அறியார் வெண்ணிலாவே
கூண்டுளாவி உள்ளபோதே வெண்ணிலாவே—அவரைக்
கூப்பிட்டிங் கழைத்து வாடி வெண்ணிலாவே.

Religion for the poor and the rich
Sri Gurudev and Devotional Litterature By his disciples.

A. VENKATACHALAM.
Hon. Secretary,
Sri Reddiappatti Swamigal Illakkiya Pathippaham.

Mankind should remain eternally grateful to the saints and sages who have left treasures in the form of holy texts and sacred utterances. They serve as the royal route of devotion, safe and free from obstacles, for men of piety and sincerity to reach the Altar of the Almighty. Such spiritual leaders are born in this world almost in every generation. Sri Reddiapatti Swamigal is one such leader who belonged to the recent past.

Swamigal was born as Subramaniya Pillai on the 16th day of September 1856, to a pious couple Sri Veerabadra Pillai and Smt. Avudai Ammal of an average vellalar family at Reddiapatti Village in Tirunelveli District He did not receive much of an education in school. Even from his childhood he exhibited divine symptoms in his activities. He had taken physical exercise in his boyhood to keep his body and mind ever alert. He had been a cultivator and a trader, in the tradition of his family

To seek and fulfil the mission of his life, he left his village and reached Madurai. He joined as a shop assistant under a Muslim trader. He travelled to many places in India and mingled with Muslims and Christians. He grasped the essence of the Bible and the Quaran. He did penance for twelve years at the 'PODIGAI HILLS' including Courtallam. He dived deep into the depth of consciousness and had visions of God at frequent intervals. He then realised the path, which would lead Humanity to ultimate happiness in this life and to the salvation of the soul.

He drafted a Code of Conduct known as CHATTAM. The doctrine and the Code prescribed, direct us to adhere to certain rules of 'Dharma'. He prescribed an early morning bath in cold water, eschewal of hot water, avoiding all medications for ailments, not going to Law-Courts, not making any vows to God, giving up all superstitions, and practising meditation. Since food habits are relevant to devotion, Swamigal prescribed strict food habits for his followers. SATTVIC food is conducive to the development of noble impulses and gentle qualities that guide the mind towards God.

God is Love and Love for all Beings characterises the lives of godly persons. Swamigal showered love and affection on his followers wherever he went. The significant factor in his teachings is that they can be followed by any one, rich or poor, literate or illeterate, with out reference to caste, creed and religion, fit for universal adoption. Swamigal travelled from place to place, preaching what he had discovered. He did not stop with more preaching but followed

and lived accordingly. He had followers in large numbers in many places and did not accept offerings of any kind from his devotees.

In January 1923 Swamigal attained the state of Samadhi at the very spot in his family house at Reddiappatti where he had emerged into this universe. His devotees have erected a shrine over his Samadhi. Annual festivals like Birthday, Vasanthothsavam, and Guru Pooja are held at this temple. A few noble and philanthropic devotees of affluent position, like R. Venugopal Chetty of Pondicherry, G. Saravana pillai of Tanjore District, and Ramachandra Chetty of Salem, constructed choultries for the convenience of visiting devotees

About fourteen years later Sri A. Narasimhulu Naidu, a contemporary and staunch devotee of Sw‹migal, took great pains to gather particulars about Swamigal's Life and his devotional and philosophic poems He visited many places and contacted many devotees for this purpose. His object was to publish a book on Swamigal's Life. Sri K. Ramalinganar. who was then a commissioner of a Municipality, undertook the sacred task of writing the very first book about Swamigal, based on the particulars collected by A. Narasimhulu Naidu and additional information provided by the devotees. This book is titled 'Vazhikattum Van Porul'. It was published in the year 1937. This is the first book of Sri K Ramalinganar, who is associated closely with all the functions and other activities connected with Sri Reddiapatti Swamigal.

Many years later Sri. M K. Venkataraman, known as 'BALAKAVI' adopted Swamigal's Chattam. Already he had written many books The one worth mentioning of these is "Vasavi Vijayam', After he became the Devotee of Swamigal, he wrote many books on Swamigal in the form of verses, and Namavalies (Stothrams). He composed 'Shodasa Namam', Ashtothram, and Sahasranamam on Sri Reddiapatti Swamigal. They are the only guide for the Devotees for their daily poojas and for performing 'Laksharchanas' and 'Kotiarchanas'. Recently he codified these into a separate volume and this book titled, Arut Chatta Vazhippattu Murai', was published by Ovia Mani T. B Chakrapani, on the occasion of his Shashtabda Poorthi function Vidwan S Mangayarkarasi Ammaiyar of Kanchipuram. a dedicated follower of Swamigal's Chattam, associated herself with Sri Balakavi in all these works.

The crowning glory of Sri Balakavi's compositions is his latest publication 'Karunai Mihu Vallal - Arulnirai Charitam'. This is a metrical biography and teachings of Sri Reddiapatti Swamigal (1856-1923) in 4,672 verses, covering over 1,100 pages. The volume is in three parts, dealing first with his early life, secondly his life at Madurai and the evolved life and distribution of divine grace and thirdly about his followers.

The two dedicated and devoted personages, BALAKAVI and MANGAYARKARASI AMMAIYAR have put their heart and soul for bringing out this volume which has been printed in Kanchipuram. The preparation of the script alone took a period of over

twelve years. Before this work could be completed, they faced many odds and crises. Overcoming all these by God's grace and blessings finally it was released at a function at Reddiapatti in September 1981.

This function was attended by large number of devotees, some of whom are members of Sri Reddiapatti Swamigal Ilakiya Pathipaham of Madras. The Pathipaham was founded as early as 1971 by Sri T. Jaganatha Gupta with the help of other devotees, Its object is bringing together the devotees spread in different places, printing of booklets on Swamigal and his teachings and other connected works. Monthly meetings are also held. This institution is now located at No. 161, Govindappa Naick Street, Madras, which is also my residence.

Within a few months after the realease of the first edition, the need for reprint of a second edition arose. This time the printing was done in Madras. The author Balakavi chose my residence as his Headquarters. Before the printing work was entrusted to the press the script for additional pages giving the gist of this volume in prose was prepared to be added in the second edition. This script in prose was subsequently printed as a separate book titled "Samaya Podu Neri Kanda Satgurunathar".

The printing work of the second edition took over six months. During this period Balakavi had to work hard in his old age correcting proofs supervising the progress of printing etc., Smt. Mangayarkarasi Ammaiyar who was the inspiring and driving spirit to Balakavi in this task, had to shuttle from Kanchipuram to Madras often. She had the difficult task of devoting her attention for her teaching profession as well as involving herself in the sacred task of printing the second edition. At last the printing was completed in September, 1982. Smt. Mangayarkarasi Ammaiyar, the publisher of this great epic. kindly provided an opportunity to the "Sri Reddiapatti Swamigal Ilakya Pathipaham" to release the second edition.

For this purpose a special function was organised at Soundarya Mahal, Madras on Sunday the 26th September 1982. The volumes were placed on a decorated elephant and taken in procession with Mangala Vadyam from the premises of the Pathipaham to the venue of the function Many devotees local and from outstations followed the procession carrying the portrait of the Swamigal and Chanting bajans. Sri Balakavi and Mangayarkarasi Ammaiyar participated in the procession.

Justice Sri. N. Krishna Swamy Reddiar, former Judge of the Madras High Court, Presided ATCHISOLKAVALAR Sri. K Ramalinganar released the volume "Karunai Mihu vallal-Arul Nirai Charitam". Sri M. P. Somasundaram, popularly known as Somu of All India Radio, released the book, "Samaya Podu Neri Kanda Sathgurunathar". Aa a token of gratitude the pathipaham conferred the title 'Kavichelvar' on Sri M. K. Venkataraman. A few organisations in the city also honoured the author with garlands.

It is all a fascinating saga of services and varied contributions to our Swamigal. As we skim across his services, there is apparent a spectacular record of his works and his passion to serve Swamigal the more.

May the blessings and grace of Sri Reddiapatti Swamigal be showered on both of these dedicated savants and on others too.

அருளமுதை வார்க்கும்

யாது நின்குறை என்றெனைக் கேட்கும்
எத்தனைகுறை யாயினும் தீர்க்கும்
ஓது மாமறை எண்ணில வாகும்
ஓங்கும் உட்பொருள் யாவுமொன் றாகும்
சூது வஞ்சனை யாவையும் ஓட்டும்
தொண்டர் தம் குழு வொடுநனி கூட்டும்
போது லாம்பதம் என்முடி சூட்டும்
புனித மார்இரு டிப்பதித் தேவே, 1

கண்ட தும்விரைந் தேயினி தீர்க்கும்
கணமும் நீங்கிடா தன்புடன் காக்கும்
தொண்டர் உள்ளத்துள் ளேயருள் சேர்க்கும்
தூய்மை மிக்குறக் கருணையால் நோக்கும்
அண்டம் கோடிபல் கோடியுண் டாக்கும்
அமரர் தேடுபா தம்தொழ ஊக்கும்
உண்டுய்க் கென்றரு ளமுதினை வார்க்கும்
உயர்வு நல்கிரு டிப்பதித் தேவே, 2

———

குருநாதர் சம்பந்தமாக வெளியாகும் எல்லா நூல்களும் மக்கள் பலர்க்கும் பயன் அளிக்க அருள்புரியுமாறு ஆண்டவரை வேண்டுகிறோம்.

சதா. குருநாதன்
G. பிரேமாவதி
11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி,
பெரிய காஞ்சிபுரம்-631502:

பிள்ளையார்குப்பம் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை அவர்களின் பெருமை

ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை ஆஸ்ரமத் திருப்பணிக்குழுத் தலைவர்

உலகில் பக்குவப்பட்ட ஆன்மாக்களைக் கடைத்தேற்றும் பொருட்டு, ஸ்ரீ ஆண்டவர் குருநாதராக அவதாரம் செய்து, அருந்தவம் இயற்றி. பூர்ண நிலை எய்தி அடியார்களுக்கு அருள்பாலித்து வருவதை அறிகிறோம்.

நமது அருட்சக்தி அன்னை அவர்கள் ஸ்ரீ ஜென்மாவாக இருந்தும், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்று அருட்சட்டம் ஏற்று, கடுந்தவம் இயற்றி உள்ளார்கள். குடும்பத்தில் பல சுற்றத்தார்கள், கணவன் உள்பட பலருக்கும் செய்ய வேண்டிய பணிகளைத் தவருது செய்து கொண்டே, ஸ்ரீஆண்டவர் இயற்றியுள்ள அருட்சட்டத்தை மிக நெறியுடன் முழுமையாகக் கடைப் பிடித்து, உடல், பொருள், ஆவி, மூன்றையும் அர்ப்பணித்து உள்ளார்கள்.

பல ஆண்டுகள் இப்படி நடந்து வந்து, நிர்விகற்ப சமாதி நிலையும் கை கூடி, முதலில் மூன்று மாதம், மறுபடி இரண்டரை ஆண்டுகள், மறுபடி ஆறுமாதம். (இந்த ஆறு மாதம் அடியேன், நேரில் வந்து பார்த்துள்ளேன்) இப்படியாக சுமார் நான்கு வருடங்கள் தமது வீட்டிலேயே கடுந்தவம் இயற்றி உள்ளார்கள். தமது 30-வது வயதில் தவத்தை முடித்தார்கள். ஏதோ சில மகான்கள் குண்டலி சக்தியை மேலே ஏற்றக் கூடிய வாசி யோகத்தை அனுஷ்டித்து உள்ளார்கள். அந்த நிலையையும் நமது அன்னை அவர்கள் கடைசிவரை அனுஷ்டித்து வந்தமையால், ஆகாரங்களை எல்லாம் விலக்கி, பால், பழம் மட்டும் அருந்தியே சுமார் 57 வருடம் உலவி வந்துள்ளார்கள்.

ஸ்ரீ அன்னையைக் காண்போர்க்கு சாதாரண பக்தர்களைப் போன்றே தோன்றும். வீட்டில் காலம் தவருமல் பூஜை செய்ய ஏற்பாடு செய்து, வரும் அடியவர்களை வரவேற்று அவர்கள் யோக ஷேமங்களைக் கேட்டு அன்போடு உபசரித்து, உணவளித்து, மிக நெருங்கிய சுற்றத்தார்களை அனுப்ப மனமில்லாது வழி அனுப்பி வைப்பது போன்றே, கடைசி வரை நடந்து வந்துள்ளார்கள்.

வரும் அடியவர்களின் உடல் நலக் குறை, மனக்குறை, எல்லாவற்றையும் கேட்டு, அவர்களுக்குத் திருப்தி ஏற்படும்படி பதில் கூறி, அனுக்ரஹம் செய்து, அருட் பிரசாதம் வழங்கியருள்வார்கள். அருள் அனுக்ரஹம் வேண்டி வரும் முதிர்ந்த அடியவர்களையும் தமது மானசீக தீக்ஷையால் படிப்படியாகப் பக்குவப் படுத்தியும் வந்துள்ளார்கள்,

அன்னையிடம்வந்து சில இடர்ப்பாடான குறைகளைக் கூறி, விளக்கம் கேட்டால், சாதாரண பக்தர்கள் கூறுவது போன்றே, ஸ்ரீ ஆண்டவர் சரித்திரத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்து, அதில் நாம் கேட்ட கேள்விகளுக்குப் பதில் இருப்பது போல், ஒரு சரியான பதிலைக் கூறிவிடுவார்கள். அவர்கள் வாக்கினின்று வரும் வார்த்தைகள் எல்லாம் அப்படியே முழுவதையும் ஸ்ரீ ஆண்டவர் அனுக்ரஹம் செய்து நடத்தி வந்த அற்புதம் அடியவர்களுக்கே தெரியும்.

சில உடனே கை கூடும்; சில சிறிது பொறுத்துக் கை கூடும்; சில, சில வருடங்கள் கழித்துக் கூட நிறைவேறும். அன்றைக்குத் தான் நமது அன்னையின் சொற்கள் பலித்ததை நினைத்து அளவிலா ஆனந்தம் அடைவோம்.

ஞானிகள், "பாமரரெனக் காண்பிப்பார், பண்டிதத் திறமை காட்டார்" என்று கைவல்ய நவநீதத்தில் குறிப்பிட்டுள்ளபடி தம்மை ஒரு அருளாளர் என்று அறிய வொட்டாத வகையில் அன்னையார் நடந்து வந்தாலும், நம் ஆண்டவர் 'அருள் சக்தி அன்னை' என்று பெயர் சூட்டி உள்ளார்களே அது தான் ஸ்ரீ அன்னையிடம் அடியேன் கண்ட பெருமை.

ஸ்ரீ அருள் சக்தி அன்னை அவர்கள் ஆடிப்பூர நன்னாளில் அடக்கம் ஆனார்கள். அவர்கள் இரண்டு சக்திகள் தம்முடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்.

இந்த காக்ஷியைப் பக்குவப்பட்ட சில அடியார்களும் பார்த்து அன்னையிடம் கேட்டுள்ளார்கள்.

அம்பாள் அனுக்ரஹம் இல்லாது தவம் பூர்த்தி அடையாது என்றும் அன்னையார் கூறுவார்கள்.

ஆக அருள் சக்தி அன்னை, சக்தி அம்சமாகவே ஆடிப்பூர நன்னாளில் அடக்கம் ஆனதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடியார்கள் அவ்வப்போது நேரும் குறைகளை ஸ்ரீ அன்னைக்குத் தெரிவிக்க நினைத்து, தபால் எழுதும்போதே நலமுற ஆரம்பிக்கும். சில குறைகள் கடிதம் சேர்ந்து அவர்கள் மனதில் நினைத்த போதே நலமுறும் சில குறைகள் அவர்கள் அருள் வாக்கிலிருந்து வந்த கடிதத்தில் கண்டபடி நெறியாக அனுஷ்டித்தால், அல்லது கொலு அமர்த்தினால் நலமுறும்.

அன்னை அவர்கள் அடக்கமாகி சுமார் இரண்டாண்டுகளுக்கு மேலாகியும், அன்னை அவர்கள் இல்லையே என்ன செய்வது என்ற கவலையில்லாமல் கடிதம் எழுதியும், நேரில் வந்தும் இன்றைக்கும் பல கடுமையான நோயாளிகள் நிவர்த்தி ஆகும் அற்புதம் அறிந்தவர்கள் பலர் உள்ளார்கள். தினசரி விபூதி வாங்க வருபவர்கள் எப்போதும் போல் வந்து விபூதி பெற்று, நலம் அடைகிறார்கள்.

அருள் விலாசம் என்று தாய் கூறுவார்கள். ஸ்ரீ அருள் சக்தி அன்னை ஆஸ்ரமம் திருப்பணி முடிந்து; அடியார்கள் நிறைய வந்து, அருளாட்சி நடக்கும் நாளை மிக ஆவலுடன் எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் அடியார்கள் குறை தீர, ஸ்ரீ ஆண்டவர் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

———

நல்ல உள்ளமும், அமைதியான வாழ்வும், அடியார்கள் தொடர்பும் தந்து, அருட்சட்ட அடியார்களைப் பேணுமாறு எல்லாம் வல்ல ஆண்டவரை இறைஞ்சுகின்றோம்.

K. கிருஷ்ணமூர்த்தி குப்தா
K. குருநாதன்
K. குருசேகர்
நாகராஜன்

தங்கமே தங்கம்

ஆணவர் திருவுளத்தைத் தங்கமே தங்கம்—யானும்
கண்டுணர கில்லேனடி தங்கமே தங்கம்
உணவுடை யாதியெல்லாம் தங்கமே தங்கம்—தந்தில்
வுலகில்காத் தருள்கின்ருர் தங்கமே தங்கம்

கண்ணினல் அலர்உருவைத் தங்கமே தங்கம்—யானும்
கண்டுமகிழ் கொள்ள வேண்டும் தங்கமே தங்கம்
எண்ணினல் அவர்வருவார் என்றடியவர்—எல்லாம்
இன்னிசையால் பாடியுள்ளார் தங்கமே தங்கம்

பண்ணினல் அன்பர் அழைத்தால் தங்கமே தங்கம்—அவர்
பரிந்துவந் தருள்வர் என்பார் தங்கமே தங்கம்
உண்ணிறை அழுக்கினுள் ஓர் அணுவளவும்—போக்க
உன்னித்தவம் செய்தறியேன் தங்கமே தங்கம்

நாளும்தீய எண்ணம்மொழி செய்கையி னுள்ளே—மூழ்கி
ஞானமின்றி வாடுகின்றேன் தங்கமே தங்கம்
மூளும்பிறப் பையொழித்துத் தங்கமே தங்கம்—அருளுள்
மூழ்கிப்பேரின் பெய்த வேண்டும் தங்கமே தங்கம்

அண்ணலையெண் ணும்போதெல்லாம் தங்கமே தங்கம்—இந்த
அவனியிச்சை தோன்றுதையோ தங்கமே தங்கம்
எண்ணம்பல கோடிதோன்றி தங்கமே தங்கம்—என்னை
எங்கெங்கோ இழுக்குதடி தங்கமே தங்கம்

உய்வதெவ்வா றென்றறியேன் தங்கமே தங்கம்—என்னை
உய்விப்போ ரவரேயன்ருே தங்கமே தங்கம்
செய்வதென்ன என்றறியேன் தங்கமே தங்கம்—எல்லாம்
செய்விப்போர் அவரேயன்ருே தங்கமே தங்கம்

ஏனென்மனம் குவியவில்லை தங்கமே தங்கம்—இவ்வா(று)
ஏனென்னை வருத்துகின்ருர் தங்கமே தங்கம்
ஊனுடல் உயிர்பொருள்கள் அனைத்தையுமே—அவர் பால்
ஒப்பித்ததும் உண்மையன்ருே தங்கமே தங்கம்

என்னையவர் சோதித்திட்டால் தங்கமே தங்கம்—ஏழை
ஏதுசெய வல்லேனடி தங்கமே தங்கம்
தன்னையெனக் கீந்துவிட்டால் தங்கமே தங்கம்—அவரைத்
தடுப்பவர் யாவர் சொல்வாய் தங்கமே தங்கம்

ஒவ்வொர்கண மும்அவரை எண்ணி எண்ணி—யானும்
உருகிமிக வாடுகின்றேன் தங்கமே தங்கம்
இவ்வுலகில் என்பிழைகள் எண்ணி எனக்கே—அவர்
இன்னும்காட்சி தரவில்லையோ தங்கமே தங்கம்

எவ்வணுவும் அவருளம்போல் அசையுமென்றால்—யானும்
ஏதுசெய வல்லேனடி தங்கமே தங்கம்
அவ்வும்உவ்வும் மவ்வும்என்னும் வடிவொடும்வந்—தென்னை
அணைத்து விழுங்குவாரோ தங்கமே தங்கம்

காமம்சினம் ஆதியெனக் கடைய னுக்குள்—உள்ள
கள்ளமெல்லாம் எரிவதென்றோ தங்கமே தங்கம்
ஓமெனும் திருமறையுள் தங்கமே தங்கம்—யானும்
ஊமையென ஒன்றலென்றோ தங்கமே தங்கம்

இரண்டற யான்அவருட் கலந்து நிறைந்—துண்மை
இன்பமயம் ஆவதென்றோ தங்கமே தங்கம்
திரண்ட அடியர்குழாம் யாவர்க் கும்நலம்—செய்யும்
செம்மையெப்போ தென்னுள்மேவும் தங்கமே தங்கம்

யான்அவருள் அவர் எனக்குள் மேவி யொன்றாய்—இணைந்(து)
இன்பமயம் ஆவதென்றோ தங்கமே தங்கம்
தேனும்இன் னமுதமுமாய் அருள் சுரக்க—எங்கும்
தெய்வஒளி வீசல்என்றோ தங்கமே தங்கம்

வளமுள்ள வாழ்வும், கொடை உள்ளமும், திட பக்தியும், அருட்சட்ட அனுட்டானத்தில் தளரா உறுதியும் தந்து, அடியார் களைக் காத்தருளுமாறு குருபிரானை வேண்டுகின்றோம்.

R. விஜயரங்கம், V. மன்னார்பாளையம்.
G ராஜாராமன், ஹைதராபாத்.


அருள் நகர் சுவாமிகள்

அருட்கொடிப் பள்ளி மேலாளர், இரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் விடுதிக் காப்பாளர்

உயர்திரு. **ந. ஞானகுரு** அவர்கள். அருள்நகர்.

இரெட்டியப்பட்டி சுவாமிகள் அடியவர்களை ஆட்கொண்டு, தெருட்டி, அருள் உலாச் செய்து வந்தபோது, அவரது பத மலரைச் சேவித்து, தொண்டாற்றி வந்த பலருள், 'நாயுடு சுவாமி' என்று அழைக்கப் பெறும் திரு. ஆ. நரசிம்மலு நாயுடு அவர்களும் ஒருவராவர்.

குருபெருமானையும், அவரது அருட் சட்டத்தையும், உலகம் அறிந்து போற்றச் செய்ய 'சாந்தசீலர்' உயர்தவத் திரு: கீ. இராமலிங்கனர் எம். ஏ., அவர்களைக் கொண்டு 'வழி காட்டும் வான் பொருள்' என்னும் அருள் நூலை எழுதச் செய்து, அதனை உலகின் பல பாகங்களிலும் பரப்பினர் என்றால் அது மிகையாகாது.



அருட் கொடிப் பள்ளி

சுவாமிகளின் தரிசனம் கிடைத்தது முதல், உடல் பொருள் ஆவி அனைத்தும் அவர்க்கே அர்ப்பணம் செய்து அவர் திருக் காப்பிட்டுக் கொள்ளும் வரையும், அதன் பின்னும் மனப்பூர்வமாகத் தொண்டு ஆற்றியவர் திரு. நாயுடு சுவாமிகள் ஆவர்.

திரு. நாயுடு சுவாமிகள் தமது வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்களை உன்னும் போது, நம் துன்பம் சிறிய அளவேயாகும்.

குருபிரானைப் பற்றி நூல் ஒன்றை உண்டாக்க எண்ணி, காஞ்சிமாநகரம் சென்று, யாரும் அறிமுகமில்லாத அந்த

இடத்தில் இருந்து கொண்டு, பல இன்னல் களுக்குப் பின் அருள் திரு. ஸ்ரீ இராம லிங்கனார் அவர்களின் நன்முயற்சியாலும், இவரது தளரா உழைப்பு, விடாமுயற்சி இவற்றாலும் வழிகாட்டும் வான் பொருள் எழுதப் பெற்றது.

பெரியவர்கள் பலர், சுவாமிகளின் அருள் நெறி பரவுதற்கு நூல் வெளி யிட்டால் மட்டும் போதாது. மற்றும் சில செயல்களும் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள்.

அம் முயற்சியில் இரெட்டியப்பட்டி சுவாமிகள் பெயரில் சங்கம் ஒன்றைத் தோற்றுவித்தனர். வில்லிவலம் சுரோத் திரியம்தாரர் உயர் திரு. வீ. நாட்டுசீநிவாச முதலியார் அவர்களைத் தலைவராக்கினர். அவரது வாழ்நாளுக்குப் பின், திரு. நாயுடு சுவாமிகள் இயற்கையெய்தும் வரை அச் சங்கத்தின் ஒப்பற்ற தலைவராகவும், ஆலோசகராகவும். சிறந்த அபிமானி யாகவும், தொண்டுள்ளத்தோடு செந் தமிழ் விளக்க வள்ளலார் உயர்திரு ஸ்ரீ. இராமலிங்கனார் அவர்கள் விளங்கினார் என்றால், அது திரு. நாயுடு சுவாமி மீது கொண்ட அன்பின் அரவணைப்பாலும், நன்னம்பிக்கையாலுமே எனலாம். இது நம்பிக்கைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

சங்கம் நிறுவி, அதன் பின் அதே காஞ்சியம்பதியில் 'இரெட்டியப்பட்டி அடிகளார் திருப் பெயரால் மாணவர் விடுதி ஒன்றை 1-6-1946-ல் நிறுவினர். அது முதல் இன்றளவும் குருபெருமான் திருவருளால் அம்மாணவர் இல்லம் சிறப் பாகச் செயலாற்றி வருகிறது. இவ் விடுதியில் இருந்து கொண்டு கல்வி பயின்று முன்னேற்றமுற்ற பல மாணவர்கள், மாநிலத்தின் பல பாகங்களிலும் உள்ளார்கள் என்றால் அது இம்மாணவர் இல்லத்திற்குப் பெருமை தருவதாகும்.

இவ் விடுதி காஞ்சியம் பதியில் வாடகைக் கட்டிடத்தில் செயல்பெற்று வந்தது. சங்கம், விடுதிக்கெனச் சொந்த மாக இடம் தேவை என எண்ணினார்கள். குருபெருமான் திருவருளால், அவர் திருக் குறிப்பின் வண்ணம், தென்னார்க்காடு மாவட்டத்தில், விழுப்புரம் விருத்தாசலம் திருச்சிராப்பள்ளி குறுக்குப் பாதையில், திருவெண்ணெய் நல்லூர் இருப்படி நிலையத்திற்கு அருகில் இடம் வாங்கி, அந்த இடத்தில் மாணவர் இல்லத்தையும், சுற்றுப் புறத்தில் பள்ளி வசதியின்மையால் இல்ல மாணவர்களும், மற்ற மாணவர் களும் கல்வி பயிலும் வண்ணம் 'அருட் கொடிப் பள்ளி' என்ற பெயரில் பள்ளி ஒன்றினையும், 24—6—1954 ல், மாவட்டத் தண்டல் நாயகம் உயர்திரு. உத்தண்ட ராமப்பிள்ளை I. A. S. அவர்களைக் கொண்டு அமைக்கச் செய்தனர். தற்போது அது எட்டாம் வகுப்பு வரை நடைபெறும் உயர் துவக்கப் பள்ளியாகச் சீரும் சிறப்பும் பெற்று, கல்வி இலாகாவும், மற்றும் பல இலாகாவும் மகிழும் வண்ணம் கல்விச் சேவை செய்து வருகிறது. இப்பெருமை முழுதும் திரு நாயுடு சுவாமி அவர்களையே சாரும்.

தற்போது பத்து ஆசிரியர்கள் பணி புரிகிறார்கள். 450-மாணவ மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். மாவட்ட அளவில் ஒரு நல்ல பள்ளியாக இன்றளவும் பெயர் பெற்று, கல்விப்பணி புரிந்து வருகிறது.

திரு. நாயுடு சுவாமிகள் 1970-ல் மாணிக்க விநாயகர் ஆலயம் அமைத்து நல்ல முறையில் திருக்குட முழுக்கு செய்வித்தனர்.

பின்னர், இல்ல மாணவர்கள் இனிது தங்கி இருந்தஇடம் கூரைப் பகுதியாக இருந்து, பழுதடைந்து விட்டமையால், அதனைப் பிரித்து எடுத்துவிட்டு, கெட்டி யான ஒட்டுக் கட்டிடமாகக் கட்ட வேண்டும் என்று கருதித் தொடங்கப் பெற்று, அஸ்திவாரம் அமைத்து அடித்தள மட்டம் வரை கட்டப்பெற்றது.

பொருள் வசதியைப் பெருக்கி, மேற்கொண்டு செயலாற்ற எண்ணியிருந்த போது, இறைவன் 'இவ்வுலகப் பணியினை முடித்துக் கொண்டு, நீ வந்து நம் திருவடியில் சேர்வாயாக' என்று அழைக்கவே, அவர் 22—7—1977 ல் இறைவன் திருவடி அடைந்தனர்.

அவர் விட்டுச் சென்ற பணிகள் ஆண்டவர் திருவருளால் தொடர்ந்து செயல் பெற்று வருகின்றன. மாணவர் இல்லக் கட்டிடம் நல்ல முறையில் இனிது பூர்த்தியாகப் பொருள் உதவியை எதிர் நோக்கியுள்ளது. தொண்டுள்ளம் கொண்ட பெரியோர்களின், நல்லாசியும், இறைவனின் பெருங்கருணையும் கிடைக்கப் பெற்று, எல்லாம் நல்ல வண்ணம் செயல் பெற வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்.

———

கண்ணப்ப ரைப்போலக் கருத்தில் உறுதிகொண்டால்
விண்ணுடர் மெச்சவே மெய்ப்பொருள் தந்திடுவார்.

* * * *

ஆசானைக் கண்டவுடன் அள்புடனே நீவணங்கு
பூசனைகள் புரிந்துமே பூமியிற் படியறில்லு.

—அடியார் பாடல்

தயாளன்

சு. மங்கையர்க்கரசி

குருநாதன் அடியவர் குறைதீர் தயாளன்
குருநாதன் அருள்நலம் கூட்டும் தயாளன்

அருள்நாதன் அடியரை ஆளும் தயாளன்
தெருள்நாதன் சிற்சுகம் சேர்க்கும் தயாளன்

பரநாதன் நமைப்பேணும் பண்பார் தயாளன்
வரநாதன் இதயத்துள் வாழும் தயாளன்

அகநாதன் அருள்சட்டம் அருளும் தயாளன்
சுகநாதன் இணையில்லாத் துணையாம் தயாளன்

ஒளிநாதன் அருள்ஞான ஒளிசெய் தயாளன்
ஒலிநாதன் பரஞான ஒலிசெய் தயாளன்

மறைநாதன் பிழைகள்மன் னிக்கும் தயாளன்
நிறைநாதன் மெய்யன்பில் நிலவும் தயாளன்

அறநாதன் பொருளெல்லாம் ஆக்கும் தயாளன்
திறநாதன் கருணைசெய் தீன தயாளன்

வேதாந்த சித்தாந்தம் விளக்கும் தயாளன்
நாதாந்த போதாந்தம் நவிலும் தயாளன்

என்றென்றும் எங்கெங்கும் இலகும் தயாளன்
குன்றன்ன வினைவலி கொய்யும் தயாளன்

எதனை விழைந்தாலும் ஈயும் தயாளன்
இதமாய் அருள்நெறிக்கே ஈர்க்கும் தயாளன்

நீராட்டி நீறிட்டு நெறிசொல் தயாளன்
பாராட்டிச் சீராட்டும் பரம தயாளன்

இட்டசித் திகள்நல்கும் இணையில் தயாளன்
நிட்டைப் பயன்விளைக்கும் நித்ய தயாளன்

"அன்பினைப் பெறுவாயாகில்"

(என்று தொடங்கும் அருட்பாடல் பொருள் விளக்கம்)

"அகரமுதல எழுத்தெல்லாம்" என்றபடி எழுத்துக்களுக்கு முதன்மையாகவும், உயிராகவும் இலங்குகின்ற அகரத்தை முதலிலே கொண்டு, உயிர்மெய் இனத்தின் ஈற்றிலே உள்ள னகரத்தை அடுத்துக் கொண்டு, பதினெட்டு மெய்யெழுத்துக் களிலும் இடையிலே உள்ளதாகிய பகரத்தை ஈற்றிலே கொண்டு, அகர உகரங்களே உயிர்களுக்கு முதலும் முடிவுமாய் இருக்கின்றன என்பதை உணர்த்த பகரமெய்யின் மேலேறி வருகின்ற உகரத்தைக் கொண்டு, எல்லா உலகங்களின் முதலிலும், இடையிலும், கடையிலும் இடையறாது கலந்து நின்று, "அன்பின் வழியது உயிர்நிலை" என்பதற்கேற்ப எல்லா உயிர்களுக்கும் உயிர்ப் பொருளாகி, அருள் என்னும் குழவியைப் பெற்றெடுத்து வளர்க்கும் தாயாகி, தேவ உலகத்திலும் கிடைக்காத உயர் பொருளை இப்பூவுலகில் கொடுப்பதற்குக் கருவாகி விளங்குகின்ற, தன்னிகரற்ற 'அன்பு' என்னும் சொல் இப்பாடலின் முதற்கண் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வுயர்ந்த பண்பைக் கொண்ட உயிர்கள் 'தான்' என்பதை மறந்து பிறருக்காக உழைக்கும் பெரும்பேற்றின் முதற்படியிலே கால் வைக்கின்றன. ஒரு உயிர் ஜீவ போதத்தை விட்டுப் பர போதத்தை நாடிச் செல்வதற்கு ஒரு வித்தாக உள்ளது இந்த அன்பு. ஒரு உயிர் தூய அன்பைக் கொண்டு வாழ்ந்து வருமானல், அவ்வுயிரைச் சுற்றியுள்ள அதாவது அவ்வுயிரோடு தொடர்பு கொண்ட பல உயிர்களும் இவ் அன்பின் நிழல் படியப் பெறுகின்றன.

இவ் அன்பினை ஒருவன் பூரணமாகப் பெற்று விட்டால் புற உலகிலும் அக உலகிலும் இவனை வந்து தாக்கும் அதர்மங்கள் அதாவது பாபச் செயல்கள் இவனைப் பற்ருது நீங்கி விடுகின்றன. இதற்குச் சான்று இறையடியடைந்த சான்ேருர்களேயாவர். **இன்பமே எந்நாளும் துன்பமில்லை'** என்று முழங்குகின்ற மன உரம் எப்படி வந்தது? அன்பையே உள்ளும் புறமும் பெற்றதால் இத்தகு நிலை வந்தது. கொல்வதை ஒத்த கொடுமையை ஒருவன் செய்தானுயினும், செய்யப் பெற்றவன் பூர்ண அன்புடையவனுக இருந்தால், அக்கொடுஞ் செயல் சுவரில் எறியப்பட்ட பந்து போல் திருப்பப்படுகின்றது. பின்னர் அச்செயலைச் செய்தவனும் தன் தாழ்வை உணர்ந்து, அதர்மத்தினின்று நீங்கி, அன்பின் நிழல் படியப் பெற்று, அன்பு உடையவனுக மாறுகின்ருன். இதையே **"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்; மறத்திற்கும் அஃதே துணை"** என்ருர் நாயனுர்.

இந்நிலையில் துன்பங்கள் தவிர்ந்து விடுகின்றன. துன்பங்களை உணர்வது மனம்; நம்முடைய இன்ப துன்பங்களுக்கு நாமே காரணமாகின்ருேம். அவை பிறர் தருவதில்லை **'தீதும் நன்றும் பிறர் தரவாரா'** என்ற பொன்மொழி இதை உணர்த்தும். அன்பின் வழியிலே இயங்குகின்ற உயிர் அதர்மத்திலிருந்து தானும் நீங்கி, பிறரையும் நீக்குவித்து, துன்பத்திலிருந்து தான் தவிர்ந்து பிறரையும் தவிரச் செய்கிறது.

அந்நிலை அடைந்த உயிர், நாட்டில் இருப்பினும், காட்டில் இருப்பினும், எச் செயலைச் செய்யினும், துயரற்ற நிலையில்,

பேரின்ப நிலையில், எல்லா உயிர்களுக்கும் இன்பம் நல்கும் நிலையில் மூழ்கித் திளைக்கும். நமக்குத் துன்பம் எவ்வாறு வருகின்றது என்பதன் காரணத்தை அறியாததனால்தான் உயிர்கள் பிறரைப் பழிக்கின்றன.

''புகழ்பட வாழாதார் தந்நோவார், தம்மை இகழ்வாரை நோவதெவன்?'' என்ற பொய்யா மொழிப்படி, புகழ் பெற வேண்டுமாயின், சற்கருமம் செய்தல் வேண்டும். அன்புக்கு எதிர்மாறான 'வன்பு' கொண்ட உள்ளத்தோடு பல பிறவிகளில் செய்து வந்த கன்ம வினைகளே இப்பிறவியில் நம்மை வந்து சூழ்கின்றன. இன்று ஒருவன் நமக்குத் துன்பம் செய்கின்றான் என்றால், முன்பு நாம் அவ்வுயிர்க்கு அத் துன்பத்தைச் செய்திருத்தல் வேண்டும். உயிர்கள் பகலிலும், இரவிலும் எக் காலத்தும் கன்மங்களைச் செய்து கொண்டே இருக்கின்றன. அக் கன்மங்களின் பலனே அவ்வுயிர்களை வந்து தாக்குகின்றன. இக் காரணத்தை நாம் அறிந்தால் வன்பு கொண்ட மனத்தை மாற்றிக் கொள்வோம்.

அன்பு கொண்ட மனத்தராய்ப் பொறுமையோடு, உயிர்கள் நமக்குச் செய்கின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்வோம். இந்நிலையே **'இறைநிலை'** எனப்படும்.

''அன்பினைப் பெறு வாயாகில்
அதர்மங்கள் அனைத்தும் நீங்கித்
துன்பமும் தவிர்ந்து போகும்
துயரமிங் குண்டோ சொல்வாய்
வன்பனாய் உலகில் தோன்றி
வாழ்வுநாள் முழுதும் செய்த
கன்மங்கள் வந்து சூழ்ந்த
காரணம் அறிவாய் நெஞ்சே.''

முத்தியின் பத்தினைத் தா.

குற்றம் அனைத்தினையும்—பொறுத்தருள்
கோதில் குருபரனே
சுற்ற மெனஎனையே—எப்போதினும்
சூழ்ந்து புரப்பவனே

ஆதி நடுமுடிவும்—அறிவரும்
அற்புத மெய்ப்பொருளே
ஜோதி சுயஞ்சுடரே—எங்கெங்கும்
துலங்கும் தனிப்பொருளே

கல்விக் கடலமுதே—பலவிதக்
கைத்தொழி லின்திறனே
செல்வப் பெருந்திரளே—உயர்புகழ்
சேர்த்திடு பேரறமே

காலமும் கற்பனையும்—கடந்தொளிர்
காரண மானவனே
மூலமலம் தொலையக்—கருணைசெய்
மோன வுருவினனே

பத்தி மிகும்பெரியோர்—குழுவினைப்
பாலனம் செய்பவனே
முத்தி யின்பத்தினையே—கொடுத்தருள்
மூர்த்தியென் றுள்ளவனே

அற்பநினை வனைத்தும்—பொடித்துமெய்
யன்பை யளிப்பவனே
பொற்புமிகும் பெரியோர்—பணிசெயப்
புத்தி கொடுப்பவனே

என்பும் உருகிடவே—பாடுநர்க்(கு)
ஏற்றம் அளிப்பவனே
இன்ப நிலைகளெலாம்—காட்டிவைத்(து)
ஈர்த்தணை என்பதியே

ஜாதி சமயமெலாம்—கடந்தமெய்த்
தத்துவ மானவனே
நீதி நெறிவடிவாய்—இனிதிந்த
நீணிலத் துற்றவனே

ஓதி யுணர்வரிதாம்—உயர்ந்தபே
ருண்மை யொளியினனே
தீதில் அருள் நெறியைப்—பரப்பத்
திருவுளம் கொண்டவனே

எவ்வுயிர்க் கும்பொதுவாய்—ஒருநெறி
இப்புவிக் கீந்தவனே
செவ்விய பண்புநலம்—மிகுந்திடச்
செய்தருட் கீர்ப்பவனே

இருடிநகர் உதித்தே—ஒருசட்டம்
ஈந்தருள் என்குருவே
திருடி உளம்கவர்ந்தே—அருள்செயும்
செம்மை மிகும் பரமே

கல்லை யனையநெஞ்சும்—கனியக்
கருணை பொழிபவனே
தில்லை வெளியினிலே—விளங்கு
திருநடம் காட்டுநனே

ஊனுயிர் செல்வமெலாம்—உனக்கென
ஓதிநன் றர்ப்பணித்தால்
தேனென வானமுதைப்—பொழிந்தருள்
தேசிக மாமணியே

அன்பு நிலையினைத் தா—உயர்ந்தபே
ரார்வ மிகுதியைத்தா
இன்ப வொளியினைத் தா—உன்னோடும்
இணையும் உணர்வினைத் தா

ஞான நிலையினைத் தா—என்றென்றுமே
நல்ல உறுதியைத் தா
மோன முடிவினைத் தா—உயர்பர
முத்தியின் பத்தினைத் தா

———

குருவைப் பணியவேணும்; கூடவே யிருக்கவேணும்;
கருத்தை அறியவேணும்; கடவுளென்று நம்பவேணும்.

*　*　*　*

கண்டஇடம் செல்லாதே: கருத்தை வெளியாக்காதே;
கொண்டவன்என் றாலுங்கூட உண்மையை உரையாதே.

(அடியார் பாடல்)

எங்கள் தாயார்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கச்செயலர் & பொருளர்

உயர்திரு. R. D. சுப்புராம ரெட்டியார் அவர்கள் இரெட்டணை.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருட்சட்ட நெறியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, எங்கள் தாயார் ஆஸ்த்மா நோயால் பீடிக்கப்பட்டு, எப்பொழுதும் மருந்து அருந்துவதும், ஊசி போட்டுக் கொள்வதுமாக இருந்தார்கள் பச்சைத் தண்ணீரைத் தொடவும் மாட்டார்கள். இந்நிலையில் சுமார் 42 ஆண்டுகளுக்கு முன்பு 1940ல் இரெட்டணையிலிருந்து சுமார் 40 மைல் தூரம் இரெட்டை மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து, பிள்ளையார்குப்பம் சேர்ந்து, அங்கு ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னையார் அவர்கள் சந்நிதியில் அருட்சட்டம் ஏற்றுக் கொண்டார்கள்.

அந்த தினத்திலிருந்து வெந்நீரையும், மருந்தையும், மருத்துவத்தையும் அடியோடு நீக்கி விட்டார்கள். அருட்சட்டத் திருநெறியை முழு மூச்சாக ஏற்றுக் கொண்டு. சிறிதும் தவறாது நடந்து, இருபத்தைந்து ஆண்டுகள் அருள் வாழ்வு ஆற்றினார்கள்.

ஒரு நாள் யானும், என் நண்பர்களும் செஞ்சியில் உள்ள ராஜா தேசிங்கு மலைக்குச் சென்றபோது அங்கொரு குகையில் செம்பினால் செய்யப்பெற்ற விநாயகர் சிலை ஒன்று கிடைத்தது. அதைக் கொண்டு வந்து என் நண்பர்கள் என் தாயாரிடம் கொடுத்தார்கள் அப்போது என் தாயார் எல்லையில்லா ஆனந்தம் கொண்டார்கள். உடனடியாகப் பூஜை செய்து அனைவர்க்கும் பிரஸாதம் வழங்கினார்கள்.

அருட்சட்ட நெறியின் எல்லா அம்சங்களையும் மிகத் தீவிரமாக அனுசரித்தார்கள். வெள்ளிக்கிழமை விரதத்தை மிக்க அன்போடும் முறையோடும் போற்றினார்கள், இரவு நேரத்தில் எல்லோரும் உறங்கிய பின், ஆழ்ந்த நிட்டையில் பூர்ணமாக மூழ்கி அருட் பயன் பெறுவார்கள்.

தம்மைச் சார்ந்த பலரை அருள் வாழ்வில் ஈடுபடுத்தி, அருந்துணையாய் இருந்து உதவி, அருட்பயன் எய்தச் செய்வார்கள். அருளுணர்வோடு அவர்கள் எது கூறினாலும். அது அப்படியே நடக்கும். அவர்களின் நிலையை அறிந்தவர்கள் அவர்களை உண்மையான பக்தியுடன் போற்றுவார்கள். அன்போடும் கண்டிப்பான குரலில் அவர்கள் சொல்லும் அருள் வார்த்தைகளைப் பொன்போன்ற செம்மொழியாகப் பலரும் உவந்து போற்றி ஏற்றுக்கொள்வார்கள். மக்களினம் மதித்துப் போற்றும் இல்லறத் தாயாய், பக்தி மிகுந்த பண்புத் தாயாய், அருள் வழி காட்டும் அன்புத்தாயாய்த் திகழ்ந்து வந்தார்கள்.

அத்தகைய சிறப்புடைய எங்கள் அன்னையார் ஆண்டவர் திருவடி அடைந்ததும், ஆற்றங்கரையில் சாலை ஓரத்தில் தென்னை மா பலா முதலிய மரங்கள் அமைந்த சோலையில் சமாதி செய்வித்து, அச்சமாதியின் மேல், விநாயகர் சிலை அமைத்துத் திருக்கோயில் அமைக்கப் பெற்றுள்ளது.

பிரபவ ஆண்டு ஆவணி மாதம் இருபதாம் தேதி திங்கட்கிழமை பரணி விண்மீனில் 'செந்தமிழ் விளக்க வள்ளலார்' உயர்திரு கி. இராமலிங்கனார் அவர்கள் தலைமையில், ஸ்ரீ இரெட்டியப் பட்டி சுவாமிகள் சங்கச் செயலர் (காலஞ் சென்ற உயர்திரு, ஆ. நரசிம்மலு நாயுடு, அவர்கள் முன்னிலையில். சுவாமிகளின் அடியார்கள் பலரும் கலந்துகொண்டு மூர்த்திக்குப் 'பத்ம விநாயகர்' எனத் திருப்பெயர் சூட்டி, திருக்குடமுழுக்கு செய்வித்தனர். முதல் ஆண்டு நிறைவு பூஜை சிறப்புற நடைபெற்றது. இப் போதும் நித்ய பூஜை முறைப்படி நடந் தேறி வருகிறது.

நான் முதன் முதலில் அருட்சட்ட நெறியை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் என் தாயார் தான் என்று கூற லாம். அவர்கள் தம் வாழ் நாளில் நடந்து வரும் அநுபவத்தைப் பார்த்துக் கொண் டிருந்தேன். மற்றும் ஒரு காரணமும் உண்டு. நான் சிறுவனாக இருக்கும் போது, குருநாதரின் அருள் வரலாற்றை 'வழி காட்டும் வான்பொருள்' என்ற பெயரில் எழுதி உலகுக்கு உதவிய 'சாந்த சீலர்' உயர்திரு கி இராமலிங்கனார் அவர் கள் விழுப்புரத்தில் நகராட்சி ஆணைய ராகப் பணியாற்றி வந்தார்கள் என் தாயாருக்கு அருட்சட்ட நெறியில் ஏதேனும் சந்தேகம் உண்டானால், அது பற்றிக் கேட்டுத் தெரிந்து வர என்னை அவரிடம் அனுப்புவார்கள். அதற்கிணங்கி நான் திரு. சாந்தசீலரிடம் அடிக்கடி சென்று வருவேன்.

நான் எப்போதும் காலையில் வெந் நீரில் குளிப்பது வழக்கம். ஒரு நாள் காலை யில் மின்சாரம் வரவில்லை வெந்நீர் வைக்க ஆளும் வரவில்லை. விரைவில் வெளியூருக்குப் புறப்பட வேண்டுமே என்று திகைத்துக் கொண்டிருந்த போது, என் தாயார் அந்த அதிகாலையில் பச்சைத் தண்ணீரில் குளித்தார்கள். நானும் அன்று முதல் பச்சைத் தண்ணீரிலே குளிப்பது என்று முடிவு எடுத்துக் குளித் துக் கொண்டு வந்தேன்.

பிறகு, என் தாயார் ஆண்டவர் திருவடி அடைந்ததிலிருந்து, நானே ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சட்டத்தை (1965 முதல்) ஏற்றுக் கொண்டு, நடை முறையில் இருந்து வருகிறேன். அன்று முதல், எனக்கு எப்பொழுதாவது மனம் அலைமோதிக் கொண்டிருக்கும் சமயத்தில் ஸ்ரீ ஆண்டவரை நினைத்துக்கொண்டால், உடனே என் மனது அமைதி அடைந்து விடும்.

நான் சுமார் ஐந்து ஆண்டுகளாக ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத்தின் செயலராகவும், பொருளராகவும் இருந்து.கொண்டு வருகிறேன்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அறுபதாவது குருபூஜையை முன்னிட்டு, சுவாமிகளுக்குக் கோடி அர்ச்சனை செய்வ தெனச் சட்ட அனுஷ்டானத்தில் உள்ள பெரியோர்களால் முடிவு செய்யப் பெற் றுள்ளது யாவும் இனிது நடைபெற அருள் புரியுமாறு, எல்லாம் வல்ல ஆண்டவரைப் பிரார்த்தித்துக் கொள்ளு கிறேன்.

அறுபதாண்டு குருபூஜை நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப்பெறும் இம்மணி விழா மலர் நன்முறையில் வெளி யாகி மலர்ந்து, அடியார் அன்பர்களின் உள்ளங்களில் தெய்வ மணம் வீசச் செய் யட்டும் என்று வாழ்த்தி முடித்துக் கொள்கிறேன்.

———

காக்கும் அரண்

பாலகவி

எவ்வெப்போ தெங்கெங் கெதுதேவை யென்றறிந்தே
அவ்வப்போ தங்கங் கருள்குருவே—எவ்வமெலாம்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 1

அன்புப் பிழம்பே அருட்கடலே ஆசறுபே
ரின்பப் பெருக்கே இகபரமே—துன்பமெலாம்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 2

எட்டுவகைச் சித்திகளும் எய்தி இருவினையும்
விட்ட நிலையில் விளங்கொளியே—கட்டமெலாம்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 3

நாட்டம் உலகோம்பு நாதன்பால் வைத்தருளாம்
தேட்டம் விழையும் திருவுடையாய்—வாட்டமெலாம்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 4

கல்வி விழையாய் கணநாதன் பேரருளாம்
செல்வம் விழைந்தாய் தெருளூற்றாய்—வல்வினைநோய்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண், 5

சந்ததமும் முன்னவனார் தண்ணருளே பேணிமுதல்
அந்தமில்பே ரின்பம் அனுபவிப்பாய்—பந்தமெலாம்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 6

தணிவறியா இச்சை தவிர்த்துத் தரைமேல்
துணிவுடனே தூயநெறி சொன்னாய்—பிணிவறுமை
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 7

சாமாறு நாடியுழல் தாரணியோர் அன்புருவம்
ஆமாறு சட்டம் அளித்தவனே—காமாதி
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 8

திவாகரனாய் மாயா திமிரம் தகர்ப்பாய்
தவாத பிறப்பைத் தவிர்ப்பாய்—அவாவினையே
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 9

வேதமுடி காணறியா வித்தகமெய்ஞ் ஞானபர
நாதமுட னொன்றியொளிர் நாயகனே—ஏதமெலாம்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 10

ஏழ்வகையாம் ஜென்மக் கடலை யிகந்துபெரு
வாழ்வடையு மாறு வகுத்தவனே—தாழ்வனைத்தும்
நீக்கி யருள்புரியும் நின்பாதப் போதெம்மை
ஆக்கிநனி காக்கும் அரண். 11

———



சந்தப் பாடல்கள்

தந்தன தானத் தனதான

பொன்புரை ஞானத் திருமேனி
பொங்கொளி ஜோதி ப்ரபைகாண
மன்பர யோகத் தினில்மூழ்க
மந்திரமூலத் தொடுகூட
என்பவ வாரிக் கணைபோட
இன்பம தேமிக் குறமேலாம்
அன்பினை நீயெற் கருள் வாயே
அங்குச பாசப் பெருமாளே.

தனனத் தனதான

மரணத் தினைமேவா
வழியைத் தருதேவா
தரணிக் கரசே! இத்
தருணத் தெனுள்மேவிக்
கரணத் தினில்தூய்மை
கனியத் தவமீவாய்
கருணைக் கடலான
கபிலப் பெருமாளே.

தந்ததனத் தனதான

உண்டியுடைக் கலைவேனை
ஒண்கழலுக் கடியானுய்க்
கொண்டொரு சொற் பொருள் கூறும்
கொங்கலர் பொற் சரணீவாய்
புண்டரிகத் திருமூலா
புந்திதிருத் திடுசீலா
அண்டர்களுக் கனுகூலா
ஐந்துகரப் பெருமானே.

தானதனத் தனதான

ஏறுபவப் பிணிமாய
ஈறில்அருட் சுகமான
பேறுகொடுத் தருள்வாயே
பேதமறப் புணர்வாயே
ஆறுதரித் தவர்பாலா
ஆறுமுகற்கணனே! ஓர்
ஆறுவகுத் தொளிர்மூலா
ஆனைமுகப் பெருமானே.

தத்ததன தானனத் தனதான

பிட்டொடிள நீர்பருப் பவல்மாதேன்
பெட்பொடுகொள் நீள்கரக் கணநாதா
மட்டில்அருள் மாரியைப் பொழிவோனே
மத்தமுடி யீசுரர்க் குயர்சேயே
நிட்டைதனி லேநிலைப் பவர்கோவே
நித்தியநல் வாழ்வினைத் தருதேவே
கட்டுகளெ லாம்அறுத் தருள்வாயே
கற்பக விநாயகப் பெருமானே.

தானதன தானதன தானதன தானதன
தானதன தானனத் தனதான

ஆகமொரு கோயிலென வேயுறையும் ஆதிபர
ஆலுமறை நாலினுட் பொருளோனே
ஆலமுணு நாதருமை மாதுமன மேமகிழ
ஆனைமுக மோடுமுற் றருள்வோனே
பாகமுறு சீரடிசில் தேனுடைமை மாவினிய
பாலுமிள நீரும்நற் கனியாவும்
பானகம்எள் மோதகம்நெய் தோசையவல் மூலவகை
பாகுமினி தேபுசித் திடுநாதா
வேகமுட னேடுகுற மான்முன்இப மாம்விமல
வேலுடை. சடானனற் கனுகூலா
மேகம்நிகர் மாகருணை யோடுயிர்கள் வாழ்வுபெற
வீசுபுகழ் கூடலிற் பொலிமூலா
நாகமிசை யேநடன மாடுமொரு மால்மருக
நாலுகவி பாடவைத் தருள்வாயே
நாதமுடி மீதிலொளிர் போதமென வேயிலகு
ஞானபரி பூரணப் பெருமாளே.

ஆண்டவர் நிகழ்த்திய அற்புதங்கள்

ஓவியமணி. T. B. சக்கரபாணி செட்டியார், G. D. Art.,
8, கென்னடி இரண்டாம் தெரு, மயிலை, சென்னை-4.

அருள்துணை புரியும் ஆண்டவர்

உலகம் உய்ய இரெட்டியப்பட்டியில் தோன்றிய குருநாதர், அருட்சட்டம் வகுத்தளித்து, அன்பர்கட்கு நல்வழி காட்டும் அருளாளர் ஆவர். மக்கள் நலம் பெறுவதற்கு, எல்லாம் வல்ல பரம் பொருளே அவதரித்து வந்தது போல் வந்த கருணை வள்ளல். விரும்பித் தாமும் அன்பர் உள்ளத்தில் மேவும் பெருமான். உலக இருள்போக்க ஓங்கிவந்த பேரொளி. தாம் பெற்ற பேரின்பம் தரணியும் பெறுவதற்கே தொண்டு பல செய்த சுவாமிகள். சைவவேளாளர் குலமே பெருமை பெற அக்குலத்தில் வந்துதித்த அருளாளர். அறியாமை மயக்கத்தை அகற்றுவதற்கு அருள் மருந்தைத் தயங்காமல் அளித்திட்ட தனிக்கடவுள், அருள் ஞானப் பேருருவாம் ஆண்டவர் திருக்கோயில் கொண்டெழுந்தருளி அறுபது ஆண்டுகள் ஆகின்றன. அடியார்கட்குத் தோன்றாத் துணையாய் இருந்து அடியார்களின் வாழ்வில் நலம் சேர்க்க, அவர்களது நற்பணிகளை வெற்றி பெறச் செய்ய, நம் குருநாதர் எத்தனையோ அற்புதங்கள் செய்து வருகிறார்கள். என் வாழ்விலும் ஆண்டவர் அருளால் அற்புதங்கள் சில நிகழ்ந்தன. அவற்றை அன்பர் அனைவரும் அறிவது நலமென எண்ணுகிறேன்.

ஆண்டவர் அருளால் நோய் நீங்கியது

சென்னை இந்து தியலாஜிகல் உயர் நிலைப்பள்ளியில் நான் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஒரு முறை மஞ்சள்காமாலை நோய் என்னைப் பற்றியது. மருத்துவரிடம் காட்டித் தக்க மருத்துவ உதவி பெறுமாறு நண்பர்கள் கூறினர். ஆனால் அருட்சட்ட நெறியேற்ற என்னால் மருந்து சாப்பிட இயலாதென நான் நண்பர்களுக்குத் தெரிவித்து விட்டேன். எனினும் நோய் கடுமையானது. எனக்குத் தெரிந்த மருத்துவர் சிலரும் இவர் 'எட்டு நாட்கள் தாண்டுவது கடினம்' என்று எனக்கு கெடு குறித்தார்கள்.

அன்பர்களும் அடியவர்களும் பலர் வந்து என்னைப் பார்த்து விட்டுச் சென்றனர். காஞ்சீபுரம் தாய் மங்கையர்க்கரசி, பாலகவி சுவாமி, அருள் அன்பர் T. ஜகந்நாதகுப்தா, திருவாளர் A. வெங்கடாசலம், ஆகியவர்களும் வந்து பார்த்தனர். ஆண்டவர் அருளால் பிழைத்தால் பிழைக்கலாமே அன்றி வேறு வழி எதுவும் தெரியவில்லை என்று கலக்கத்தோடு கூறிவிட்டுச் சென்றுவிட்டனர்.

நான் ஆண்டவரை உறுதியாக நினைத்து வணங்கி என் சொந்த கிராமத்துக்குச் (சிவபுரி) சென்றேன். தினமும் மூன்று வேளைகள் தண்ணீரை ஊற்றி ஊற்றிக் குளித்து ஆண்டவர் பூஜையை அகமகிழ்வோடும் அசைக்க முடியாத நம்பிக்கையோடும் செய்தேன். எட்டு நாட்களைத் தாண்டமாட்டேன், என மருத்துவர்களால் கெடுவைக்கப்பட்ட இந்த அடிமை ஆண்டவர்நிகழ்த்திய அற்புதத்தால் சரியாகப் பதினைந்து நாட்களில் பூரண குணம் பெற்று மீண்டும் பள்ளிக்கு வந்தேன்.

எங்கள் பள்ளித் தமிழாசிரியர்கள் என்னிடம் எப்போதும் வேடிக்கையாகப் பேசி மகிழக் கூடியவர்கள். நான் நலம் பெற்றுத் திரும்பியதால் மகிழ்ச்சி

யடைந்து புலவர்கள் கோ. வில்வபதி தணிகை உலகநாதன், க. ஆறுமுகம், எஸ். முருகானந்தம் (பொன்னரசன்) ஆகியோர் என்னைப் பார்த்து "எமனை ஏமாற்றி விட்டீர்களா? என்று கேட்டார்கள். ஆம் ஆண்டவன் நிகழ்த்திய அற்புதத்தால் நான் எமனை ஏமாற்றினேன்.

கட்டடம் ஒன்று கட்டிய நிகழ்ச்சி

மயிலாப்பூரில் நான் இப்போது வாழும் இந்த இல்லத்தைக் கட்ட முயற்சித்தபோது கட்டட வேலைகளைத் தொடங்கு முன் பிரபல ஜோதிடர் ஒருவரிடம் என் ஜாதகத்தையும், என் மனைவியின் ஜாதகத்தையும் காட்டினேன். ஜாதகங்களைப் பார்த்த அந்த சோதிடர் 'உங்கள் ஜாதகப் படியும், உங்கள் மனைவியின் ஜாதகப்படியும் இன்னும் இரண்டு வருட காலத்திற்கு வீடு கட்ட வாய்ப்பு இல்லை. நீங்கள் கட்டட வேலையைத் தொடங்க முடியாது. தொடங்கினாலும் பணி நிறைவு பெறாது' என்று கூறி விட்டார்கள்.

நான் எப்படியும் கட்டடம் கட்ட வேண்டும் என எண்ணிக் கொண்டேன். அருள் வடிவான ஆண்டவரை நினைத்து வேண்டினேன் பிள்ளையார் குப்பம் ஸ்ரீலஸ்ரீதாய் அவர்களை அழைத்து வந்து பூசைகள் செய்து ஒரு செங்கல்லில் அருள் கனிந்த அன்னை அவர்களின் பொற்கமலப் பாதத்தை வைத்து ஆசி வழங்க வேண்டினேன், பிள்ளையார்குப்பம் தாய் அவர்களும் அவ்வாறு ஆசி வழங்கினார்கள். அவர்கள் மலர்ப்பாதம் பட்ட கல்லை முதற் கல்லாக வைத்துக் கட்டடப் பணியைத் தொடங்கினேன். எந்தவித இன்னலும் ஏற்படாமல், பொருளாதாரச் சிக்கலிலும் சிக்காமல். விரைவாகவும், அழகாகவும் வீட்டைக் கட்டி முடித்தேன். பிள்ளையார் குப்பம் தாய் அருளால் ஜாதகப் பலன் தோற்றது. அன்னை மூலமாக ஆண்டவர் இவ்வாறு அற்புதம் நிகழ்த்தினார்.

ஆண்டவர் அளிக்கும் அருட் குறிப்பு:—

என்றும் மீளா அடிமையாகிய அடியேன் எந்தச் செயல் செய்ய நினைத்தாலும் குருநாதர் திருஉருவத்தின் முன் நின்று, மனம் கசிந்து பூசை புரிவேன். செய்யப்போகும் செயல் பற்றியும் அஃது எவ்வாறு நடக்கும் என்பது பற்றியும், அதனை எவ்வாறு செய்து முடித்திட வேண்டும் என்பது பற்றியும், அந்தச் செயலின் முழுமையான விளைவுகள் பற்றியும் எல்லாக் குறிப்புகளும் ஆண்டவர் அருளால் என் மனத்தே தோன்றும். பின்னர் செயலைச் செய்யும் போதும் ஆண்டவர் அளித்த குறிப்புக்களின் படியே அச்செயல்கள் நிகழ்வதையும், முடிவதையும் எண்ணி எண்ணி நான் ஆண்டவர் அருளை வியக்காத நாளே இல்லை.

ஒரு செயல் செய்யக்கூடாது என்றாலும், அதுவும் ஆண்டவர் குறிப்பின் வழி எனக்குத் தோன்றும். அவ்வாறு தோன்றினால் நான் அச்செயலைச் செய்ய மாட்டேன். இவ்வாறு ஆண்டவர் என் உள்ளத்திலிருந்தே என் ஒவ்வொரு செயலுக்கும் உத்தரவு தந்து நித்தம் நித்தம் நிகழ்த்தும் அற்புதங்களை எண்ணி நான் வியப்படைந்து கொண்டே வாழ்கிறேன்.

கோடி அர்ச்சனை கொண்ட ஆண்டவர்:-

16—12—1977 அன்று என் மனைவி திருமதி. சாந்தகுமாரியின் கனவில் கோடி அர்ச்சனை நிகழ்த்துமாறு ஆண்டவர் உத்தரவு கிடைத்தது. உடனே பிள்ளையார் குப்பம் சென்று அருட்சக்தி அன்னை அவர்கள் ஆசியும் பெற்று வந்து சென்னையில் ஆண்டவருக்குக் கோடி அர்ச்சனை நடத்தினோம்.

அர்ச்சனை 16 நாட்கள் நடந்தது. அர்ச்சனையில் கலந்துகொள்ள வெளியூர்களிலிருந்தும் அன்பர் பலர் திரளாக வந்திருந்தனர், பிள்ளையார்குப்பம் தாய் அவர்கள் கோடி அர்ச்சனையை அருகில்

இருந்து நடத்தித் தந்தார்கள். அர்ச்சனை முடிந்ததும் குருநாதர் திருஉருவப் படத்தையும், விநாயக மூர்த்தியையும் அர்ச்சனை நடந்த இடமாகிய கன்னிகா பரமேஸ்வரி கோயிலைச் சேர்ந்த சேஷாசலம் அரங்கிலிருந்து எங்கள் இல்லத்திற்கு எடுத்துச் சென்றோம்.

ஸ்ரீ தாய் அவர்களும், ஏனைய அடியவர்களும் எளியேனின் இல்லத்திற்கு வந்து ஆசி வழங்கியதை என்னால் என்றும் மறக்க முடியாது. அந்தக் கோடி அர்ச்சனை விழாவிற்கு அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக ஆட்சி மொழிக் காவலர் உயர்திரு. கீ இராமலிங்கனார் அவர்களும் செயலாளராக அடியேனும் இருந்து ஆண்டவர் பணியை சிறப்புற நிறைவேற்றி முடித்தோம். எளியேனாகிய என்னையும், ஒரு பொருட்டாகக் கருதி என் வழியே கோடி அர்ச்சனை கொண்டருளிய ஆண்டவரின் அற்புதத்தை எவ்வாறு புகழ்வது?

இரெட்டியப்பட்டியில் என் மணி விழா :-

ஆண்டவரின் திருவடித்தொண்டனான அடிமையின் மணிவிழாவை இரெட்டியப் பட்டியில் நடத்துமாறு எனக்குக் குருநாதரின் குறிப்பு கிடைத்தது. அவ்வாறே என் மணிவிழா புண்ணியம் விளைந்த பூமியில், புனிதர் அவதரித்த திருமண்ணில், எண்ணம் இனிக்கும் இடத்தினில், இரெட்டியப்பட்டி தலத்தினில் மிகச் சிறப்பாக நடைபெற்றதை அறிந்து நான் வாழ்வின் பயனைப் பெற்றதாக மகிழ்வுற்றேன்.

கடைநிலைத் தொண்டனாகிய என் மணி விழாவினையும் தாம் அவதரித்த தலத்திலேயே நடத்தச் செய்து, சிறப்புற நடத்தித் தந்த ஆண்டவரின் அற்புதத்தைப் போற்றிப் புகழாமல் இருக்க முடியுமா? எளியேனின் மணிவிழாவை முன்னிட்டு "அருட்சட்ட வழிபாட்டு முறை" என்னும் நூல் ஒன்றும் பாலகவி வேங்கடராமன் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டது.

ஆண்டவரே என்றும் துணை ஆனவர்:-

ஒவ்வொரு செயலுக்கும் தோன்றாத் துணையாகி வேண்டிய உதவிகளை நல்கும் குருபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளி, அறுபது ஆண்டுகள் ஆகின்றன. சுவாமிகளின் அறுபதாவது குருபூஜை விழா இரெட்டியப்பட்டியில் மங்கலம் பொங்க மணக்கும் விழாவாக நடைபெறுவதை அறிந்து மகிழாதவர் இல்லை,

அவர் அருளாலே நாம் அவரை வணங்குகிறோம் அவர் நாள்தோறும் அற்புதங்களை நிகழ்த்தியவண்ணம் இருக்கின்றார். அவரை நம்பும் அடியவரை எத்துன்பமும் நெருங்காது. ஆதலால் குருநாதரின் புகழை, பெருமையை உலகெங்கும் பரப்புவதும், உலகில் அமைதியையும், இன்பத்தையும் நிரப்புவதும் என்றும் நம் கடமைகளாகக் கொள்வோம். ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருவடிகளே என்றும் நமக்குத் துணை.

———

நிட்டையிலே கிடைத்தபடி நித்தநித்தம் கவனம்பண்ணு;
கட்டமின்றிக் காத்திடுவார் கடவுள்ரெட்டிப் பட்டிசாமி.
(அடியார் பாடல்)

நான் கண்ட குருநாதர்

உயர்திரு K. இராமசாமி இரெட்டியார் அவர்கள், இரெட்டியப்பட்டி.

1971 ஜூன் மாதம் 15வ உயர்திரு. பாலகவி சுவாமிகள் கீழ்கவரப்பட்டில் என் வீட்டிற்கு வந்தார். ஸ்ரீ இரெட்டியப் பட்டி சுவாமிகளின் அடியார்கள் சிலர், காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு இரெட்டியப்பட்டி தலத்திற்கு பாதயாத்திரை செல்ல உள்ளதாகவும், ஒரு நாள் தங்க வேண்டும் என்றும் கூறினர். அதற்கு என் இசைவைத் தெரிவித்தேன்.

அவ்வாறே வந்தனர்; தங்கினர், அவர்கட்கு நெல்விக்குப்பம் செல்லும் வரை உணவு முதலிய வசதிகள் செய்வித்து, அனுப்பி வைத்தேன்.

பின்னர், பிள்ளையார்குப்பம் சென்று உயர்தவத்திரு. அருட்சக்தி அன்னையாரைத் தரிசித்து அருளாசிகள் பெற்றேன்.

பாத யாத்திரை சென்ற அடியார்களுக்கு திருச்சியிலிருந்து மதுரை சேரும் வரை உணவு வசதி, தங்க இட வசதி முதலியவற்றுக்கு நானே முன்னின்று ஏற்பாடு செய்தேன்; பாத யாத்திரை இரெட்டியப்பட்டியில் முடிவுற்ற நாள் தான் முதன் முதலாக இரெட்டியப் பட்டிக்கு வந்து சந்நிதியில் சுவாமி தரிசனம் செய்தேன். அபிஷேக ஆராதனை செய்வித்து மகிழ்ந்தேன்.

சுவாமிகளின் திருக்கோயிலை விரிவாக்கும் திருப்பணி நடைபெற்று 14-9-1972ல் கும்பாபிஷேகம் நடந்தது. அதற்கு என்னால் முடிந்த சிறுதொகை ரூபாய் இரண்டாயிரம் நன்கொடை ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னை அவர்களிடம் தந்தேன். 60 படி கொண்ட ஐந்து பச்சரிசி மூட்டை கும்பாபிஷேக சமயம் பயன்படுமாறு கொடுத்தேன்.

அடியார்களின் பாதயாத்திரை இரெட்டியப்பட்டி வந்து பூர்த்தியான நாளில், சுவாமிகள் சந்நிதியில் தரிசனம் செய்ததிலிருந்து ஸ்ரீ குருநாதரிடம் ஈடுபாடு கொண்டு அருட்சட்ட நெறியில் இருந்து வருகிறேன்.

ஒரு சமயம் திருநெல்வேலி ஜில்லாவில் பஞ்சம் வந்துவிட்டது. அப்போது 'திருப்பணித் திலகம்,' 'கலியுக பாரி வள்ளல்', இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அடியார் வேண்டுகோளின்படி பல அடியவர்களின் உதவியையும் ஆண்டவர் திருவருளையும் துணைகொண்டு இரெட்டியப்பட்டி சந்நிதியில், அவ்வூர் மக்களுக்கும், சுற்றுப்புற ஊர்களிலிருந்து வருபவர்க்கும் கூழ்வார்க்கும் அறச்செயல் ஒரு வருட காலம் நடந்தது.

அவ்வறப்பணிக்கு என்னால் முடிந்த சிறிய உதவியாய் 40 குவிண்டால் கேழ்வரகும், 30 குவிண்டால் நெல்லும் தந்தேன். அதனையும் அத்தூய அறச்செயலுக்கு ஏற்றுக் கொண்டார்கள்.

1974 நவம்பர் 15ஆம் தேதியிலிருந்து இரெட்டியப்பட்டியிலேயே தங்கி, ஸ்ரீ குருநாதருக்கு சாயங்கால பூஜைக்கு வேண்டியதைக் கொடுத்து நடத்திக் கொண்டு, அபிஷேக ஆராதனை செய்து கொண்டு வருகிறேன்.

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் சிறந்த அடியாரும், தர்மசீலருமான—திரு

விசநல்லூர் உயர்திரு. G. சரவணப்பிள்ளை சுவாமிகள், ஸ்ரீகுருநாதரைச் சேவிக்க இரெட்டியப்பட்டிக்கு வரும் அடியார்களின் வசதிக்காக அமைத்துள்ள பெரிய தர்மசத்திரத்தில் இருந்து கொண்டு, சுவாமி தரிசனத்துக்காக இரெட்டியப்பட்டித் திருத்தலத்திற்கு வரும் அடியவர் அன்பர்களுக்கு இயன்ற அளவு அன்ன தானம் செய்து வருகிறேன்.

என்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஸ்ரீ குருபெருமானுக்கே அர்ப்பணம் செய்து அவர் அருளால் வாழ்ந்து வருகிறேன்.

ஸ்ரீகுருநாதர் சந்நிதியில் சாயங்கால பூஜையும், சுவாமி தரிசனத்துக்கு வரும் அடியவர்களுக்கு அன்னதானமும் நிரந்தரமாக என்றும் நடத்தி வர, ஸ்ரீராம் அவருடைய மனைவி சாந்தி ஆகிய இருவரையும் ஏற்பாடு செய்துள்ளேன்.

குருநாதர் எவ்வளவோ பெருமை உடையவர். அவர் பெருமையை முழுதும் நான் கண்டதில்லை. இந்த அளவு பணிக்கு என்னை ஆளாக்கியுள்ளார். இதனை என் வாழ்நாளிற் கிடைத்த பெரும் பாக்கியம் எனக் கருதுகின்றேன் இவ்வளவே நான் கண்ட குருநாதர்.

அவர் பணிகளைத் தொடர்ந்து செய்யவும், அவர் பெருமைகளை மேலும் உணரவும், அவர் திருவருளில் தோய்ந்து இன்புறவும் அவர் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சற்குருநாதர் நவமணி மாலை

பூதலத் துளவுயிர்கள் எல்லாமும் உயர்நலம்
பூண்டுநனி பொலியும் வண்ணம்
பொன்னைநிகர் நெல்லைமா வட்டத்தில் நாகலா
புரநகர் கிழக்கில் மேவும்
ஓதரிய சீர்சால் இரெட்டியப் பட்டியில்
உதித்திலகு ஞான மணியே
ஓங்கார கணபதியின் மீதுமலர் பலதூவி
உயர்வானை நோக்கி நின்றே
கோதறத் தொழுதமணி யே!நிலத் தினில்உழுது
குறைவில்நிறை விளைவ ளித்தே
குவலயம் புகழவொளிர் மணியேபல் வறிஞரின்
குறைநீக்கு குலவி ளக்கே
சாதனத் திற்குரிய மாமதுரை நகரினில்
தகுகணக் குப்பிள்ளை யாய்
தண்வைகை நீராடி யதிகாலை நிட்டைபுரி
தக்ககோ **மேத மணியே.** 1

ஒருநாளில் அதிகாலை தண்வைகை தென்கரையில்
ஒருஜோதி யின்கண்முன் னேன்
உருக்கண்டு தழுவிப் பரானந்த மெய்துகையில்
ஓங்கார கணநா தனின்
உருதூய சிலையாக அருகில்வேம் போடுதிகழ்
ஓரரசு கீழ் அமர்த்தி
ஒப்பில்மகிழ் வோடுபரி பூரணப் பெயர்சூட்டி
உயர்வைகை நீர்கொ டாட்டி
அருள்ஞான மறைபாடி மலர்சாத்தி அன்பர்திரள்
அரகர எனப் போற்றிட
அற்புதம் பற்பல புரிந்தவனி வாழுயிர்கள்
அஞர்தீர்த்து நலம்வ ழங்கி
பொருளையுணர் மெய்த்தவம் புரியமோ னத்தினிற்
பொலிதூய ஞான மணியே
போகமெய்ப் போதமெல் லாவுயிர்க் கும்தரப்
போந்தசெம் பவள மணியே. 2

பூரண எழில்மிக்க குற்றால மலையிற்
புலன்களை யெலாம் ஒடுக்கிப்
புத்தேளிர் முனிவர்குழு போற்றமுந் நான்காண்டு
புனிதமெய்த் தவம் இயற்றிப்
பூரணமு னேன்விஸ்வ ரூபத்தி னைக்கண்டு
பூரணநன் னிலைய டைந்தே
புவனிவா ழுயிரெலாம் இம்மையினில் நல்வாழ்வு
புரியஉயர் முத்தி யெய்தப்
பூரண னிடம்சட்ட நெறிபெற்று சட்டநெறி
புவியினிற் வேணு வோரைப்
பொலிவுறக் காத்தருள்வ தாயுறுதி மொழிபெற்ற
பொருவிலருள் ஞான குருவே
பூரணமு னேன்கருணை யுருவமே! புவியின்மிசை
பொலிகற்ப கத்தி னுருவே!
புகலரிய நினைவரிய துணையென்ன அடியர்குழு
போற்று மாணிக்க மணியே. 3

அதிகாலை தண்ணீரி லாடிதண் ணீரிலே
அருள்நீறு துளசி யிட்ட
அற்புதத் தீர்த்தமும் அருந்திவழி பாடாற்றி
அருள்ஞான நிட்டை பேணி
விதியின்வலி யால்வினையின் விளைவினால் நோயுறின்
விளங்குதிரு வருள்துணை கொடே
விடியுமுனும் மாலையிலும் தண்ணீரி னில்மூழ்கி
விழுமியநன் னீறுபூசித்
துதிபாடி இறைவனருள் நாமமன னம்செய்து
தூயதீர்த் தமும் அருந்தி
சூழ்பிணி மருந்தின்றி நீக்கிபுலை கொலைகளவு
சூதுமது பொய்மை நீக்கி
அதிவிருப் புடன்வெள்ளி விரதத்தி னைப்பேணி
அனுதினமும் நிட்டை செய்தே
அவனிமிசை யருள்வாழ்வு வாழ்ந்துமுத் தியைஎய்த
அருள்புட்ப ராக மணியே.

4

மெய்ப்பொருளை மூப்பக் கவுண்டலு வுணர்ந்துய்ய
மிகுகருணை புரியு மணியே
விழுமிய தவம்பிள்ளை யார்குப்ப நகரன்னை
மேதினியி லாற்ற உய்த்துச்
சொற்பத மெலாம்கடந் திலகுதுரி யாதீத
ஜோதியுட னென்றி யினிதே
துலங்கஅருள் புரியு மோனகார மணியே
துயர்தீர்ந்து சுகமெய் தியே

இப்புவனி வாழ்அடியர் அன்பரெல் லாமுய்ய
இன்னருளி ஞல்நோய் களை
எண்ணற்ற சிக்கலை யெலாம்தீர்த்து நலமெலாம்
இனிதெய்த அருள் புரிந்தே
செப்பும் ஆடிப்பூர நாளினிற் கோயிலுள்
திகழ்வித்த தெய்வ மணியே
திருவருளின் ஒளியெண்ணி லுலகெலாம் மேவ உயர்
செம்பொருள் விளக்கும் முத்தே. 5

திருமிக்க சாத்தனூர் முத்துராமப் பெயர்கொள்
செம்மலுக் கருள் புரிந்தே
செப்பரிய நிஷ்டானு பூதிநல மிகநல்கு
தேசிக சிகாரத் னமே
குருபக்தி மிக்கநர சிம்மவேள் தூயபணி
கொண்டருட் சட்ட நெறியைக்
குவலய மெலாம்பரப் பச்செய்து நன்முத்தி
கூட்டியருள் புரியு மணியே
பொருள்மிக்க செட்டிநாட் டில்சோழன் மாளிகையில்
புண்யமிகு வேளூ ரினில்
பொற்புசால் அடியார்கள் வாழ்வாற்று பதிகளிற்
போய்கருணை புரியண் ணலே
அருவெனவும் உருவெனவும் அன்பெனவும் அமுதெனவும்
ஆனந்த நிட்டை யெனவும்
அருள்மழையி னைப்பொழியும் முகிலாகி அடியருளம்
அமர்தூய நீலமணியே. 6

பருதிபல கோடிநிகர் மெய்ஞ்ஞான வொளியைப்
பரப்பியொளிர் பரமாத் மனே
பார்தொழக் கோயில்கொ டமர்ந்தபினர் முன்னிலும்
பன்மடங் கருளி னேடும்
பருவபக்கு வம்நல்கி யடியரைப் பேணியும்
பலரையருள் நெறியி லீர்த்தும்
பண்பொடு புரக்குநின் கருணைச் சிறப்பினைப்
பகரவென் னலிய லுமோ?
திருவிடைநன் மருதூரில் சாமிநா தப்பெயர்கொள்
சீரடியர் உள்ளம் மேவிச்
செம்மைமிகும் அருளாடல் பற்பல இயற்றியருள்
செய்துவீ டருளும் மணியே
மருவுபுகழ் கோவைநகர் முத்துசா மிக்கருள்
வழங்கிஉய ரற்பு தங்கள்
மகிமிசை யியற்றிநின் மகிமையுண ரச்செய்த
மாட்சிசால் வைடூர் யமே. (7)

செய்யதிரு வியலூரில் சரவணக் குரிசிலுள்
சேர்ந்துபல் அறச்செயல் களைச்
செய்வித்து நிட்டையி லுயர்த்திநல் அனுபவச்
செம்மைநிறை விக்கு மணியே
துய்யநற் சாம்பசிவ வேள்சட்ட நெறியில்
துலங்கிடப் புரியு மணியே
சொல்லரிய பலதிருப் பணிகள்புரி வித்தருள்
சுரந்தினிது பேணும் மணியே
வையகத் துன்சீரி னைச்சட்ட நெறியினை
வளம்பெற விளக்கி யருளும்
மாண்புசால் நன்னூல்கள் வெளிவர அருள்புரியும்
மன்னனே அடிய ருள்ளார்
மையலை யகற்றியரு ளொளிபாய்ச்சி அருளமுதம்
மல்கிட அருள் புரிந்து
மன்னுபே ரின்பநல மினிதருளி நன்றேம்பு
வைரமணி யான பதியே. (8)

தூயபதி பசுபாச இயல்பினை விளக்கிநற்
றுறைகாட்டு சைவத் தையும்
சொல்செய்கை மனமிறைக் கர்ப்பித்து வாழும்வழி
சொல்வைண வப்பண் பையும்
மேயவறி ஞர்க்குதவல் வாணிபம் தொழிலெலாம்
மெய்ம்மை தவறு தியற்றல்
வேளைதோ றும்தொழுகை விரதமா தியஇஸ்லா
மியமதக் கொள்கை யினையும்
ஏயநற் பொறுமைமன் னிப்பன்(பு) எலாச்செயலும்
இறைவனுக் கொப்பு வித்தல்
எனும்கிறித் துவமதக் கொள்கையையும் இனிதே
இணைத்தருட் சட்ட மாக்கி
நேயமொ டுயிர்க்கெலாம் பொதுநெறி யெனத்தந்து
நிகரில் துணையாய் அமைந்தே
நிதமுமுள் ளும்புறமு மோம்பியருள் நித்தனே
நீளொளிப் பச்சை மணியே. (9)

———

கேட்டபொரு ளைக்கொடுப்பார் கிரமமாக நீயிருந்தால்
காட்டவேண் டாம்வெளியில், கடவுளும் துணையிருப்பார்.

(அடியார் பாடல்)

கருணைமிகு வள்ளல்

(அருள்நிறை சரிதத்தில் ஒரு பகுதி)

குருநாதராகிய சுவாமிகள் உலகம் உய்ய அருட்சட்டம் வகுத்து வழங்கினர். ஊர் ஊராக நேரிற் சென்று அடியார் களைத் தேர்ந்தெடுத்து சட்ட நெறியை அருளி ஆட்கொண்டார். அடியார்கள் உள்ள இடங்களுக்கு அவ்வப்போது சென்று, ஊக்க மூட்டி, உயர் நிலைக்கு உய்த்து அருள் பாலிப்பது வழக்கம்.

அவ்வாறு ஒரு முறை சுவாமிகள் திண்டிவனம் சென்றனர். சுவாமிகளின் வருகையை உணர்ந்த வெள்ளிமேடு பேட்டை வைரவபுரம், தணியல் முதலிய சுற்றப்புற ஊர்களில் உள்ள அடியவர் களும் சுவாமிகளைத் தரிசித்து, தாம் சட்ட அனுட்டானம் மூலம் பெற்ற அநுபவங்களைக் கூறவும், ஐயங்களை நீக்கிக் கொள்ளவும் கருதி, வந்து சேர்ந்தனர்.

இதமோடு அருள் புரியும் குருபெரு மானை இனிக்காண்போமோ என எண்ணிய மரங்கள் மலர்களைச் சொரிந் தும், கனிந்த கனிகளைத் தாங்கியும் நறு மணம் பரப்பின.

வானத்தில் முகிலினம் சூழ்ந்து. முத்திப் பேறருளும் முதல்வனுரின் களைப் பினை நீக்கின. கனிந்த மனமுடை அடியவர்கள் இருபாலும் நின்று விசிறி கொண்டு வீச, சுவாமிகள் கருணைப் பொலிவோடும் விநாயகர் கோயிலில் அமர்ந்து திகழ்ந்தனர், அன்பு வழிபாடு முடிந்தபின் பொதுமக்கள் தமதில்லம் சேர்ந்தனர்.

சுவாமிகளின் திருமுகத்தில் தெய் விகப் பேரொளி மிகுந்து விளங்கியது. நனி கனிந்த பெருந் தவமே அதற்குக் காரணம் என எண்ணியவண்ணம் ஒரு சில முக்கிய அடியார்கள் புண்ணிய அண்ணலைச் சுற்றிலும் சூழ்ந்து அமர்ந் திருந்தனர். அடியார்கள் இனி நடந்து கொள்ள வேண்டிய நன்முறைகளைப் பற்றி அண்ணலார் இயம்பலாயினர்.

அப்போது வைரவபுரம் வைத்திய நாத முதலியார் என்னும் அடியவர் எழுந்து கையிரண்டும் குவித்து நின்று, குருபரனுர் அருகிருந்தால் எங்களுக்கு அச்சம் அணுவளவும் தோன்றுவதில்லை. தொலைவில் உள்ளபோது சற்று சஞ்சலம் தோன்றுகின்றது. இதனைத் தவிர்த் தருள வேண்டும் என அண்ணலிடம் விண்ணப்பித்தனர்.

அருளண்ணல் புன்முறுவல் பூத்த வண்ணம் அருள்வாராயினர். பறவைக் குஞ்சு இரு சிறகை விரித்துப் பறக்கத் தெரிந்துகொள்ளும் வரை தாய்ப்பறவை உடனிருக்கும். பின்னர் குஞ்சு தானே பறக்க இனிது முயலும். அஃதேபோல் திடபக்தியும், வைராக்கியமும் இருப்பின் எல்லாப் பேறும் எய்தற்காகும்.

இரவு பகல் நமக்கு ஈசன் துணையன்றி வேறில்லை என அறிதல் வேண்டும். கபடற்ற அருள் நெறியில் நடக்கக் கள்ள மனத்தினுக்குப் போதித்தல் வேண்டும். அருட்சட்டத்தின்படி நித்திய கர்மங்களை நன்ருக முறைப்படி புரிதல் வேண்டும். பரமனின் திருவடி மலர்கள் மனத்தில் பதியும்படி தவ நிட்டை பழக வேண்டும்.

அதிகாலை தண்ணீரில் மூழ்கி விட்டால் மட்டும் பூரண அருட்பயன் எய்த இயலுமா? துதிபாடி, திருநீறு தீர்த்தம்

அருந்திடில் போதும் என்று சொல்ல லாகாது. பிறவிப் பிணி தீர்ந்து நற்கதி பெற வேண்டுமென்ருல், மிக்க உறுதி யுடன் மெய்ப் பொருளைப் பெற்ற தவ சீலர்களின் துணை நாடிச் சார்தல் வேண்டும்.

கள்ள மனக் கசடறுத்து, நமதுள்ளம் கொள்ளை கொண்டு நம்முள் மறைந் திருக்கும் கள்வனுகிய இறைவனைக் காண வேண்டும். அணுவளவு பற்றுமின்றி முழுவதும் இறைவனிடம் ஒப்படைத்தல் வேண்டும். வெள்ளம் வரும்போது அணை போட முடியாது. மரணம் வரும்போது அதனைத் தடுக்க இயலாது. முன்பே முயன்று பேரருள் பெற வேண்டும்.

சாமி சொல்லும் கருத்துக்களை உள்ளத்துட் கொள்ள வேண்டும் பூமியில் பிறந்து விட்டோம். கரையேறுதற்குப் புனிதம் பெறவேண்டும் 'ஓம்' என்னும் மந்திரத்தை உச்சரித்து உள்ளே நாடி உண்மையொளி காண வேண்டும். நேம மிக்க தவமுயற்சி நிஷ்டானு பூதியை நல்கும்.

மோட்சம் அடைய விருப்பம் உண் டாகும். ஆனுல் கர்மம் தொடர்ந்து வந்து தடை புரியும். இதுவே சூக்ஷமம். இதனை உணர்ந்து துன்பம் இன்பம் இரண் டையும் சமமாகக் கருதிச் சகித்துக் கொள்ள வேண்டும். வந்தது அனைத்தும் இறைவன் தந்தது எனக் கருதி ஒப்புக் கொள்ள வேண்டும் இப்படி நடந்தால், பல அருட்காட்சிகள் தோன்றும். மும்மலம் கரைந்து நீங்கும். அருட்குருவின் திருவடி நாடின் தெளிவுமிகும் அருள் உண்டாகும்

உட்கரணங்கள் ஒடுங்க வேண்டும். எதையும் காதால் கேட்கலாம். நடை முறையில் எய்துவதற்குத் தாமதம் உண் டாகும். ஆசையை மனத்தினின்று படிப் படியாக விலக்குவதற்கு வழியொன்று உண்டு. தகவு சான்ற நல்லடியார்க ளோடிருப்பின், மனமாசு நீங்கும் என்று அருளினுர் சுவாமிகள்.

அடியார் என்பவர் யார்?

அடியார் என்பவர் யார்? எத்தகைய குணம் உடையோர் என்ற ஐயம் பலர்க்கு இருக்கலாம் அல்லவா? ஆதலால் பண்பு சான்ற அடியார்களின் தகுதியைக் கூறு கின்ருேம்; கேளுங்கள் எனச் சுவாமிகள் கூறலாயினர்.

வினையைப் பெருக்கும் வெளிச் செயல்களை ஒடுக்கிக் கொண்டு, உள் நாட்டம் மிகுந்து, தன்னைத் தேடி தனக் குரிய தலைவனைத் தேடும் நாட்டம் கொள்ள வேண்டும். முன்செய்தவப் பயனுல் ஆருதாரம் கடந்து, மோன நிலையெய்தி ஞானக்கண் பெற்ருல், எல்லா உயிர்களையும் இறைவனுகக் காணும் நிலை வாய்க்கும். இதுவே மேல்நிலையில் முதற் படியாகும்.

இதனைப் பெற்றவன், உலகப் பற்று அணுவுமின்றி ஞான உலகின் நாட்டம் மிகுந்தவனுய்த் தோன்றுவான். அதற்கு மேல் ஞானகுருவின் துணையால் துவாத சாந்த வெளியை அடைவான். மேனியில் சலனமின்றி, கரணமெல்லாம் செய லழிந்து, மெய்யன்பு மயமாவான்.

அனைவரின் துயரத்தையும் துடைக்க வல்ல அருள்ஞானியாய்த் திகழ்வான். எனினும் இது முத்திநிலையன்று, பிறர் துன்பமெல்லாம் போக்கும் புனிதனுகிய இவனே சில நேரங்களில் துன்புற்று அழுவான்; சிரிப்பான்; ஏன் சிரிக்கிருேம்? ஏன் அழுகிருேம் என அறியா நிலையில் இருப்பான்.

பரம் பொருளின் கருணையை வியந்து சிரிப்பான்; பரன்அருட்குப் பரிபூர்ண மாய்ப் பாத்ரமாகவில்லையே என பரிவுற்று அழுவான். பாரில் உற்ருர் உரியர். வேண்டியவர், வேண்டாதார் என்ற ஏதும் அவனுக்கில்லை. உடையோனே எல்லாம், பரிபூர்ணம் பெற்றிடத். 'தான்' என்ற ஒரு நினைப்புமில்லாப் பாங்கில் நிற்பான்.

இறைவனை நன்கு எண்ணும் ஏக்கம், அவனை அடைய விருப்பம், மேலான அவன் அருட்குப் பாத்திரனாயிடல் வேண்டும் எனும் சிறந்த பக்தி, தன்னை அவன் ஏற்பானோ என்னும் கவலை, என இப்படி மாறி மாறி அவன் பலவாறாய் எண்ணிக் கொண்டிருப்பான். அவன் தன்மையை அறிவார் யார்?

இறைவனின் கருணைத்தன்மை, இறைவனின் பேரருள் மணம் இவை இவன்பால் மேவும் இறைவனின் அருட் கருணையொளியும், இறைவனின் பேரின்ப மணமும் இவன்பால் மேவும் இவன் பரி பூர்ணம் பெறற்கு இன்னும் சாதனம் தேவையாதலால், சித்திகளில் மயங்காமல் இறைவன் திருவடித்யானத்தில் ஒன்றி யிருத்தல் வேண்டும்.

உலக இன்பங்களால் இழுபடாமல்' நிலையின்றியோடும் மன வேகத்துக்குள் ளாகாமல், அருள் மயமான மூலமந் திரத்தை உலைவற நினைந்து, அதனோ டொன்றி, ஒப்புயர்வற்ற திருவடி மலரையே நாடியிருப்பின், முத்திநிலை, தானே கை கூடும். இவ்விலக்கணங்கள் உள்ளோன் அடியானாவன் என்று அண்ணலார் அருளினர்.

அது கேட்ட அடியார்கள் ஒருவருக் கொருவர் பார்த்துக் கொண்டனர். இதுகாறும் நாமே அடியார் என எண்ணிக் கொண்டிருந்தோம். நாள்தோறும் அதி காலை நீராடி இறைவன் திருக்கோயில் வலம் வந்தால் சட்ட அடியார் ஆய்விட்டோம் என உன்னி வந்தோம்.

அடியான் என்று ஏற்றுக் கொள்ளல் அண்ணல் திருவுளம் இருந்தாலன்றி நம்மால் இயல்வதுவோ? என்று பல வாறாகப் பேசிக் கொண்டனர். அடைவதற்கு மிக அரிதான இத்தகைய உயர் நிலையை நம்மால் எவ்வாறு அடைவதற்கு முடியும் என மனம் தளர்ந் தனர். அது கண்ட அண்ணல் நவில்வா ராயினர்.

அணுவளவும் தயக்கமுற வேண்டிய தில்லை. தக்க வகையில் நாம் முயற்சி செய்தால் முடியாதது ஒன்று உளதோ? முயற்சி திருவினை ஆக்கும். நாம் அயர்ச்சி யின்றிப் பாடு பட்டால் அரும் பயன் காணலாகும். அடியார்கள் வேலை செய்தற் கேற்ற கூலி உடையவன் கொடுப்பான்; சிறிதும் தளராதீர் என்று கூறியருளினார்.

நிலையான பரத்தினை நாடி நெறி முறையை மறவாமல் நாளும் பேணி, உலைவில் பரம்பொருளோடும் உறவாடி உயர் நிலையை எய்தி உய்வீராக! கண்ணப்பநாயனார் திட பக்தி கொண்டு போற்றி, நிலையான முத்திப்பேற்றை ஆறே நாளில் அடைந்ததை உள்ளத்துட் கொள்வீர் என்றனர்.

சாதனம் உள்ளோர்க்கு இறைவன் அருள்தந்த சாட்சி பற்பல உண்டு. நூதனமாய்ச் சிந்தித்துத் தளர வேண்டாம். நோன்மை தவறாது பேணி அருட்பெருந் திருவைப் பெற்றுய்யுங்கள். சட்ட அடியார்க்கெல்லாம் ஆதரவாய் இறைவன் திருவருள் உடனிருக்கும் என்று ஆசி தந்தருளினர் சுவாமிகள்.

அருளடியவர் முகம் கதிரொளி கண்ட கமலம் போல மலர, அனைவரும் குருபரரின் பெருங்கருணையினை நினைந்து கூறரிய பெருமகிழ்வுற்று இரெட்டியப் பட்டி சுவாமிகளுக் கரோஹரா என்று பேரொலி முழக்கி, எங்களை இனிய அடியவராக்கிடுவீர் என்று உளமுருகிப் போற்றினர்.

———

வாழ்த்து

சீரார்ந்த மதுரைநகர்ப் பரிபூர்ண
கணநாதர் திருத்தாள் வாழ்க!
ஏரார்ந்த இருடிநகர்க் குருபரனர்
இனியமலர்ப் பதங்கள் வாழ்க
பாரார்ந்த அருட்சட்டம் பேணியருட்
பயனடையும் அடியார் வாழ்க!
காரார்ந்த மழைபொழிக! காசினியில்
உயிர்களெலாம் களித்து வாழ்க!

மங்களம்

மங்களம்ஜெய மங்களம்சுப
மங்களம் நித்ய மங்களம்
மங்களம்மது ராபுரிப்பரி
பூர்ண மூர்த்திக்கு மங்களம்
மங்களம்குரு நாதர்ரெட்டியப்
பட்டி சுவாமிக்கு மங்களம்
மங்களம்அருட் சட்டநன்னெறி
பேணடி யர்க்கு மங்களம்
மங்களம்வைய கத்தில்வாழும் எல்
லாவுயிர் கட்கும் மங்களம்
மங்களம்ஜெய மங்களம்சுப
மங்களம் நித்ய மங்களம்.

அன்புவழி காட்டும் அருளுபதேசங்கள்

குருபெருமானுகிய இரெட்டியப்பட்டி சுவாமிகள், அடியவர் அன்பர்களின் உள்ளத்தைப் பக்குவப்படுத்துவதற்கான அருளுரைகளைப் பல சிறந்த அருட்பாடல் களாகத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

பொன்னுன அப்பாடல்களில் பொறிக்கப் பெற்றுள்ள மணி போன்ற கருத்து களில், அறுபது உபதேசங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்குரிய விளக்கங்களுடன் சுவாமிகளின் குரு பூஜை மணிவிழாவில் வெளியிடப் பெறுகிறது.
டெம்மி அளவு - 120 பக்கங்கள் கொண்ட அருள் நூல் விலை ரூ. 8-00

(அஞ்சல் செலவு தனி)
சற்குருதாசன் டிரஸ்டுக்கு எழுதவும்,

அருள்நெறி மாலை

புலவர்களும் பக்தர்களும் சுவைத்துப் படித்துப் பாடித் துதித்து குருபெருமான் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் திருவருள் பெற்றுய்ய அருள் மயமாய் அமைந் துள்ள தோத்திரங்கள், விருத்தப்பாக்கள், பண்வகைகள், கீர்த்தனைகள், கண்ணிகள், நாமாவளிகள் முதலியன கொண்ட அருள்நூல் விலை ரூ. 5—00

(அஞ்சல் செலவு தனி)
சற்குருதாசன் டிரஸ்டுக்கு எழுதவும்.

கருணைமிகு வள்ளல் அருள்நிறை சரிதம்

உயிர்கள் உய்ய 'அருட்சட்டம்' வகுத்து வழங்கி அரும்பெருந் துணையாய் இருந்து, இம்மை மறுமை நலங்கள் வழங்கி அருளாட்சி புரிந்து வரும் ஸ்ரீ இரெட்டியப் பட்டி சுவாமிகளின் அருள் வரலாறும், அருட்சட்ட நெறியின் விளக்கமும், சில சிறந்த அடியார்களின் வாழ்க்கைக் குறிப்புகளும் எளிய, இனிய, செம்பாகமான 4672 செய்யுட்களால் அமைந்த அருள் நூல். (டெம்மி அளவில்) 1116 பக்கங்களும், அழகிய 18 வண்ணப்படங்களும் கொண்டது.

முதற்பதிப்பு விலை—ரூ. 60-00
படிக்க இனிக்கும் உரைநடையுடன் கூடிய இரண்டாம் பதிப்பு ரூ 75-00
(அஞ்சல் செலவு தனி)
சற்குருதாசன் டிரஸ்டுக்கு எழுதவும்.

சமயப் பொதுநெறி கண்ட சற்குருநாதர்

குருபெருமான் இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருள் வரலாறும் உலகம் உய்ய அவர்கள் அருளியுள்ள 'சட்டம்' எனும் அருள்நெறி பற்றிய விளக்கமும். சில சிறந்த அடியார்களின் அருள் வாழ்க்கைக் குறிப்புகளும் தேனென இனிக்கும் உரை நடையில் எழுதப் பெற்றுள்ள அருள்நூல். டெம்மி அளவு 86 பக்கங்கள் கொண்டது.

விலை. ரூ 6—00
(அஞ்சல் செலவு தனி)
சற்குருதாசன் டிரஸ்டுக்கு எழுதவும்.